Registered as a News Paper in Sri Lanka

පක්කම් 20

දිනමුරසු වාරමලර්

டிச.12-18,1999

ரூபா 12/00

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 336



## தேர்தல் போர்க்களம் வாள் வீச்சா? வாய் வீச்சா?



## மாவீரர் வாரச் செய்தி நிராகரிக்கப்பட முடியாத



## 'இளைஞர்களுக்குப் பொறுமை இல்லை...'

— ரம்பா —

## விஜயகாந்தின் புதிய திட்டம்

அறிவு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

# முரசம்

## மக்கள் பேராதரவுக்கு நன்றி!

**அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.**

மீண்டும்
வெளிவந்துவிட்டது
முரசு.

யாவரும் அறிந்தாற்போல்
நிகழ்ந்த ஒரு
பேரதிர்ச்சி
முரசை
நிரந்தர மௌனத்தில்
ஆழ்த்திவிடுமென
சிலர் நினைத்தார்கள்.
சிலர் விரும்பினார்கள்
பலர் கவலைப்பட்டார்கள்.

தமிழ் பேசும் மக்களில்
ஆண், பெண்
சிறியோர் பெரியோர்
என்ற வித்தியாசமின்றி
எல்லோராலும் விரும்பிப்
படிக்கப்பட்ட-
ஏன்,

அதற்கு
எதிர்க் கருத்து உள்ளவர்களாலேயே
தேடிப் படிக்கப்பட்ட
அதிகூடிய விற்பனை கொண்ட
தமிழ் வாரப் பத்திரிகை
முரசுதான்.

முரசுக்கு மாற்றாக
வேறெந்தப் பத்திரிகையும்
தலைவிட முடியவில்லை.
எத்திப் பார்த்த
எத்தனையோ எத்தனங்களும்
கை கூடவில்லை.

அதன் நிமிர்ந்த நடைக்கும்
நேர்கொண்ட பார்வைக்கும்
முன்னால்- அவை
சூரியனைக் கண்டதும்
மறையும் பனித்துளிபோல்
விலகி ஓடின
அல்லது 'இருளில்' மட்டுமே
வெளிப்பட்டன.

ஆனாலும் நாம்
யார்க்கும் எதிரியல்லோம்
அதே வேளை
யாமார்க்கும் குடியல்லோம்
அத்தோடு
யமனையும் அஞ்சோம்.

யமன்,
முரசை நோக்கி
எறிந்த 'பாசக் கயிறு'
தனியொரு உடம்பிலிருந்து
உயிர் பறிக்கும்
முயற்சியாய் இருக்கவில்லை.

மக்களிடமிருந்து
கருத்தைப்பிரிக்கும்
கயமைத் தனத்துடன்
எறியப்பட்ட
'துவேஷக் கயிறாகவே'
இருந்தது.

ஈற்றில் அதற்கு
ஆன்மா அகப்படவில்லை.
வெறும் உடம்புதான்
எட்டியது.

ஆன்மா எங்கே?
அது இன்னோர் வடிவத்தில்
மீண்டும் தினமுரசுக்குள்
புகுந்து கொண்டு
மக்களுக்காகப்
பேசுகிறது.

ஆம்!
தினமுரசு
சொற்ப ஓய்வுடன்
தன்னைச் சுதாகரித்துக்கொண்டு
மீண்டும் அதே குரலில்
ஒலிக்கிறது.

அதே வேகத்தில்
அதே சுவையில்
அதே கம்பீரத்துடன்
ஜொலிக்கிறது.

சூடு, சுவை,
சுவாரசியம் என்ற
அதன் தாரக மந்திரம்
என்றென்றும் அதன்
அடி நாதமாய்
இயங்கும்.

முரசோடு இணைந்துவிட்ட- இம்
மக்கள் பேரபிமானத்தை
எவராலும் பிரிக்க முடியாதென்பதை
சற்றுத் தேக்கத்தின் பின்
வெளிவந்த சென்ற இதழின்
அமோக விற்பனை
ஐயந்திரிபற
எடுத்துக் காட்டுகிறது.

முரசுக்கு நேர்ந்த
துர்ப்பாக்கிய நிலையால்
பின்னடைவு ஏதும்
ஏற்பட்டு விடுமோ எனக்
கலங்கிய மக்கள்
பாய்ந்து வந்து தந்த
இந்தப் பேராதரவுக்கு
நாம் தலை வணங்குகிறோம்.

முரசு
தனது முன்னூறாவது இதழின்
முரசத்தில் மொழிந்ததுபோல்

அது யாருக்கும்
ஆதரவானதுமல்ல
எதிரானதுமல்ல
உண்மையுடனும் நேர்மையுடனும்
அதன் பணி தொடரும்
என்று கூறிக் கொண்டு,

புத்தாயிரமாம் ஆண்டில்
கால்வைக்கப்போகும்
இத் தருணத்தில்
முரசும்
வாசகர்களுக்கென
புதிய பல
அம்சங்களைத் தரத்
தயாராகி வருகிறது.

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்பீடம்

# ஆன்மீகம்



## தெய்வ நம்பிக்கை

"தெய்வ நம்பிக்கை என்ற ஜீவசத்தை இழந்தோமானால் அப்புறம் சைத்தானுக்குத்தான் வெற்றி" எல்லா கெட்ட சக்திகளும் மனித இனத்தை ஆட்கொண்டு விடும்". என்று மேல் நாட்டு அறிஞர் ஒருவர் சொல்லி இருக்கிறார்.

முன்னேற்ற மாளிகை தனக்கு அஸ்திவாரமாக தெய்வ நம்பிக்கையையே வற்புறுத்துகிறது. அறிவு விசாரணையாலோ, பரிசோதனையாலோ, வாதங்களாலோ ஆண்டவனை நாம் அடைய முடியாது. ஏனென்றால் அவன் நம்முடைய புத்தி, புலன்களின் நிருபணத்துக்கு அப்பாற்பட்ட புதிரானவன். வாத விசாரணைகளால் பெற முடியாதவனென்றாலும் மனிதனுக்கு ஆண்டவன் அவசியமாக தேவைப் படுகிறான். கண்ணால் காண முடியாவிட்டாலும் காற்று எப்படி மனிதனுக்கு வேண்டியிருக்கிறதோ, அப்படியே ஆண்டவனும் வேண்டி இருக்கிறான்.

அவன் இல்லையேல் நாம் தனி வாழ்வு, தேச வாழ்வு இரண்டிலும் தோற்று நிற்போம் நாகரீக சமுதாயத்திற்கு அஸ்திவாரம் அவனே. அவனை தள்ளினால் சமுதாய நாகரீகத்தையே தள்ளியவர்களாவோம். நாகரீக வாழ்க்கைக்கு ஆதாரம் உலகாயதமான பொருளாதார முன்னேற்றம் அல்ல. ஆன்ம அபிவிருத்திக்கான முயற்சியையும், ஒவ்வொருவரும் தம்மைத் தாமே கட்டுப்படுத்திக் கொள்வதையும், எல்லாரும் பொய்யில்லாமல் கூடி ஒத்துழைப்பதையும் ஆதாரமாகக் கொண்டே நாகரிக வாழ்க்கை நிற்கிறது. இந்தப் பண்புகள் யாவும் ஒரு மஹா சக்தியிடம் வைக்கும் நம்பிக்கையையே ஆதாரமாகச் சார்ந்து நிற்கின்றன.

அணுவைப் பிளந்துவிட்டோம் என்பதால் ஆண்டவன் தேவையில்லை என்றாகிவிடமாட்டான். பிளந்த அணு அவனாக முடியாது. அது அழிவுக்குத்தான் அழைத்துப் போகும். அணுவுக்கும் அணுவானவன் எவனோ, அகிலாண்டங்களையும் விடப் பெரியவன் எவனோ, அவனை, எல்லா ஸயன்சுகளுக்கும் (விஞ்ஞானம்) பின்னே புதிராக நிற்கிற ஆண்டவனை நம் இதயத்தில் வைத்துக் கொண்டாலே விஞ்ஞானம் நமக்கு துணை செய்யும்.

தொகுப்பு: கொஸ்லந்தை, எஸ்.என்.ராஜரட்ணம்.

## எளிமையே ஈமானின் சின்னம்

அழகு, ஆடம்பரத்தின் பக்கம் கவனம் செலுத்தாது, எளிமையை, ஏழ்மை நிலையை ஏற்றுக் கொள்ளும் பண்பு உண்மை முஃமீனின் தன்மையாகும்! இதுவே பண்பும் பழக்கமுமாகும்.

"நான் கூறுவதை நீங்கள் செவியுறமாட்டீர்களா?" (நன்றாகக் கேட்டு நினைவில் வையுங்கள்) என வினவி "எளிமையும் வறுமை நிலையும் ஈமானின் ஒரு பகுதியாகும்"? என்று நபி (ஸல்) அவர்கள் திரும்பத் திரும்ப திருவாய் மலர்ந்தார்கள் என ஹஜ்ரத் அபூஉமாமா (ரலி) அவர்கள் நவின்றுள்ளார்கள். (அபூதாவுத்)

"எவன் உயர்ந்த ரக ஆடைகளை அணிய வசதி படைத்தும், பணிவு, அடக்கத்தின் காரணமாக அதை அணியாமல் எளிய ஆடைகளை உடுத்திக் கொண்டால் இவனை மறுமை நாளில் எல்லாப் படைப்புகளுக்கும் முன்னிலையில் அழைத்து இதோ, சுவனப் பட்டாடைகளில் எதை விரும்பினாலும் எடுத்துக்கொள்" என உரிமை வழங்கப்படும். மேலும், மறுமையில் என்னைப் பார்க்கவும், என்னுடனிருக்கவும் விரும்பினால் பயணியைப் போன்ற தேவைக்கு மட்டும் இவ்வுலகப் பொருட்களை குறைத்துக் கொள்ளுங்கள். பழையது என்ற எந்த ஆடையையும் அணியாது ஒதுக்கிவிடாதீர்கள் எனவும் நபி (ஸல்) அவர்கள் நவின்றார்கள். (அல் ஹதீஸ்)

தொகுப்பு: வை.எம்.தாஹிர்கரீம், கல்முனை-06.

# கவிதைப் போட்டி இல.333

### பரிசுக்குரிய கவிதை



## நாட்டின் (அ) நாகரீகம்

காட்டிலிருந்து...;
நாட்டிற்கு வந்தான்-
ஆதிமனிதன்.

நாட்டிலிருந்து...;
காட்டுக்குச் சென்றான்-
நாதியற்ற தமிழன்.

கல்லாறு டினேஸ்- மஸ்கெலியா,

**இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்:**

### பரிசு

நாம் போட்ட
புள்ளடிக்குப் பரிசு-
மரநிழல் வாழ்க்கையும்
பட்டினிச் சாவும்!

வீ. ஜெயராஜ்-மத்தியவீதி,
கிரான்.

### முடிவு

தொலைந்துவிட்ட
சமாதானம்
தேடியெடுத்த
தீர்மானம்!

ஜனாபா சஹறுல்
எம்.சலாஹுடீன்-
உக்குவெல.

### நெருக்கடி!

கற்காலமும்
தற்காலமும்
அகதி வாழ்வின்
அவல நிலையில்
அதிக தூரமில்லை!

செ. ஞானராசா-
சின்னப்பண்டிவிரிச்சான், மடு

### (அ)கதி

ஆயுள் முடியும் வரை-ஏன்!
அகிலமே முடியும் வரை
தமிழரின் கதியோ-ஓர்
நடமாடும் அகதி!

ஞா. சுதாகரன்- உவர்மலை,
திருகோணமலை.

### ஏழைகளின் ஓலம்...!

எம் நிலையை உலகறிய
இவ்விடத்தில் சேர்ந்து.
விட்டோம்!
இன்னிலையை யார் அறிந்து
எம் துயரை தீர்ப்பாரோ?!

ப. சிவானந்தராஜா- தெமட்டகொடை.

### கவனம்

இருண்டவன் கண்ணுக்கு
மருண்டதெல்லாம் பேயாம்
புலி முகாமென நினைத்து
குண்டு வீசுவர்- கவனம்!

அ. யாழினி- மட்டக்களப்பு.

### "அரசு செய்தி"

கொடிய மிருகங்கள்-வாழும்
காட்டில் தான்-தமிழர்கள்
வாழ வேண்டும்!


அ.யூட் மரிய அன்ரன்- வவுனியா.

### வன்னி வாழ்க்கை!

பென்னம் பெரிய குடும்பம்
சின்னஞ் சிறிய குடிலில்
வன்னி மண்ணில் வாழும்
வாழ்க்கை இதுதான் பாரீர்!!

கனுவாஞ்சிநாதன்- கல்லடி,
உப்போடை.

# கவிதைப் போட்டி இல.336



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 18.12.1999

கவிதைப் போட்டி இல.336
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

### அகதி முகாம்

அரசியல்வாதிகள்
எல்லாம்
அரண்மனையினிலே...
அவர்களுக்கு
வாக்களித்த மக்கள்
எல்லாம்
அகதி முகாமினிலே...

என்.எல்.முஸம்மில்- புதிய காத்தான்குடி-06.

### மீண்டும் தேர்தல்

தெருவோரம் நமக்கு
கூடாரமாம்-மீண்டும்
தென்னிலங்கையில் தேர்தல்
பிரச்சாரமாம்!

செல்வி எஸ். சுயேந்தினி- வவுனியா.

### அவ(க)தி

யுத்தம் எமக்குத்
தந்த பெயர்
அகதி!
இப்போது நாங்கள்
படுவதெல்லாம்
அவதி!

விருதோடை பாயிஸ்-
மதுரங்குளி.

முரசே!

தி.மு.க. தமிழ் நாட்டில்ஆட்சியில் உள்ள கூட்டணி தொடர்ந்தும் ஈழத் தமிழர் விடயத்தில் துரோகம் இழைப்பதை எம்மால் பொறுக்க முடியாது. முன்னர் குட்டிமணி, தங்கத்துரை போன்றோரை சிங்கள அரசிடம் ஒப்படைத்து தமிழ் இனத்திற்கே மகா பெரிய துரோகம் செய்தது. இன்றும் உயிருக்கு அஞ்சி தாய் வீட்டில் புகுந்தவனை சிங்கக் கூட்டில் கையை கட்டி போட்டது போன்று எரிக் சௌந்தரநாயகம் என்பவரை மீண்டும் சிங்கள அரசிடம் ஒப்படைத்துள்ளது. இச் செயல் சாதாரண விடயமாக கொள்ள முடியாது. சிங்கள அரசை இனக் கொலைக்கு தூண்டுவது போல் உள்ளது. எனவே கருணாநிதிக்கு காலம் ஒரு நாள் பதில் சொல்லும். அதுவரை எம்மால் பொறுக்க முடியுமா? எனவே நீங்கள் தமிழர்கள் சார்பாக காட்டமான எச்சரிக்கை ஒன்று விடுவதன்மூலம், தமிழ் நெஞ்சங்களின் உள்ளக் குமுறலை ஓரளவாவது தணிக்கலாம்.

தி.சிறிதரன், மல்லாவி.

# வாசக(ர்)சாலை



## சிறகடித்துப் பறந்து வா!

வாரம் ஒரு முறை வருவாய் என எதிர்ப்பார்த்து தூய் நிறைந்த படித்த எனக்கு மூன்று வாரமாக நீ மூளையில் கிடக்கிறாய் உன்னை முன்னேற்ற ஒரு மூத்த தலைவன் இல்லையே' உனக்கு இப்படி நடக்குமென்று நினைத்தாயா இல்லையே. இதயத்தை தொட்டு எழுதிய கதை கவிதைகளை எப்படியோ வர்ணிக்கிறாய்.

நீ இருந்த இடம் இப்போ நிழலாய் தெறிகிறது நடந்ததை வெளிக் காட்டினாய் நடக்கப் போவதை எடுத்துக் காட்டினாய்.

அரசியலைக்கூட அப்படியே அடிவருடி எழுதினாய். உன்திறமைக்கு நிகர் ஏது.

நீ இல்லாவிட்டாலும் உன்னுடைய உணர்வுகள் முரசோடு தொட்டு தழுவும்.

முயற்சியை கைவிடாமல் முகம் மலர்ந்து முன்னெடுத்துச் செல்ல லட்சோப லட்ச மக்கள் உன்னை எதிர்ப்பார்த்து நிற்கிறனர்.

கூடிய விரைவில் நீ கூடுவிட்டு வெளி வருவாயாக. ஊருக்கெல்லாம் உபதேசம் செய்த உனக்கு உதவி கரம் கொடுக்க தயக்கமேன்?

நீ உலகத்தை எட்டிப் பிடித்து விட்டாய் உன்னை வீழ்த்த எவராலும் முடியாது. மீண்டும் சிகரம் மலைபோல் சிறகடித்து பரந்து வா! உங்கள் அன்பான வாசகர்

கஸ்தூரி கலியபெருமாள், பூரணவத்தை, கண்டி.

அன்பின் முரசே...!

வாரத்தில் ஒரு நாள் வலம் வந்து எம் இதயத்தை கொள்ளைக் கொண்ட என் இனிய முரசே...! உன்னை ஒரு வாரம் பார்க்காவிட்டாலே அன்றைய நாள் நாம் எதையோ பறிகொடுத்தது போல் இருக்கும் அந்தளவுக்கு முரசே..! நீ எம் இதயத்தில் நீங்காத இடம் பிடித்து விட்டாய்.

சென்ற வாரம் முரசு எங்களுக்கு தாமதித்தே கிடைத்தது. நாம் பதறிப்போய் விட்டோம். முரசு இனி எங்களுக்கு கிடைக்காதா...? வெளிவராதா என....?

முரசே...!

உன் அரசியல் கட்டுரைகள் மூலம் பல உண்மைகளை புரிந்து கொள்கின்றோம். நீ இன்று இல்லையென்றால் அவ்வுண்மைகள் வெளிவந்திருக்காது. முரசே...! வாசகர்களாகிய நாம் என்றும் உன்னோடு இருப்போம்...!

முரசே உனக்கு நிகர் நீயே...!

உன் பணி தொடர அடியேனின் அன்பு வாழ்த்துக்கள் என்றும் இருக்கும்...!

மரியம்காலித், கண்டி.

தினமுரசின் வரவுக்கு என் வாழ்த்துக்கள்.

ஒரு மாதம் உன்னை காணாமல் தவித்த எம்மை சந்தோஷ கடலில் மூழ்கவிட்டதற்கு இன்னும் ஒரு முறை நன்றிகள்.

தினமுரசின் ஆசிரியரின் (அற்புதன்) ஆத்மா சாந்தி அடைய என் பிரார்த்தனை.

றிபாய், மீதோட்டமுல்ல.

அன்புடையீர்,

பல்வேறுபட்ட இடர்களுக்கு முகம் கொடுத்த ஆற்றொணா துன்பங்களையெல்லாம் அனுபவித்து வரும் சாதாரண மக்களின் மனநிலைகளை பத்திரிகையின் செய்திகளும், கருத்துப்படங்களும், படம்பிடித்துக் காட்டுகின்றன. ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொதுமகன் என்ன செய்வான் என்பதை தீர்மானிக்கும் கட்டம் வந்துவிட்டது.

குருமாரை இழிவுபடுத்தும் செய்திகள், தகவல்கள், துணுக்குகள், தொழிலைச்சாற்றும் சொற்பிரயோகங்கள்மூலம் மனிதனைத் தரம்பிரிக்கும் ஆக்கங்கள், ஆகியவற்றைப் பிரசுரிக்க வேண்டாம்.

வ.ஜெகதானந்தன், உக்குளாங்குளம், வவுனியா.

என் இனிய முரசே!

கடலுக்கு அப்பால் வாரா வாரம் எப்பொழுது முரசு வரும் என்று எதிர்ப்பார்த்திருக்கும் வாசகர்களில் நானும் ஒருத்தி. உண்ண மறந்ததுண்டு, உறங்க மறந்ததுண்டு, உன்னை படிக்கவோ மறந்ததில்லை. 'அரசியல் பயங்கரவாதம்' பற்றிய முரசின் ஆசிரியர் தலையங்கம் மிகச் சிறப்பு. மோனிக்கா என் மோனிக்காவைச் சிறப்பாக தருகின்ற புவனாவுக்கும். தினமுரசுக்கும் எனது மனமார்ந்த நன்றி.

செ.உதயனி, லெபனான்.

மடல்கள் மற்றும் ஆக்கங்கள்- உட்பட சகல தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:- 1772, கொழும்பு.
தொலை நகல் (Fax):- 074-513266

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு,வேறுபிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு. -நிர்வாகி.

அன்பின் தினமுரசு நிர்வாகத்தினருக்கு!

தின முரசு பத்திரிகையின் பல லட்சம் வாசகர்களில் நானும் ஒருவன் இம் முரசின் நிர்வாக இயக்குனரும் பல தொடர்களின் ஆசிரியருமான எங்கள் அன்பு அண்ணன் ரமேஸ் இன் பிரிவை கேட்டு அதிர்ச்சி உற்றேன் அவருக்கு எனது கண்ணீர் அஞ்சலிகள் இம் முரசு மேலும் வளர வாழ்த்துகிறேன்.

வ.ஜினேஸ், புளியங்குளம், வவுனியா.

# அடுத்த பொதுத் தேர்தல்?

## விரைவில் அறிவிக்கப்படலாம்!

(எமது சிறப்பு நிருபர்)

ஜனாதிபதித் தேர்தல் திடீரென அறிவிக்கப்பட்டது போல், அடுத்த பொதுத் தேர்தலும் திடுதிப்பென நடத்தப்படுவதற்கான சாத்தியக் கூறுகள் இருப்பதாக அவதானிகள் கருதுகின்றனர். ஜனாதிபதித் தேர்தலில் யார் வெற்றி பெறுவார்கள் என்ற ஐயப்பாடு இருந்து வருகிறது. அன்றாட நிகழ்வுகளை அவதானிப்பவர்கள் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கருத்தைக் கூறி வருகின்றனர்.

நேற்றுவரை பொ.ஜ.முன்னணி வேட்பாளர் திருமதி சந்திரிக்கா பண்டாரநாயக்க அவர்களே வெற்றி பெறும் வாய்ப்பினைப் பெற்றிருக்கிறார் என்று கூறியவர்கள்; இன்று தமது கருத்துக்களை மாற்றி எதிர்க்கட்சி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவே வெற்றி பெறுவார் என்று கூறுகிறார்கள். கடந்த ஒரு வாரகாலமாக இத்தகைய திசை மாற்றம் தினசரி இருந்து கொண்டே வருகிறது.

வட-கிழக்கில் உள்ள தமிழ் வாக்காளர்களில் பெரும்பாலானோர், 'இராமன் ஆண்டாலென்ன இராவணன் ஆண்டாலென்ன?' என்ற விரக்தியிலிருக்கின்றனர். இவர்கள் வாக்களிக்கச் செல்லாவிட்டாலும், இவர்களுடைய வாக்குகள் கள்ளத்தனமாகப் பெட்டிகளுக்குள் திணிக்கப்பட்டு விடும் அபாயமுமுண்டு.

இம்முறைத் தேர்தலிலும் தமிழ்பேசும் மக்களின் வாக்குகளே தீர்ப்பு வழங்கும் நிலையில் உள்ளன; என்ற போதிலும், கள்ள வாக்குகளால்தான் நிலமை மாற்றமடையும் வாய்ப்புகள் அதிகமுள்ளன.

யாழ் மாவட்டத்தைப் பொறுத்த மட்டில் வாக்குச் சாவடிக்குச் செல்வோருக்கு எதிராக புலிகளின் எச்சரிக்கை ஒன்று வெளிவந்திருப்பதாக சிங்களச் செய்தித்தாள் ஒன்று கூறுகிறது.

'இத்தகைய சந்தர்ப்பத்திலாவது தமிழ்க் கட்சிகள் தங்கள் பேதமைகளை மறந்து ஒரே நிலைப்பாட்டை எடுத்திருந்தால், தலைமையைத் திட்டவட்டமாக நிர்ணயிக்கும் பொறுப்பினை ஏற்றிருக்கலாம்.

எனவே இம்முறையும் தமிழ்த் தலைவர்கள் 'பஸ்ஸைத் தவறவிட்டவர்'களாகவே உள்ளனர்' என்று ஓர் அனுபவசாலி அங்கலாய்த்துக் கொண்டார்.

பொதுத் தேர்தல் விரைவில் அறிவிக்கப்படலாம் என்ற வதந்திகளுக்கு அண்மையில் அலரி மாளிகையில் இடம்பெற்ற அமைச்சர்களின் கூட்டத்தில் எழுந்த சலசலப்புகள் சான்றாக விளங்குகின்றன. தலைமை வகித்த ஜனாதிபதிக்கும் சில அமைச்சர்களுக்குமிடையில் இடம்பெற்ற கருத்துப் பரிமாறல்கள், அடுத்த பொதுத் தேர்தலுக்கான திகதி அதிகதூரத்தில் இல்லை என்ற கருத்தை வெளிப்படுத்துவதாக இருக்கிறது. ●

## பாலசிங்கம் இலண்டன் சென்றது எப்போது?

### வெளிவரும் முரண்பட்ட தகவல்கள்!

புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கமும் அவருடைய மனைவியும் இலண்டன்-மாநகர் சென்றுவிட்டதாக கடந்த செப்டம்பர் மாதமே செய்திகள் வெளியாகியிருந்தன. இவர்களுடைய பயணத்துக்கான ஏற்பாட்டை வெளிநாடு ஒன்றும் அதன் நட்பு நாடொன்றும் இணைந்தே செயற்படுத்தியதாகவும் அச்செய்தியில் காணப்பட்டது. 324வது முரசிலும் இச்செய்தி பிரசுரமாகியிருந்தது. ஆனால் இவர்கள் இருவரும் நவம்பர் மாத மத்தியில் தான் இரகசியமாக நாட்டைவிட்டு அகன்றதாக புதிய தகவல் ஒன்று வெளியாகியிருக்கிறது.

கலாநிதி பாலசிங்கம் நீண்டகாலமாக மதுமேகமெனும் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டிருந்தார். இவருடைய சிறு நீரகத்தில் ஏற்பட்ட கோளாறு காரணமாக ஐரோப்பா சென்று மருத்துவ உதவி பெற வேண்டியிருந்தது. இதற்கான பயணத்துக்கு அனுமதி தருமாறு புலிகளின் தலைமைப் பீடம், சில தொண்டு நிறுவனங்களின் மூலம், அரசாங்கத்தைக் கேட்டதாகக் கூறப்படுகிறது. அரசாங்கம் இந்த அனுமதியைத் தருவதானால், யாழ் மாவட்டத்தில் சிவில் நிர்வாகத்தைச் சீர்குலைக்கும் நடவடிக்கைகளை புலிகள் நிறுத்த வேண்டும் என்று நிபந்தனை விதித்ததாம்.

பாலசிங்கமும் மனைவியும் அரசாங்கத்தின் சலுகையை எதிர்பாராமல் புலிகளின் போக்குவரத்துச் சாதனத்தின் உதவியுடன் தாய்லாந்து சென்று, அங்கிருந்து இலண்டன் சென்றுள்ளனர்.

தாய்லாந்து சென்ற பாலசிங்கம் தம்பதியினருக்கு மகத்தான உபசாரம் ஒன்றும் இடம் பெற்றதாக ஆங்கில வார ஏடு ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது. இந்த உபசாரத்தை யார் ஏற்பாடு செய்தார்கள் என்பது பரம இரகசியமாக இருப்பதாகவும் அச்செய்தி மேலும் தெரிவித்துள்ளது.

பாலசிங்கம் தம்பதியினருக்கு வெளிநாடு செல்வதற்கு சிறீலங்கா அரசின் அனுமதி கோரியே நவம்பர் 27ம் திகதியன்று, புலிகளிடம் கைதிகளாகவிருந்த சிறீலங்கா இராணுவத்தைச் சேர்ந்த ஏழு சிப்பாய்கள்-நல்லெண்ணத்தின் அடிப்படையில்'- விடுவிக்கப்பட்டதாகவும் கூறப்பட்டது. ■

## இராணுவக் கட்டுப்பாடற்ற பிரிவில்

### ரணில் சுவரொட்டிகள்

(காரைதீவு நிருபர்)

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட இராணுவ கட்டுப்பாடற்ற பகுதிகளில் ஜனாதிபதி ஐ.தே.க. வேட்பாளர் ரணிலின் சுவரொட்டிகள் பெருமளவில் ஒட்டப்பட்டுள்ளதாகச் செய்திகள் கூறுகின்றன.

குறிப்பாக பழுகாமம், பெரிய போரதீவு போன்ற பகுதிகளில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன.

ரணிலின் அடுத்த கட்ட பிரசாரம் அக்கரைப்பற்று, கல்முனை, களுவாஞ்சிக்குடி பிரதேசத்தில் நடைபெறும் என கல்முனை தொகுதி முகவர் மையோன் முஸ்தபா கூறினார். ■

## கூட்டத்தில் குழப்பமென

### விஷமிகள் அறிவிப்பு?

கல்முனை நகருக்கு அணித்தாகவுள்ள மருதமுனையில் ஐ.தே.கட்சி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து பொதுக் கூட்டம் ஒன்று நடைபெற்றபோது, அங்கு பலதரப்பட்ட ஆயுதங்களுடன் பொலிசார் நுழைந்தனர். இதனால் அங்கு பதற்ற நிலை ஏற்பட்டது.

இக்கூட்டத்தில் பெரும் குழப்பம் ஏற்பட்டிருப்பதாக கல்முனை பொலிஸாருக்கு யாரோ விஷமிகள் தொலைபேசியில் அறிவித்துள்ளனர். இதனை நம்பியே பொலிசார் குண்டாந்தடிகளுடனும் ஓர் அம்பியூலன்ஸ் வண்டியுடனும் விரைந்துள்ளனர்.

கூட்டம் மிகவும் அமைதியாக நடந்து கொண்டிருப்பதை அவதானித்த பொலிசார் வந்த வழியே திரும்பிச் சென்றனர். ■

## தடுமாறும் மலையகத்தின் தமிழ் வாக்காளர்கள்?

(கண்டி நிருபர்)

ஜனாதிபதி தேர்தல் இன்னும் சில நாட்களில் நடைபெற முன்பதாக மலையகத்தில் தோட்டப்புற பிரதேசங்களில் இத்தேர்தலில் யாரை ஆதரிப்பதென்ற நிலையில் தோட்ட தொழிலாளர்கள் தடுமாறிக் கொண்டுள்ளனர்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பொ.ஜ.ஐ.முன்னணி வேட்பாளரான இன்றைய ஜனாதிபதி திருமதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்காவை ஆதரிக்க தீர்மானித்துள்ள அதே வேளையில், தொழிலாளர் தேசிய சங்கம் ஐ.தே.கட்சி வேட்பாளர் திரு ரணில் விக்ரமசிங்காவை ஆதரிக்கத் தீர்மானித்துள்ளது.

கடந்த மத்திய மாகாண சபைத் தேர்தலில் மயில் சின்னத்தில் இ.தொ.காவும் இணைந்து போட்டியிட்ட அதே வேளையில் தொழிலாளர் தேசிய சங்கத்திற்கும் இ.தொ.காவுக்கும் இடையிலான விரிசல் மேலும் அகலச் செல்வதாக தோட்டப்புற வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இ.தொ.காவின் நீண்டகால உறுப்பினரான மத்திய மாகாண சபை உறுப்பினர் திரு எஸ்.எ.கந்தசாமி தொழிலாளர் தேசிய சங்கத்துடன் இணைந்து கொண்டதன் மூலம் இந்த விரிசல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

என்றாலும் தோட்டத் தொழிலாளர்களின் வாக்குகள் சிதறிப் போய்விடாமல் இருக்க இ.தொ.கா. சகல தோட்டங்களுக்கும் சென்று இன்றைய ஜனாதிபதியை ஆதரிக்க வேண்டுமென வலியுறுத்தி வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கட்சிக் கொடிகளையும் பதாகைகளையும் இரவோடு இரவாக, ஒட்டும் நிலை தொடர்ந்தும் நிலவுகின்றது. ஜனாதிபதித் தேர்தல் இம்மாதம் 21ஆம் திகதி நடைபெற இருப்பது தெரிந்ததே.

**மலையக மக்கள் முன்னணி**

இதற்கிடையில் மலையக முன்னணியினர் எதிர்க்கட்சி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பதென முடிவெடுத்துவிட்டனர். ஐ.தே.கட்சி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் மலையக முன்னணித் தலைவர் திரு.சந்திரசேகரனுக்குமிடையில் அண்மையில் ஏற்படுத்தப்பட்டுள்ள ஓர் உடன்பாட்டின் அடிப்படையில் இம் முடிவு எடுக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

திரு.சந்திரசேகரன் தனது பிரதி அமைச்சர் பதவியையும் இராஜினாமாச் செய்துவிட்டதாக அறிவித்துவிட்டார். இப்பொழுது மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் இ.தோ.காவினரும் மலையக முன்னணியினரும் போட்டி போட்டுக் கொண்டு தீவிரப்பிரசாரங்களில் ஈடுபட்டு வருகின்றனர். அப்பாவித் தோட்டத் தொழிலாளர்கள் எப்பக்கம் சார்வது என்று தெரியாமல் தடுமாறுகின்றனர். ■

## கல்முனையில் குண்டு வெடிப்பு

### 3 சிவிலியன்கள் இரு படைவீரர் காயம்!

(காரைதீவு நிருபர்)

கல்முனையில் 8ம் திகதி புதன்கிழமை மதியம் 12.23 அளவில் குண்டொன்று வெடித்ததில் மூன்று சிவிலியன்களும், இரு விசேட அதிரடிப்படைவீரர்களும் படுகாயமடைந்துள்ளனர்.

காயப்பட்டோர் உடனடியாக கல்முனை ஆதார, மற்றும் தெற்கு வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டனர்.

கல்முனை நகரிலுள்ள முஸ்லிம் ஹோட்டல் ஒன்றின் முன்னால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 'யமஹா' ரக மோட்டார் சைக்கிளிலேயே இக்குண்டு பொருத்தப்பட்டிருந்ததாக தெரியவருகிறது.

ஜன நடமாட்டம்கூடிய வேளையிலே இக்குண்டு வெடிப்பு நிகழ்ந்துள்ளது. மக்கள் சிதறி ஓடினர். யமஹா மோட்டார் சைக்கிள் எரிந்ததுடன், அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மற்றுமொரு 'ஹொண்டா' ரக மோட்டார் சைக்கிளும் எரிந்து நாசமாகியுள்ளது.

அருகிலிருந்த பழக்கடை சிதறியிருந்தது. வீதியில் அப்பிள் பழங்களும், தோடம்பழங்களும் உருண்டு ஓடியதையும் காணமுடிந்தது.

உடனடியாக ஸ்தலத்திற்கு விரைந்த கல்முனை பொலிஸாரும், காரைதீவு விசேட அதிரடிப்படையினரும் போக்குவரத்தை துண்டித்து தேடுதலை மேற்கொண்டனர்.

## இராணுவத்துக்கான பணம்

### 9 கோடி மோசடி?

நாட்டில் தொடரும் போரினால் பேரிழப்புகள்தான் பெருகுகின்றன. இதனால் நாட்டு மக்கள் இப்போரை முடிவுக்குக் கொண்டு வந்துவிட வேண்டும் என்று விரும்புகின்றனர். அரசியல்வாதிகள் அரசியல் ஆதாயங்களுக்காக யுத்தத்தை மேலும் தொடரவே நாட்டம் கொண்டுள்ளனர். இருப்பினும் உயர் மட்டத்திலுள்ள ஒரு சாரார், போர் என்றும் தொடரவேண்டும் என்றே ஆசைப்படுகின்றனர்.

இத்தகைய பேராசைக்காரர்கள், பலர் சீருடையில் நடமாடுகிறார்கள். யுத்தம் தொடர்ந்தால்தான் இவர்களுக்கு ஆதாயம். போருக்குத் தேவையான போர்த் தளபாடங்களையும் ஆயுதங்களையும் வெளிநாடுகளிலிருந்து கொள்முதல் செய்து நாட்டுக்குக் கொண்டு வந்து சேர்க்கும் பணியுடன் தொடர்புடையவர்கள்தான் என்பதை பல செய்தித்தாள்கள் அவ்வப்போது சுட்டிக் காட்டி வந்துள்ளன. முரசும் சில தகவல்களை வெளியிட்டிருந்தது. இராணுவத்தின் போர் நடவடிக்கைகளுக்கு நேரடியாகத் தேவைப்படும் ஆயுதங்கள் மற்றும் தளபாடங்கள் ஆகியவற்றைக் கொள்வனவு செய்வதில்தான் பல ஊழல்கள் இடம் பெற்று, கண்டு பிடிக்கப்பட்ட தகவல்கள் ஏற்கனவே நடைபெற்றன. ஆனால் இப்போது மற்றுமொரு மோசடி பற்றிய தகவல் வெளியாகியிருக்கிறது.

இராணுவத்துக்குரிய பணம் ரூபா 9 கோடி வரை கையாடப்பட்டிருக்கிறது. சர்வமும் கணனிமயமாக மாறி, சகல துறைகளிலும் பிரதான பொறுப்புகளைக் கையாளும் அக்கணனிகளையே தம்வசமாக்கிய சிறிலங்கா இராணுவத்தைச் சேர்ந்த சில கோப்ரல்களே, இப்பெரும் தொகையைக் கையாடியுள்ளனர். அது மட்டுமல்லாமல், இவர்கள் மீதான குற்றச்சாட்டுகள் இராணுவ முறைப்படி விசாரிக்கப்பட்டு வரும் காலகட்டத்தில் இவர்களில் மூவர் தலைமறைவாகிவிட்ட தாகவும் தெரிகிறது.

கடந்த செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் இத்திருட்டு பற்றி பாதுகாப்புத் துறை பிரதி அமைச்சர் ஜெனரல் ரத்வத்தையே இத்தகவலை ஒப்புக்கொண்டுள்ளார். பாராளுமன்றத்தில் அவசரகாலச்சட்ட நீடிப்புத் தொடர்பான பிரேரணை விவாதத்தின் போதுதான் அமைச்சர் ரத்வத்தை இதனைக் கூறினார். ■

## இராணுவ சீருடை தைக்கும் கடையில் திருட்டு?

இராணுவச் சீருடைகளைத் தைக்கும் கடையொன்றில் மூன்றாவது தடவையாகத் திருடர்கள் கொள்ளையிட்டுள்ளனர்.

மட்டக்களப்பு-ஒட்டமாவடியில் கடந்த வாரம் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. தைக்கப்பட்ட சீருடைகள் உட்பட தையல் இயந்திரமும் திருடப்பட்டுள்ளன. இவற்றின் பெறுமதி சுமார் ஒரு இலட்ச ரூபா இருக்கும் என்று முறையிடப்பட்டுள்ளது.

கடந்த சில வருடங்களுக்கு முன்னரும் இதே விதமாக இந்தக் கடை திருட்டுப் போனது. இரண்டாவது முறையாக சென்ற ஆண்டு இக்கடைக்குள் கைக்குண்டு ஒன்று எறிந்து தாக்கப்பட்டதில் மூவர் கடும் காயங்களுக்குள்ளாகினர்.

இம்முறையும் திருடர்கள் யார் கண்ணிலும் அகப்படாது கன கச்சிதமாகத் திருடியுள்ளனர். முகமூடி அணிந்து வந்தே திருடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. கூடுதலாக இராணுவச் சீருடைகளே இக்கடையில் தைக்கப்பட்ட போதிலும், புலிகளுக்கும் இச்சம்பவத்திற்கும் சம்பந்தமிருப்பதாகத் தெரியவில்லை. வர்த்தகப் போட்டியே காரணமாக இருக்கலாமென்று சந்தேகிப்பதாகப் பொலிஸார் கூறுகின்றனர். ■

## புலிப்படையினர் நால்வர் பலி

### இரு குடும்பத்தினரை கைது செய்தனர்

புலிகளை எதிர்பார்த்து ஏற்கெனவே அவ்விடத்தில் வந்து பதுங்கியிருந்த படையினர் 4 புலிகளைச் சுட்டுக் கொன்றனர்.

இந்தச் சம்பவம் மட்டக்களப்பு பதுளை வீதியிலுள்ள கோப்பாவெளியில் சில தினங்களுக்கு முன்னர் நடந்தது.

சம்பவம் நடந்த இடம் புலிகளின் முழுக் கட்டுப்பாட்டிலுள்ள பகுதியாகும். இதனாலேயே புலிகள் முன்னெச்சரிக்கை ஏதுமின்றியிருந்ததாக அறிய முடிகிறது.

படையினர் பதுங்கியிருந்து புலிகள்மீது துல்லியமாகத் தாக்குதல் நடத்திவிட்டு புலிகளின் ஆயுதங்களையும் கைப்பற்றிக்கொண்டு திரும்பி விட்டனர். படையினர் அயலிலிருந்த வீட்டார்மீது எதுவிதமான கெடுபிடிகளிலும் ஈடுபடவில்லையாம்.

இச்சம்பவம் குறித்துப் புலிகள் ஆராய்ந்தனர். அந்த இடத்திலிருந்து வீட்டுக்காரர்கள் மீது சந்தேகம் வலுத்தபடியால் அவர்களை முதலில் விசாரித்து பின்னர் விடுவித்தனர்.

இது நடந்து ஓரிரு தினங்களில் மீண்டும் அவர்களை விசாரிக்கப் புலிகள் அழைத்துச் செல்லும்போது ஒருவர் தப்பியோடி படையினருடன் சேர்ந்துள்ளார். ஏனைய நான்கு பேரையும் புலிகள் கடுங்காவலில் வைத்து விசாரித்து வருகின்றனர் என்று தெரிகிறது.

இதனிடையே கிழக்குப் பல்கலைக் கழக பாதுகாப்பு ஊழியர் ஒருவர் பல மாதங்களுக்கு முன்னர் புலிகளின் விசாரணையில் நீண்ட நாட்கள் வைக்கப்பட்டிருந்தார். பல நாட்கள் தடுத்து வைத்து விசாரித்த பின்னர் புலிகள் அவரை விடுவித்தனர்.

தற்சமயம் மீண்டும் அவரைப் புலிகள் பிடித்துச் சென்றுள்ளனர். இவர் புலிகளின் பெயரைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தி பல காரியங்களைச் சாதித்துள்ளார் என்றும் சந்தேகிப்பதாகக் கூறப்படுகிறது. படையினருடன் சேர்ந்து செயற்படும் தமிழ்க் குழு ஒன்றின் முக்கிய உறுப்பினர் ஒருவரின் உறவினர் இவர் என்றும் கூறப்படுகிறது.

## விசாரணையின்றி சிறைகளில் வாடும்

### தமிழ்க் கைதிகள் மீது திடீர் அக்கறை?

கடந்த ஆண்டு ஜனவரி முதலாம் திகதிக்கு முன்னர் கைது செய்யப்பட்டு சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிக்ள் பற்றிய குற்றப்பத்திரத்தை எதிர்வரும் ஜனவரி 31ஆம் திகதிக்கு முன்னர் தாக்கல் செய்யாது விட்டால் அந்தச் சந்தேக நபர்களை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் போவதாக தொல்லை தவிர்ப்புக்குழு திடீரென அறிவித்துள்ளது.

தடுத்து வைக்கப்பட்டுள்ள 288 தமிழ்க் கைதிகள் பற்றி எவ்வித குற்றப் பத்திரமும் தனக்குக் கிடைக்கவில்லையென சட்டமா அதிபர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் தமிழ் மக்கள்மீது திடீர்க் கரிசனை காட்டும் விசயங்களில் ஆட்சியாளர்கள் குறியாக இருக்கிறார்கள் என்பதை முன்னரே 'முரசு' குறிப்பிட்டிருந்தது.

வருடக் கணக்காக எதுவித விசாரணையுமின்றி சிறையில் வாடும் தமிழ்க் கைதிகள் இதற்கு முன்னர் பல தடவைகள் உண்ணாவிரதமிருந்து, தம்மை விசாரணை செய்து நீதி வழங்குமாறு போராட்டம் நடத்தியபோது, இந்தத் தொல்லை தவிர்ப்புக்குழு அது பற்றிக் கவனத்திலெடுக்கவில்லை.

ஆனால் ஜனாதிபதித் தேர்தல் சூடு பிடித்திருக்கும் இந்த வேளையில் தமிழ்ச் சிறைக் கைதிகளின் நலனில் அக்கறை கொண்டு, தொல்லை தவிர்ப்புக்குழு அறிவித்திருப்பது பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தியிருக்கிறது. ●

## "போரை நிறுத்துவதே எனது முதல் வேலை!"

### மட்டக்களப்பில் ரணில்

(நமது நிருபர்)

"புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினால் மட்டுமே இந்நாட்டில் சமாதானத்தை நிலைபெறச் செய்ய முடியும். என்னை ஜனாதிபதியாகத் தெரிவு செய்தீர்களானால், வேறு எந்தப் பிரச்சனையையும்விட, புலிகளுடன் பேசுவதையே முதற்கடமையாக முன்னெடுப்பேன்!" மட்டக்களப்பில் நடைபெற்ற ஐ.தே.கட்சி ஜனாதிபதித் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் அக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், "கடந்த 1994ம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்ட வாக்காளர்களே சந்திரிக்காவுக்கு அதிகப்படியான வாக்குகளைக் கொடுத்து வெற்றியீட்ட வைத்தீர்கள். ஆனால் அவரோ தமிழ்பேசும் மக்களை அழித்தொழிக்கும் கொடுமையான யுத்தத்தையே முன்னெடுத்துச் செல்கிறார். இந்த யுத்தம் வட-கிழக்கு மக்களை மட்டும் பாதிக்கவில்லை, முழு இலங்கையையுமே பெரும் பாதிப்புக்குள்ளாக்குகிறது. 13 ஆயிரத்துக்கு மேற்பட்ட படையினரும் உயிரிழந்திருக்கிறார்கள். இந்நாட்டுப் படைகளால் உயிரிழக்கும் எல்.ரி.ரி.ஈ.யினரும் இந்த நாட்டு மக்களே. ஆகவே பேரழிவையே தரும் இக் கொடிய யுத்தத்தை முதற்கடமையாக நிறுத்தி சமாதானத்தை ஏற்படுத்துவதே எனது உயரிய குறிக்கோளாகும்!" என்றார். மட் மாவட்ட பா.உ. அலிஸாஹிர் மௌலானா, முன்னாள் அமைச்சர் ஏ.எச்.எம்.அஸ்வர் உட்பட பல பிரமுகர்களும் இக்கூட்டத்தில் பங்கேற்றனர். ■

## 3 படையினர் பலி! பதுங்கியிருந்து புலிகள் தாக்குதல்!

கொழும்பு-மட்டக்களப்பு நெடுஞ்சாலையில் நாவலடிப் பகுதியில் இடம்பெற்ற சம்பவத்தில் மூன்று படையினர் பலியாகினர். பொதுமகன் ஒருவரும் காயமடைந்தார்.


பயணிகளின் பஸ்ஸில் படையினர் சென்று இறங்குவதை அவதானித்துப் புலிகள் காத்திருந்த வேளையிலேயே இந்தத் தாக்குதல் இடம் பெற்றதாக அறிய வருகிறது. இச்சம்பவம் 06.12.99 அன்று நடந்தது.

இதனிடையே கல்முனை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் எம்.எம். அன்வர் (30) எனும் பொலிஸ்காரர் ஒருவர் சாய்ந்தமருதில் வைத்துப் புலிகளால் சுடப்பட்டார். இச்சம்பவமும் 06.12.99 அன்று காலை நடந்தது. துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒரு பொதுமகனும் அகப்பட்டுக் காயப்பட்டார். கிழக்கில் அங்கொன்றும் இங்கொன்றுமாகப் புலிகளின் தாக்குதல்கள் விரிவடைந்துள்ளன.

அராலியில் உள்ள உங்கள் நண்பர்கள் உறவினர்களுடன் தொடர்புகொள்ள இன்றே அழையுங்கள்.

**STR Communication**
ARALY EAST
VADDUKODDAI

உள்நாடு Tp No- 070212601
வெளிநாடு 0947021260I.



## அஸ்மா நோய்க்கு வைத்தியம்

* தொய்வு * இழுப்பு * இளைப்பு * மாய்ச்சல்
* மூச்சுத்தட்டல் * மண்டைச்சளி * நெஞ்சுச்சளி * தடிமன்
* இருமல் * கண்கடி * மூக்கடைப்பு * பீனிசம்
* தலைவலி * தும்மல் *நாசிஅரிப்பு *மூக்கால்நீர்வடிதல்

போன்ற குணங்களுக்கு முழு சுகமடைய உடலுக்கு பாதுகாப்பான, பக்க விளைவுகள் அற்ற மருந்துகளைக் கொண்டு கிரந்தியான, குளிரான, சமிபாடு அடையாத உணவுகளை உண்ணுதல், குளித்தல் போன்ற பல விளக்க முறைகளுடன் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

ஒருமுறை வைத்தியம் செய்து பாருங்கள் பலன் தெரியும்

*30.10.97 வீரகேசரி – தினக்குரல் பேப்பரில் வெளிவந்தது*

அஸ்மா நோயைக் குணப்படுத்திய டாக்டருக்கு நன்றி

பலவருடங்களாக இரவு பகலாக நித்திரையின்றி அமைதியின்றி அஸ்மாவால் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்த நான் தற்சமயம் இல.25, சில்வெஸ்டர் றோட், கல்கிசையிலுள்ள அஸ்மா சிகிச்சை நிபுணர் Dr. சுறாஜ் சோமசுந்தரம அவர்களிடம் சிகிச்சை பெற்ற பின்னர் பூரண சுகமடைந்து மறுபிறவி எடுத்துள்ளேன் என்பதனை இந்நோயால் கஸ்டப்படும் பிறருக்கு தெரிவிப் பதன் மூலம் டாக்டருக்கு எனது நன்றிக் கடனைச் செலுத்துகின்றேன். இப்படிக்கு ராஜ்பெர்னாண்டோ.156/44, ஜிந்துப்பிட்டி வீதி, கொழும்பு-13.

அண்டை வெளி எல்லாம் காற்று இருந்தும் சுவாசிக்க முடியாமல் இருந்த என்னை சுவாசிக்க வைத்த தெய்வம் என்கிறார் தற்போது டுபாயில் வேலை செய்யும் இல. 15, பராக்கிரம வீதி, கொழும்பு- 14 ஐச் சேர்ந்த ராஜன் என்பவர்.

இப்படி ஒரு சுகம் கிடைக்கும் என நான் கனவிலும் எதிர்பார்க்க வில்லை. நான் சிகிச்சை பெற சென்ற போது என்னைப் போலவே எல்லோரும் மிகச் சுகமடைந்து செல்கிறார்கள் என்பதை நேரில் கண்டறிந்தேன், என்கிறார் எட்டு வருடங்களாக அஸ்மா நோயால் பாடுபட்ட 264/1, வெலியமுல்ல வீதி, எகித்த வத்தளையை சேர்ந்த ராக்கம்மா தாமோதரம் என்பவர்.

இப்போது தான் மூச்சு வந்து ஆறுதலாக வீட்டு வேலைகளையும் செய்து வாழ்க்கையில் சந்தோசமாக இருக்கிறேன் என்கிறார், அட்டாளைச்சேனை பாலத்தடியைச் சேர்ந்த திருமதி S. பார்த்திமா.

**டாக்டர் சுறாஜ் சோமசுந்தரம்** Ph.D(Ind); M.B.B.S(Cey)
அஸ்மா சிகிச்சை நிபுணர் Govt. Reg. No : A 1553 (1970)

பார்வை இடப்படும் இடங்கள்

| | |
|---|---|
| 25, சில்வெஸ்டர் வீதி, கல்கிசை மவுண்ட்லேவினியா-(கொழும்பு) (பஸ்ஸால் இறங்க வேண்டிய இடம் ஒடியன் தியேட்டர் காலி வீதி) | 44A, பாடசாலை அவெனியு, புகையிரத நிலைய(ஸ்ரேஷன்) வீதியூடாக, தெகிவளை.(கொழும்பு) (பஸ்ஸால் இறங்க வேண்டிய இடம் தெகிவளைச் சந்தி) |
| இவ்விடத்தில் பழைய நோயாளர்களும் மற்றும் பதிவு செய்த புதிய நோயாளர்களும் செவ்வாய்-வியாழன்-சனிக்கிழமைகளில் காலை 9.00 மணி முதல் 12.00மணி வரையும், தினமும் மாலையில் 4.00 மணி முதல் 7.00மணி வரையும் பார்வையிடப்படுவர். | இவ்விடத்தில் தொலைபேசி மூலம் பதிவு செய்யப்பட்டு நேரம் பெறப்பட்ட புதிய நோயாளர்கள் மட்டுமே திங்கள்-புதன்-வெள்ளிக் கிழமைகளில் காலை 9.00 மணி முதல் 12.00 மணி வரையும் இதே நாட்களில் இரவில் 9.00 மணி முதல்10.30 மணி வரையும் பார்வையிடப்படுவர். |
| தொலைபேசி இல : 074-201582 | தொலைபேசி இல : 728767 |

காலநிலை காரணத்தால் தற்சமயம் தினமும் நோயாளர்கள் அதிகம் இருப்பதினால் தூர மாவட்டத்திலுள்ள புதிய நோயாளர்கள் நான்கு நாட்களுக்கு முன்பு தொலைபேசி மூலம் பார்வையிடப்படும் நாளையும் நேரத்தையும் பதிவு செய்து பிரயாணத்தை ஆரம்பிக்கவும்.

அவசர தொலைபேசி இலக்கம்: 078-650516
E-mail - drsuraj @eureka.lk

## இரண்டாம் ஆண்டு நினைவு

திதி -11.12.99



**பூபதி அம்பலவாணர்**
(அதிபர், இ/தும்பற தமிழ் வித்தியாலயம்)

தோற்றம்: 1941.08.14 / உதிர்வு: 1997.12.03

குடும்பத்துக்கேற்ற
குலவிளக்காய் சுடர்விட்டு
வளங்கள் பல வோங்கி
வாழ்வின் ஒளி பெருகி
துலங்க வைத்த தெய்வத்
திருவுருவே..உனைப் பிரிந்து
ஈராண்டு உருண்டோடி
மறைந்து விட்டதம்மா-நாம்
மறந்துவிடவில்லை? உனை
மனக் கோவில் தனில் வைத்து
தினந்தோறும் பூசித்து
போற்றி வருகின்றோம்!

கணவர், பிள்ளைகள்

தகவல்:-
*வேலுப்பிள்ளை அம்பலவாணர்*
*(ஓய்வுபெற்ற பாடசாலை அதிபர்)*

## சிந்தித்துப் பாருங்கள்

**நோவு, வலி ஏற்படுகின்றபோது வைத்தியரின் ஆலோசனையின் படி, மருந்து வில்லைகளை பாவிப்பதே சிறந்தது. எனினும், எல்லாவகையான வலி, நோவுகளுக்கும் மருந்து வில்லைகளை உட்கொள்வது சிறந்ததா?**

மரம், செடி, வேர், மலர், பட்டை ஆகியவற்றின் சாரைக்கொண்டு உற்பத்தி செய்யப்படும் **சித்தாலேபயை** தடவி வலி, நோவுகளில் இருந்து நிவாரணம் பெற்றுக்கொள்ள முடியும் என்பதை இலங்கையில் இலட்சக்கணக்கான **சித்தாலேப** பாவனையாளர்கள் உறுதி செய்துள்ளனர்.

இலங்கை சுகாதாரத் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்ற **சித்தாலேப** ஐ.எஸ்.ஓ. 9002 (ISO 9002) சர்வதேச தர நிர்ணயத்தின் மேற்பார்வையின் கீழ் உற்பத்திசெய்யப்படுகின்றது.

**சித்தாலேப**

ஹெட்டிகொட இண்டஸ்ரீஸ் (பிரைவெட்) லிமிடெட்.
33/3, ஸ்ரீ தர்மாராம வீதி, இரத்மலானை.
டெலிபோன்: 736910 பெக்ஸ்: 735465

TALENT A&M

## நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் 19.11.1999



மலர்வு 30.11.1981 ❖ உதிர்வு10.10.1998

**செல்வன் சிதம்பரநாதன்–ரூபதாஸ். பாண்டிருப்பு–01.**

*சிரித்துப்பேசி எம்மையும்*
*சிரிக்கவைத்த செல்வமே-நீ*
*சீரும் சிறப்புமாய் வாழ்வாய்*
*என்றிருந்தோமே-ஆனால்,*
*சிலகாலம் வாழ்ந்திட்டு*
*சிறகடித்துப் பறந்திட்டாயே!*

பிரிவால் துயருறும் பெற்றோர், சகோதரர்கள், சகோதரிகள், மற்றும் உற்றார் உறவினர்கள்.
சோமநாதர் வீதி, பாண்டிருப்பு-01. கல்முனை.

தகவல்: சோ.சிவகாமிநாதன்.(அண்ணன்), டோகா கட்டார்.

## மனோதத்துவ வைத்தியம்

பிரபல மனோதத்துவ நிபுணர் **Dr. P.** ஆறுமுகம் அவர்களை

**கொழும்பில் டிசம்பர் 11,12,13 வரை சந்திக்கலாம்**

**Dr. P.Arumugam S.A.M.P. REG.9492**
**SRI SAWBAKIYA INN, 67/A, WOLFENDHAL ST. COLOMBO-13.**
T.P:- 338165-338166, 338164, Fax:- 338161, செல்டெல் No. 072-609388

**கல்முனையில் டிசம்பர் 04, 05ம் திகதிகளில் சந்திக்கலாம்**

T.M.M. பார்மசி-கல்முனை. T.P. 067-29329

**வவுனியாவில் அறிவிக்கப்படும்**

(தயவு செய்து பதிவுசெய்து கொள்ளவும்)
(HOTEL VASANTHAM), 40,கண்டி வீதி, வவுனியா. T.P.024-22607, 024-22615, 22365

கடிதத்தொடர்பு:- **Resident T.P. 065-24019**
**Dr. P.Arumugam S.A.M.P.**
No. 51/5, Koolavady Road, Batticaloa . SRI LANKA.

## தெய்வீக மருத்துவம்

THEIVEEGAM SERVICES – INTERNATIONAL SOCIAL AND SPIRITUAL

சர்வதேச சமூக தெய்வீக சேவை
**NTSF-CHARITY REG. NO.HA04BT219**

கிரகப்பகை மற்றும் வேறு தீவினைகளால் வாழ்க்கையில் தீராத மனத்தாக்கம் காதல், கல்வி, தொழில், விவாகம், வெளிநாட்டுப் பிரயாணம், வேறு முயற்சித்தடை, கணவன்-மனைவி குடும்பவாழ்க்கையில் சந்தோஷமின்மை, உறவுப்பகை, வெளியில் சொல்லமுடியாத வெட்கமான பிரச்சனை, தீய பழக்கம், மனிதத்தீமை, மருந்தீடு, போன்ற தீமைகள் ஏற்படுகின்றது. இது போன்ற வேறு எவ்வித பிரச்சனைகளானாலும் காண்டம் கூறும் சோதிடத்தினால் பிரச்சனைக்குரிய காரணத்தைக் கண்டறிந்து துன்பம் நீங்கி மகிழ்ச்சியாக வாழ இறைவனால் சித்தர்களுக்கு போதித்தருளப்பட்ட புனித புராதன தீங்கற்ற மாந்திரீக தெய்வீக மருத்துவத்தினால் நிவர்த்தியளித்து வருகின்றோம்.

ஆயுர்வேத மருத்துவர் "பாலுசோதிடர் (SAMP)" காலை 8.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை. நேரில் வரமுடியாதோர், வெளிநாட்டவர்கள் தம் பிரச்சனைகளை எழுதினால், அல்லது பக்ஸ், தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு, கடல் கடந்து உடன் பயன்தரும் தெய்வீக மருந்துப்பொருட்களை தபால் மூலம் பெற்று தம் எண்ணங்களை நிறைவேற்றிக் கொள்ளலாம். தபால் செலவுகளை அனுப்பாதவர்களின் விடயங்கள் கவனிக்கப்படமாட்டாது. இரகசியம் பாதுகாக்கப்படும்.

| | | |
|---|---|---|
| தெய்வீகம் ஸ்ரீ லங்கா கல்லடி அரசவிடுதி வீதி, மட்டக்களப்பு. | வெளிநாட்டவர்களின் தொடர்புக்கு: T.PHONE/FAX: 0094 65 24825 | THEIVEEGAM SRI LANKA HEAD OFFICE BATTICALOA-SRI LANKA T.PHONE/FAX: 065-24825 |

வாழ்வினிருளை நீக்கி ஒளியையேற்றுவோம்"
"DISPEL DARKNESS INLIFE AND LET LIGHT SHINE"

## L ட்றைவிங் பயிற்சி

பிரபல போதனாசிரியர்

**K. Senthil Moahan**
Registered Driving Instructor
(All Class of Vehicle)

* முழுமையானதும் தெளிவானதுமான விளக்கம்
* ஆண் /பெண் இருபாலருக்கும் விரைவான பயிற்சி
* பயிற்சியின் முடிவில் லைசென்ஸ் பெற்றுத்தரப்படும்
* இன்டர்நாஷனல் லைசென்ஸிற்கும் ஒழுங்கு செய்யப்படும்
* உங்களுக்கு ஏற்றவாறு நேர ஒழுங்கு செய்துதரப்படும்
* சனி ஞாயிறு உட்பட வாரத்தில் முழு நாட்களிலும் பயிற்சி

No. 385 1/1, Galle Road, Wellawatta,
Telephone : 075-516532, 075-522171

## மரண அறிவித்தலும் 31ம் நாள் நினைவஞ்சலியும்

அன்னை மடியில் ◆ 09 . 08 . 1939



ஆண்டவன் அடியில் ◆ 09 . 10 . 1999

அமரர் திரு.பெரியதம்பி ஈஸ்வரதாசன்
**(ஓவசியர்–அடம்பன், மன்னார்)**

மன்னாரை வசிப்பிடமாகக் கொண்ட பெரியதம்பி ஈஸ்வரதாசன் 09.10.1999 சனிக்கிழமை சென்னையில் காலமானார். அன்னார் கௌரி மலரின் அன்புக் கணவரும் லண்டனில் வசிக்கும் சுபா, சுகி, சுதர்சினி சென்னையில் வசிக்கும் சுகந்தி, சுதர்சன், சுதர்சினி ஆகியோரின் பாசமிகு அப்பாவும், விஜயகுமார் (லண்டன்), விஜய்சிங்கம் (லண்டன்), ஆகியோரின் அன்பு மாமாவும், லண்டன் விசுதா, லண்டன் கிருஷ்ணி ஆகியோரின் அன்புத் தாத்தாவும் மற்றும் குருகுலதாசன், அருள் பிரதாசன், ஈஸ்வரதேவி, சரஸ்வதி தேவி, லச்சுமிதேவி, புஸ்ப்பா தேவி, பஞ்சாதேவி, அஞ்சலிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார். அன்னாரின் 31ம் நாள் நினைவு அஞ்சலியும் அந்தியேட்டியும் சென்னையில் நடைபெற்றது என்பதை உறவினர், நண்பர்கள் அனைவருக்கும், தெரிவித்துக் கொள்கிறோம்.

*தகவல்: மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.*

## 10ம் ஆண்டு நினைவு அஞ்சலி

அன்னை மடியில் ◇ 12 ○ 10 ○ 1924



இறைவன் அடியில் ◇ 23 ○ 11 ○ 1989

**அமரர் திரு. ஆறுமுகம் சிவஞானம்**

அன்புள்ள அப்பா,
ஆண்டுகள் பத்து கழிந்திடினும் உங்கள் அன்பு நினைவுகள்
அகலவில்லை. எங்கள் நல்வாழ்வுக்காக
நீங்கள் சிந்திய வியர்வைகள் வீண் போகவில்லை.
உங்கள் அன்பான, பண்பான வளர்ப்பினால் நாம் இப்பூமியில்
நற்பெயருடன், நன்மதிப்புடன் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

உங்களுக்கு சேவை செய்யும் வேளையில் நீங்கள் எம்முடன்
இல்லையே அப்பா! தினமும் நினைத்து வருந்துகிறோம்.
உங்கள் நற்பணிகளை தொடர்கிறோம்.
உங்களின் ஆசி பெற, தினமும் உங்களை
தெய்வமாக வணங்குகின்றோம்.
அன்புடன் மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

*மட்டக்களப்பு. 23.11.1999.*

## 3ம் மாத நினைவு அஞ்சலி (08.12.1999)

தோற்றம் ★★ 16 • 07 • 1941



மறைவு ★★ 08 • 09 • 1999

**திருமதி கணேசபிள்ளை செல்வமணி**

(2ம் வட்டாரம், குச்சவெளி)

எம் அன்பு அம்மாவே
எம்மை விட்டுப் பிரிந்து
மாதம் மூன்று
மறைந்த தம்மா
தந்தையில்லா வேளையிலும்
தத்துவங்கள் பகிர்ந்தளித்து
பாசத்தை சொரிந்தே
புதல்வர்களை வளர்த்தீரம்மா
இன்று சொல்லாமலே ஓடி
இறைவனடி சேர்ந்து விட்ட அம்மாவே!
அம்மா அம்மா என்ற பொழுதோ
நீண்டெம்மை வதைக்குதம்மா.
அன்னாரின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கும்,
குடும்பத்தினர்.

இல.1/1, ஏ. ஜோர்ஜ்வீதி, திருகோணமலை.
தகவல் மகன்: க. கனகேஸ்வரன், இலண்டன்.

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# தேர்தல் போர்க்களம்

# வாள் வீச்சா, வாய் வீச்சா?

தேர்தல் நாடகம் மீண்டுமொரு முறை அரங்கேறுகிறது. உச்சக் கட்டம் நெருங்குகிறது. கதாபாத்திரங்கள் அனல் பறக்கும் வார்த்தைகளை அள்ளி வீசி உணர்ச்சித் தணலாய்ப் பொங்கிவழிய நடிக்கிறார்கள். அட்டைக் கத்திகள் பளிர் பளீரென மின்ன அதைச் சுற்றிச் சுழற்றி ஆவேச நடனமிட்டு வெஞ்சினத்தோடு மோதும் போது பின்னாலிருந்து இசைக்கும் அச்சொட்டான இசை உண்மைக் கத்திச் சண்டைபோல் நம்பவைக்கிறது. இந்த வாள்வீச்சைவிட அவர்களின் வாய்வீச்சு மேடையை அதிரவைக்கிறது. அநீதியை அடியோடு ஒழித்துவிடக் கங்கணம் கட்டியுள்ள கர்ம வீரர்களெனத் தம்மைப் பறைசாற்றும் ஒவ்வொருவரும் மற்றவரை நார் நாராய்க் கிழிக்கவென ஒரு தொகைக் குற்றச்சாட்டுகளைப் பொழிந்து தள்ளுகிறார்கள். மக்கள்-மேடைக்கு வெளியே, வாய் பார்த்தபடி நிற்கிறார்கள்.

தேர்தல் இப்படித்தான். அதில் அள்ளி வீசும் வாக்குறுதிகள் வாக்குகளை உறுதிப் படுத்தவேயன்று வாக்கினை நிறைவேற்றுவதற்கு அல்ல. சாதாரண வியாபாரி தன் பொருளை விற்பதற்குக் கூறும் விளம்பரத்தில் கூட ஏதோ சில உண்மைத் தரவுகள் இருக்கக் கூடும். ஆனால் விளம்பரத்தைப் போலவே இருந்தும், ஜனாதிபதிப் பதவிக்கு நிலவும் பலமான போட்டியில், சிங்கள வாக்குகள் இருபுறமும் ஏறத்தாழச் சரிசமமாகப் பிரியும் நிலையில் இச் சிறுபான்மையினரது வாக்குகளே தீர்மானகரமானவையாக அமையும் வாக்குகளாகிவிடும். அதனாலேயே இத் தேர்தலில் சிறுபான்மையினர் முக்கியத்துவம் பெறுகின்றனர். அதனாலேயே சிறுபான்மையினரைக் கவருவதற்கான பகீரதப் பிரயத்தனங்களை இருபுறமும் மேற்கொள்ளுகின்றன. அதனாலேயே சிங்கள வாக்குகளை வசீகரிக்கும் தேர்தல் மந்திரமாக விளங்கிவந்த இன வாதத்தைக் கக்க முடியாமல் திணறுகின்றனர்.

இப்போது நிகழும் ஜனாதிபதித் தேர்தலில் பலர் போட்டியிட்டாலும் நடைமுறையில் அறுதியான முன்நிலைப் போட்டியாளர்களாக அமையப்போவது சந்திரிக்காவும் ரணிலுமே என்பது வெட்ட வெளிச்சம்.

இருப்பினும், வாசுதேவ நாணயகார, ஜே.வீ.பி.யின் நந்தன குணதிலக்க, மற்றும் சிங்கள அதிதீவிரவாதிகளைப் பிரதிநிதிப் படுத்தும் பேராசிரியர் ஹரிஸ் சந்திர விஜேதுங்க என்பவர்களுக்கு வெற்றிவாய்ப்பு அருகேகூட இல்லாவிட்டாலும் அவர்களுக்கு இம் முன் நிலைப் போட்டியாளர்களின் வெற்றி வாய்ப்பை அருகிவிடச் செய்கின்ற சிறியதொரு பாத்திரம் மட்டும் இத் தேர்தலில் உண்டு.



கடந்த ஜனாதிபதித் தேர்தலில் இவர்கள் போட்டியிடவில்லை. ஜே.வி.பி ஆதரவாளர்களின் வாக்குகள் சந்திரிக்காவின் பக்கம் இருந்தது. வாசுதேவ நாணயகாரவின் ஜனாதிபதித் தேர்தலில் முழ்கி எழுவது தனக்கு கூடுதல் அனுகூலமானதென ஜனாதிபதி கருதியிருக்கலாம்.

அதேவேளை அண்மையில் நிகழ்ந்த மாகாணசபைத் தேர்தல்களில் சகல மாகாணங்களிலும் பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சியைக் கைப்பற்றியதால் இதுவே நல்ல சந்தர்ப்பம் என்ற கணிப்பு அவருக்கு ஏற்பட்டிருக்கலாம். பொதுவாக மக்கள் மத்தியில் ஐ.தே.க.வைவிட பொ.ஜ.முக்கான ஆதரவு சற்று அதிகமாக உள்ளதுபோன்ற தோற்றப்பாடே இத் தேர்தல்களில் வெளியே தெரிந்தது. அதையே அவரும் நம்பியிருக்கலாம்.

அத்தோடு இவ் வருடத்திற்குள் தேர்தல் வைத்தாலே சந்திரிகாவுக்கு வெற்றி வாய்ப்பு உண்டு என அவரின் நம்பிக்கைக்குரிய சாஸ்திரி ஒருவர் கணித்துக் கொடுத்ததாகவும் கூறப்படுகிறது.

இதனையடுத்து அவர் எடுத்த அதிரடி முடிவே இந்த ஜனாதிபதித் தேர்தலை நடத்தும் முடிவு.

இதில் அவர் எதிர்பார்த்த அனுகூலங்கள் உண்டென்பது ஓரளவு உண்மையானாலும் வேறு பல காரணிகளும் இத் தேர்தலின் தலைவிதியில் செல்வாக்குச் செலுத்துகின்றன.


அதில் முக்கியமான ஓர் அம்சம்தான் சிறுபான்மையினரின் விருப்பு என்பது.

அண்மைய மாகாணசபைத் தேர்தல்களில் சிறுபான்மையினரின் விருப்பு என்னவென்பதைக் கண்டு கொள்ள அதிக சந்தர்ப்பம் இருக்கவில்லை. பிரதான காரணம்- அது சிறுபான்மையினரின் பிரதான பிரதேசமான வடக்கு கிழக்கு வாக்குகள் இத் தேர்தல்களில் சம்பந்தப்படவில்லை. அதேவேளை கொழும்பு, யார் வந்தாலும் இப் பிரச்சினையை அன்றிரவே தீர்த்துவிட்டுத்தான் மறுகாரியம் பார்ப்பாகன் போலும் என எண்ணத்தோன்றும். ஆனால் அதேசமயம், இந்தளவுக்கு இனப் பிரச்சனையத் தீர்த்தே ஆகவேண்டுமெனக் கங்கணம் கட்டியுள்ள இவர்கள் இருவரும் இவ்விடயத்தில் ஒன்றாகச் சேர்ந்து செயற்பட்டிருந்தால் எப்போதோ இதைத் தீர்த்திருக்கலாமே என்று கேட்டுப் பார்க்கும்போதுதான் இந்த அக்கறையின் போலித்தனம் புலப்படுகிறது. இப்படியொரு உடன்பாட்டை ஈட்டுவதானால் சந்திரிக்கா முன்வைத்த தீர்வுத் திட்டத்தை சாதகமானதாக்கி ரணில் இனப்பிரச்சிக்கான தீர்வுக்கு வழியேற்படுத்தியிருக்கலாம். ரணில் செய்யவில்லை. அதற்கு இரண்டு காரணங்கள். ஒன்று, தமிழ் மக்களுக்கான அதிகளவு அதிகாரப் பகிர்வை வழங்க விரும்பாத சிங்கள ஆதிக்கவாத உணர்விலிருந்து விடுபட முடியாமை. அடுத்தது இனப்பிரச்சினையைத் தீர்த்த பெருமை பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு சேரக்கூடாதென்ற எண்ணம். இனப் பிரச்சனைக்கு ஒரு ஏற்புடைய தீர்வைக் கண்டு சமாதானத்தை நிலைநாட்டுமிடத்து ஏற்படக் கூடிய ஒரு சுபீட்சம் அதை உருவாக்கிய கட்சிக்கு அரசியல் ரீதியாகப் பேராதரவை ஏற்படுத்திவிடும் என்பதே அவரது எண்ணத்திற்குக் காரணம். அப்படியொரு தீர்வை வழங்குவதாயிருந்தாலும் அதைத் தனது ஆட்சியில் வழங்கி ஏன் அப் பெருமையைத் தனதாக்கிக் கொள்ளக் கூடாது, என்ற அரசியல்தனமான சிந்தனைதான் ரணிலை இதில் ஒத்துழைக்காது இருக்க வைத்தது.

அதேவேளை தீர்வு ஏற்படாதிருக்கும் வரை யுத்தம் தொடரும். அழிவுகளும், துன்பங்களும் பெருகும். விலைவாசி உயரும். சபையை புலிகள் எப்போதோ நிராகரித்து விட்டார்கள். அதற்கு இடைக்கால நிர்வாக சபை அமைப்பது என்றால் அதை அவர்கள் எப்படி ஏற்பார்கள்? தற்போதைய சந்திரிக்கா அரசுகூட இடைக்கால ஆலோசனைச் சபை என்ற ஒன்றை இப்போது அறிவித்து உள்ளது.

இதைவிட ரணில் தெரிவிக்கக்கூடிய தீர்வை எப்படி நிறைவேற்றப் போகிறார் என்பதையும் அவர் கூறியாக வேண்டும். நிறைவேற்ற வழியில்லாத நிலையில் எதைத் தெரிவித்தாலும் எதுவும் ஆகப்போவதில்லை. இங்கு ஏதாவது அரசியலமைப்பு மாற்றத்தை நிறைவேற்ற வேண்டுமென்றால் அதற்கான மூன்றில் இரண்டு பாராளுமன்றப் பெரும்பான்மையை எப்படி ஏற்படுத்தப் போகிறார் என்ற கேள்விக்கும் விடைதர வேண்டும். இப்போது இவர் எதிர்ப்பதைப் போலவேதான் அப்போது பொதுஜன ஐக்கிய முன்னணியும் இவரது தீர்வுத்திட்டத்தை எதிர்க்கும். விகிதாசாரத் தேர்தல் முறையினால் எந்தக் கட்சிக்கும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிட்ட வாய்ப்பில்லை. இந்நிலையில் இவரால் எப்படி தனது தீர்வை பாராளுமன்றத்தில் நிறைவேற்ற முடியும் என்பதற்கு விளக்கம் தர வேண்டும்.

இதைவிட பிரதானமான விடயம், தற்



அப்பொருட்கள் இல்லாதிருப்பதற்கு யாரும் கேள்வி கேட்க முடியாது. நம்புவதும் நம்பாததும், நம்பாதிருந்து நம்புவதும், நம்பி ஏமாந்து நம்பாதிருப்பதும் நம்மைப் பொறுத்தது. அதே போல்தான் இத் தேர்தல் வரக்குறுதிகளும்.

தேர்தலில் கூறப்பட்ட வாக்குறுதிகளை நிச்சயம் நிறைவேற்றித்தான் ஆகவேண்டும் என்று சட்டம் ஏதும் இல்லை. அவ்வாறு நிறைவேற்றாவிட்டால் அதைக் குற்றம் என்று தீர்ப்பிட நீதி மன்றமும் இல்லை. அக் குற்றத்திற்கு என்றொரு தண்டனையும் இல்லை. இங்கு குற்றமா இல்லையா என்று தீர்மானிப்பது மக்கள்தான். அதற்கான தண்டனையை அளிப்பதும் மக்கள்தான். அந்த ஆட்சியை அங்கீகரிப்பதா மாற்றுவதா என்று தீர்மானிப்பதும் மக்கள்தான்.

அதனால்தான் அரசியல்வாதிகளுக்கு தேர்தல் காலத்தில் மக்கள் மீதான கரிசனை திடீரெனப் பிறக்கிறது. மக்களை மயக்க- நம்பவைக்க எத்தனையோ நாடகங்கள் அரங்கேறும் நேரம் அதுதான்.

இப்போது அரங்கேறியுள்ளதோ ஜனாதிபதித் தேர்தல்க் காட்சி! இலங்கைத் தேர்தல் வழித்தொடரில் அண்மைக் காலங்களில் ஏற்படுத்தப்பட்ட புதிய, அதிகாரக் குவிப்புக்கு அத்திவாரமிட்ட அரசியல் சாதனத்தின் சிம்மாசனமாக விளைந்தது இந்த நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதிப்பதவி. இதை உருவாக்கியவர் ஜே.ஆர். அதுவரை நிலவிய பாராளுமன்றத்தின் பலத்தையெல்லாம் உறிஞ்சிக் குடித்த பெரும் பதவியாகி, பாராளுமன்றத்தைச் செல்லாக் காசாக்கிவிட்டது இது. அது மட்டுமன்றி, இந் நாட்டின் இனப் பிரச்சனையைக் கையாளுவதோ, பொருளாதாரத்தைக் கையாழுவதோ, சட்டம் ஒழுங்கை நிர்வகிப்பதோ...வென எல்லாவற்றையும் தனியொருவரின் கையில் தங்கியிருக்கச் செய்தது அது. அதில் இருப்பவர் நல்லது நினைத்தால் நல்லது நடக்கும்; கெட்டது நினைத்தால் கெட்டது நடக்கும், அவர் உறங்கினால் நாடு உறங்கிவிடும், விழித்திருந்தால் நாடு விழித்திருக்கும் என்ற அளவுக்கு மொத்த நாட்டையே தனி ஒருவரின் வடிவத்துக்கு மாற்றிவிட வகைசெய்தது ஜனாதிபதி எனும் இப்பதவி.

அதனால் மற்றெல்லாத் தேர்தல்களையும் விட ஜனாதிபதித் தேர்தலே இன்று இந் நாட்டின் அதி முக்கியத்துவம் வாய்ந்த தேர்தலாக அமைந்திருக்கிறது. அத்தகைய ஒரு தேர்தல்தான் இப்போது எம் முன்னே குதித்துள்ளது.

இத் தேர்தலில் சிறுபான்மையினருக்கு என்ன முக்கியத்தும்? அதாவது தமிழர்களுக்கு, முஸ்லிம்களுக்கு, மலையகத் தமிழருக்கு என்ன முக்கியத்துவம்? நிச்சயமாக ஜனாதிபதிப் பதவியை எட்டிப் பிடிக்க முடியாத சமூகத்தவர்கள் இவர்கள்.

பெரும்பான்மைச் சமூகமான சிங்களச் சமூகத்திலிருந்தே இந்நாட்டில் ஒரு ஜனாதிபதி தேர்ந்தெடுக்கப் படப்போகிறார். ஆதரவாளர்களும் சந்திரிக்கா பக்கமே சாய்ந்திருந்தனர். இம்முறை இவ்விருவரும் தேர்தலில் குதித்துள்ளதால் சந்திரிக்காவுக்கு விழக்கூடிய வாக்கு வங்கியிலேயே இவர்களும் அள்ளியெடுக்கப்போகிறார்கள். ஆயினும் ஹரிஸ்சந்திர அள்ளும் இனவாதச் சிங்கள வாக்குகள் ரணிலை அதிகம் பாதிக்கும் என்று கருதுவதற்கில்லை. ஏனெனில் ஒருபுறம் இது ஹரிஸ் சந்திரவைச் சுற்றியுள்ள ஒரு சிறு குழுவின் உணர்வுகளை முன்னெடுப்பதாக அமைந்துள்ளதேயன்றி ஒரு பாரிய இயக்கமாகப் பரிணமித்திருக்கவில்லை. மறுபுறம் வீரவிதான போன்ற சிங்கள இனவாத அமைப்புக்களுடனும் ரணிலின் ஐ.தே.கவுக்கு நெருங்கிய தொடர்புண்டு.

இந் நிலையில் தெளிவான இரு துருவங்களாக இந்த ஜனாதிபதிப் பதவிக்காகப் போட்டியிடும் ரணில், சந்திரிக்கா ஆகிய இருவரில் யாருக்கு வெற்றி வாய்ப்பு உள்ளது என்பதே கேள்வியாகும்.

ஒரு விதத்தில் பார்த்தால் இந்த ஜனாதிபதித் தேர்தலை உரிய காலத்திற்கு முன் அவசரமாக நடத்துவதில் சந்திரிக்காவுக்கு அனுகூலங்கள் உண்டோ என்று யோசிக்கத் தோன்றும். அப்படியான சில அனுகூலங்கள் இருக்கத்தான் செய்கின்றன. முதலாவதாக, ஆட்சியில் இருந்துகொண்டு தேர்தலில் போட்டியிடுவதில் பல ஆதாயங்கள் உள்ளன. பாராளுமன்றம் கையிலிருப்பது ஒரு பக்கபலம். இதன் மூலம் அரசின் வளங்களை ஆட்சியிலுள்ளவர்கள் தங்களுக்குச் சாதகமாகப் பாவித்துக் கொள்ளலாம். முக்கியமாக பிரசார சாதனங்களான தொடர்பூடகத் துறையை தனது ஊதுகுழலாக இயக்கலாம். தேர்தல் நெறிமுறைகளின்படி சில கட்டுப்பாடுகள் இதில் விழுந்தாலும் அவற்றைத் தாண்டி இவற்றினூடாகத் தங்கள் பிரசாரத்தை எடுத்துச் செல்ல நிறையவே தந்திரமான நுட்பங்கள் உள்ளன. நீண்டகாலத் தேர்தல் அனுபவங்களில் பழம்தின்று கொட்டை போட்டவர்களுக்கு இது சின்ன விஷயம்.

அத்தோடு தேர்தலின்போதும் தேர்தல் அதிகாரிகள், பொலிஸ், மற்றும் பாதுகாப்புப் படையினரை அனுகூலமாக்கிக்கொள்ள வசதி வாய்ப்பு உண்டு. இதுதவிர தமது தரப்பின் தேர்தல் அத்துமீறல் சம்பவங்களை மெத்தனப் போக்கில் கையாள வழிசெய்ய முடியும். பல்வேறு அரச நிறுவனங்களின் உடைமைகளை, குறிப்பாக வாகனங்கள் போன்றவற்றைத் தேர்தல் வேலைகளில் ஈடுபடுத்தலாம். இதைவிட தேர்தல்க் காலத்தில் மக்களை மயக்கும் புதிய சலுகைகள், சம்பள உயர்வுகள், கட்டணக் குறைப்புகள், வேலை வாய்ப்புகள் போன்ற 'எலும்புத் துண்டுகளை' அரசாங்கப் 'பெட்டகத்திலிருந்து' அள்ளி வீசலாம்.

அதனால் பாராளுமன்றத் தேர்தலை முன்னால் வைத்துவிட்டு அதன் பின் ஜனாதிபதித் தேர்தலுக்குச் செல்லுவதைவிட பாராளுமன்றம் தனது கைக்குள் இருக்கும் போதே மலையகம் ஆகிய இடங்களின் பெறுபேறுகள் சிறுபான்மையினரின் ஆதரவைப் பெருமளவு கொண்டிருப்பதற்கான அறிகுறியைக் காட்டவில்லை.

எனவே மாகாணசபைத் தேர்தல் வெற்றிகளைக் கொண்டு மேற்கொள்ளப்படும் மதிப்பீடு முழுமையானதாக இருக்கப் போவதில்லை. அத்தோடு மாகாணசபைத் தேர்தல்களின் மனநிலை வேறு, ஜனாதிபதித் தேர்தலின் மனநிலை வேறு. மக்கள் இரண்டிலும் ஒரே வகையில்தான் செயற்படுவார்கள் என்று கணிக்க முடியாது. இலங்கையில் மாகாண சபைகள் ஒரு புதிய வடிவங்களாகையால் இந்த வேறுபாட்டை இங்கு உணர அதிக சந்தர்ப்பங்கள் வாய்த்திருக்கவில்லை. இந்தியாவில் குறிப்பாகத் தமிழ்நாட்டில் இதைத் தெளிவாகக் காணலாம். அங்கு தமிழ்நாட்டு மாநில சபைக்கான தேர்தலில் மாநிலக் கட்சியொன்றுக்கு சார்பாக வாக்களிக்கும் அதே மக்கள் மத்திய அரசுக்கான தேர்தலில் வேறுவிதமாகச் செயற்பட்ட பல சந்தர்ப்பங்களை நாம் பார்க்கலாம்.

-நரன்-

இங்கு ஜனாதிபதித் தேர்தல் என்ற விடயம் மாகாண சபைக்கான தேர்தல் நலன்களைவிட அளவிலும் பண்பிலும் வித்தியாசமான பல அம்சங்களைக் கொண்டிருக்கிறது. இதனால் முன்கூட்டித் தேர்தல் வைப்பதன் அனுகூலங்களாகக் காணப்பட்ட விடயங்கள் தேர்தலின் தலைவிதியைப் பெரிய அளவில் கட்டுப்படுத்தும் என்பதற்கில்லை.

இத்தோடு இன்னொரு புதிய அம்சம் தேர்தலில் கனிசமான செல்வாக்கைச் செலுத்துகிறது. அதுதான் தனியார் ஊடகத் துறை. முன்னர் அரசாங்கத்தில் இருப்பவர்கள் தமக்கு மட்டுமே அதன் ஊடகத் துறையைச் சாதகமாகப் பயன்படுத்தும் வாய்ப்பு இருந்தது. ஆனால் தற்போது அதிகரித்திருக்கும் தனியார் ஊடகங்களினூடாக மற்றையோரும் எதிர்ப்பிரசாரங்களை வெளிப்படுத்த முடியுமாக இருக்கிறது. இந்நிலையில் இத் தேர்தல் அவ்வளவு சுலபமான வெற்றியை யாருக்கும் ஈட்டித் தரப்போவதில்லை.

★★★

இதேவேளை இந்த ஜனாதிபதித் தேர்தலில் எல்லோரும் அவதானிக்கக்கூடியதாக இருந்த பிரதான அம்சம் இரு பிரதான கட்சிகளதும் முக்கிய பிரசாரம் - இனப்பிரச்சனைக்கான தீர்வு தொடர்பானதாகவே இருக்கிறது. எதிர்க்கட்சிகளின் மீதான குற்றச்சாட்டுக்களும் இனப்பிரச்சனைக்கு தீர்வுக்கு அவர்கள் எவ்வாறு குந்தகமாக உள்ளார்கள் என்பதைக் கூறுவதாகவே இருக்கிறது. இவ்வாறு இரு சாராராலும் அதி கரிசனை காட்டப்படும் ஒரு விடயமாக இந்த இனப்பரச்சனை உயர் அந்தஸ்தைப் பெற்றுவிட்டதைப் பார்க்கும்போது இவ்வளவு அக்கறையுள்ள இவர்கள் இருவரில் கெடுபிடிகளும், பாதுகாப்பற்ற அம்ச உணர்வும் அதிகரிக்கும். இவையே அரசாங்கத்தின் மீதான வெறுப்புணர்வை மக்கள் மத்தியில் தோற்றுவிக்கும். அவ்வுணர்வில் நின்றுதான் ஆட்சியைக் கைப்பற்றிக் கொள்ளலாம் என்பதுவே அவரது எண்ணக்கிடைக்கையாக இருந்தது.

ஆனாலும் அவராலேயே உதாசீனப்படுத்தப்பட்ட இனப் பிரச்சனையை தற்போது தேர்தல் களத்தில் குறித்ததும், தானே உயர்த்திப் பிடிப்பது பலருக்கு வேடிக்கையாகத் தெரிகிறது. அதை விசுவாசமாக நம்புவமளவுக்கு தமிழ்ச் சமூகம் தயாராக இல்லை.

இவ்விடயத்திலும் கவனிக்கப்படவேண்டியது என்னவென்றால், இனப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கான இவ்விருவரதும் பிரசாரங்கள் இவ்வினப் பிரச்சனையின் தாக்கத்துக்கு ஆளாகியுள்ள சிறுபான்மையினரைவிட பெரும்பான்மைச் சிங்கள சமூகத்துக்கிடையேதான் விவாதிக்கப் படுகிறது.

இங்கு சந்திரிக்காவின் வாதம் என்னவாக இருக்கிறதென்றால், தான் வைத்துள்ள தீர்வுத் திட்டத்தை எதிர்த்ததால் ஐ.தே.க. தான் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு முட்டுக்கட்டை போடுகிறது என்றும், தான் திரும்பவும் பதவிக்கு வந்ததும் இனப்பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு காணுவேன் என்றும் அவர் கூறுகிறார். ஆனால் அதை எப்படிச் செய்வார்? இப்போது கிடைக்காத ஐ.தே.க. ஆதரவு அப்போது கிடைக்குமா? அல்லது பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை எப்படி உறுதி செய்வார் இவை தவிர வேறு மர்மமான மார்க்கங்கள் உண்டா? அப்படியாயின் ஏன் அவற்றை முன்னரே பயன்படுத்தித் தீர்க்கவில்லை என்ற கேள்விகளுக்கு இவர் விடை தரவில்லை.

அதேவேளை ரணில் கூறுவதும் அர்த்தமற்றதாகவே உள்ளது. அவர் தான் பதவிக்கு வந்ததும் புலிகளுடன் பேசுவேன் என்கிறார். இடைக்கால நிர்வாகத்தை புலிகளுக்கு வழங்குவேன் என்கிறார். ஆனால் அவர் புலிகளுடன் பேசுவது பெரிய விடயமல்ல. அண்மைக் காலங்களில் பதவிக்கு வந்த எல்லாத் தலைவர்களும் பேசியுள்ளார்கள். ஜே.ஆர், பிரேமதாசா, சந்திரிக்கா யாவரும் பேசியவர்கள் தான். எனவே பேசுவது என்பது மட்டுமே பிரச்சனைக்குத் தீர்வாகிவிடாது. என்ன தீர்வைக் முன்னெடுக்கப்போகிறார் என்பதைத் தெரிவிக்க வேண்டும். கடைசி சுயாட்சியை ஏற்கிறாரா, ஒற்றையாட்சியை மாற்றத் தயாரா, மாகாண சபைக்குத்தான் அதிகாரங்களைக் கூட்டிக்கொடுக்கவுள்ளாரா, அவ்வதிகாரங்கள் என்ன, வடக்கு-கிழக்கு இணைப்பை ஏற்கிறாரா, முஸ்லிம் மாகாண சபையை ஏற்கிறாரா என்ற ஏதாவது ஒரு வடிவத்தையாவது சொல்ல வேண்டும். அதை அவர் சொல்லவில்லை. அப்படிச் சொன்னால்தான் அதை அமுலாக்க இடைக்கால நிர்வாக சபையை அமைக்க முடியும். இப்போதுள்ள மாகாண போதுள்ள மாகாண சபையையும், சந்திரிக்கா முன்வைத்துள்ள தீர்வுத் திட்டத்தையும் நிராகரித்துள்ள புலிகள் ஏற்கக் கூடிய என்ன தீர்வை இவர் வழங்கப் போகிறார் என்பது கேள்விக்குறி. ஏனெனில் சந்திரிக்காவின் தீர்வுத் திட்டத்தை இவர் நிராகரிக்கிறார். அத்தோடு வடக்கு-கிழக்கு இணைவு, ஒற்றையாட்சியை மாற்றுதல், நிலம் தொடர்பான அதிகாரம் போன்றவற்றை நிராகரித்து இவரால் எப்படி இதற்குப் பலமடங்கு மேலான புலிகளின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்ய முடியும்?

இக் கேள்விகள் அப்படியே கிடக்க இத் தேர்தல் களத்தில் நிகழும் சொற்போர்களில்தான் இருவரும் அமர்க்களப் படுத்துகின்றனர்.

வடக்கு- கிழக்கு ஆட்சியை 2 வருடத்திற்கு புலிகளிடம் ஒப்படைப்பேனென ரணில் கூறியதாக 'தமிழ் நெட்' செய்தியொன்று தெரிவித்துள்ளதை பொ.ஜ.மு மிகப் பெரிய எதிர்ப் பிரசாரத்துக்கான விடயமாக்கிக் கொண்டது. "அந்தோ, ரணில் வந்தால் வடக்கு கிழக்கை அப்படியே அள்ளி புலிகளின் கைகளில் கொடுத்துவிடப்போகிறார்" என்று சிங்கள மக்களைப் பயங்காட்ட விளைந்தது. இப்பிரசாரத்தின் அடிநாதமாக ஒருவகை இனவாதச் சுவை இழையோடியது. அத்தோடு "புலிகளைப் படைகளில் சேர்ப்பேன்!" என்றும் ரணில் கூறிவிட்டார். அதனால் நாடே புலிகளின் வசம் போய்விடப்போகிறது என்பது போல் மற்றொரு பிரசாரம் கிளறப்பட்டது. ஆனால் சமாதானம் என்று ஒன்று ஏற்படுமானால் இலங்கை அரசியல் யாப்பால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு அரசியல் அலகில் இடைக்கால நிர்வாகம் வழங்கப்படுவதோ, போராளிகள், மற்றும் தமிழ் இளைஞர்கள் படைகளில் உள்வாங்கப் படுவதோ உசிதமான விடயங்களே என்பதை இவர்கள் கருத்துக்கெடுக்கவில்லை. அவற்றுக்கு எதிரான மனப்பாங்கையே ஏற்படுத்த விளைகின்றனர்.

இதைவிட மற்றொரு சுவையான விடயம், "சந்திரிக்காவை புலிகளிடம் ஒப்படைப்பேன்!" என ரணில் கூறிய ஒரு நகைச்சுவை.

ரணிலின் பிரசாரங்களிலும் பல கேவலமான வார்த்தைப் பிரயோகங்கள் தாராளமாகவே புளங்குகின்றன.

இவ்வாறு இரு தரப்பாரும் புரியும் தேர்தல் போரில் இனப் பிரச்சனை பிரதான விடயமாக எழுந்தாலும் அதற்கான காத்திரமான புதியதொரு தீர்வுத் திட்டத்தை- வழிவகையை அடையாளம் காண முடியவில்லை. இவை வழமையான தேர்தல் வாசகங்கள்போல் அர்த்தமற்ற சோடனைகளாகவே தெரிகின்றன.

அதேவேளை இனப் பிரச்சனைக்கான தீர்வை எதிர்நோக்கியுள்ள தமிழ் பேசும் மக்களது அரசியல் தலைமைகளின் நிலைப்பாடுகளும் தெளிவற்றுக் காணப்படுகின்றன. அவற்றை அடுத்த வாரம் நோக்குவோம்.

~ஸ்பெஷல் ரிப்போர்ட்~

# தேர்தல் புயலில் சிக்கித் தவிக்கும் தமிழ்த் தலைமைகள்

சத்தியன்

திடீரென அறிவிக்கப்பட்ட ஜனாதிபதித் தேர்தல் மக்களை அதிகம் பாதிக்கவில்லை. எதிர்க்கட்சியைக் கூட கலக்கத்தில் ஆழ்த்தவில்லை. ஆனால் இதனால் அதிகம் குழம்பிப் போனவை தமிழ்க் கட்சிகள்தான்.

சிங்கள மக்கள் தேர்தல் வாடையைச் சற்று முகர்ந்தே இருந்தார்கள். அண்மையில் பெரிய அளவில் சிங்களப் பிரதேசங்களெங்கும் நடந்து முடிந்த மாகாணசபைத் தேர்தல்களில் உழன்று தேறியிருந்தார்கள். அதனையடுத்து பாராளுமன்றப் பொதுத் தேர்தல் அண்மிப்பதை உணர்ந்திருந்தார்கள். அரசாங்கத்தின் பக்கத்தில் பாராளுமன்றத்தின் 5 ஆண்டுப் பூர்த்தி, ஜனாதிபதியின் 5 ஆண்டு சேவை என்ற பல்வேறு பெயர்களில் நடத்தப்பட்ட கூட்டங்கள், பேரணிகள் எல்லாம் ஏதோ ஒரு தேர்தலுக்கான பலக் கணிப்பீடு என்பதும் புரியக்கூடியதாக இருந்தது. அதனால் அவர்களுக்கு இந்த முற்தள்ளப்பட்ட ஜனாதிபதித் தேர்தல் ஒன்றும் அவ்வளவு அதிர்ச்சியாக இருக்கவில்லை.

ஜனாதிபதியைப் பொறுத்தவரை ஓர் இக்கட்டான நிலைமை இருந்தது. அதாவது அடுத்த ஆட்சிக் காலத்தை வென்றெடுப்பதற்கான ஓர் அரசியல் வழிவகையைத் திட்டமிட வேண்டியிருந்தது. அதில் பாராளுமன்றம், ஜனாதிபதிப் பதவி ஆகிய இரண்டையும் எப்படித் திரும்பவும் தக்கவைக்கலாம், பாராளுமன்றத்தில் தமது பெரும்பான்மையை எப்படி அதிகரிக்கலாம் என்பது குறித்த மதியூகமான முடிவுகளை எடுத்தாக வேண்டியிருந்தது.

அடுத்த வருடம் பாராளுமன்றத் தேர்தல் எதிர்நோக்கப்படுகின்ற நிலையில், அப் பாராளுமன்றத் தேர்தலை எதிர்கொண்டுவிட்டு ஜனாதிபதித் தேர்தலுக்குப் போவதா, ஜனாதிபதித் தேர்தலை எதிர் கொண்டுவிட்டு பாராளுமன்றத் தேர்தலுக்குப் போவதா- இந்த இரண்டில் எது அனுகூலம் கூடியது என்று சிந்திக்க வேண்டியிருந்தது.

இதில் பாராளுமன்றத் தேர்தலில் வெல்வதற்கா, ஜனாதிபதி தேர்தலில் வெல்வதற்கா அதிக வாய்ப்பு உண்டு என்பதைப் பொறுத்து வெற்றி வாய்ப்புக் கூடிய தேர்தலை முதலில் வைப்பதே மதியூகமானதெனக் கருதியதால் ஜனாதிபதித் தேர்தலை முதலில் வைக்க முடிவு செய்தார். - அதுவே வெற்றி வாய்ப்புக் கூடியதாக அவருக்குப்பட்டது.

இந்தக் கணிப்பு சரியோ, தப்போ-இம் முடிவுக்கு அவரை இட்டு வரப் பல காரணங்கள் இருந்தன. அண்மைய ஊர்வலங்கள், பேரணிகளின் ஜனத்திரள், இறுதித் தேர்தல்களின் பெறுபேறு, எதிர்க் கட்சியினர் ஜனாதிபதித் தேர்தலை எதிர்பார்த்திருக்காத நிலைமை, எதிர்க்கட்சித் தலைவரைவிட தனக்குப் பொது மக்களிடம் செல்வாக்கு உள்ளதான தோற்றப்பாடு,.... எனப் பல விடயங்களைத் தனக்குச் சாதகமாகக் கணித்து அவர் தன்னைப் பணயம் வைத்துப் பாராளுமன்ற வெற்றியை எய்தும் இந்தப் பெரு முடிவினை எடுத்திருந்தார்.

ஆயினும் எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி, இத் திடீர் அறிவிப்பால் கலங்கிப் போய்விடவில்லை. சொற்ப காலத்திற்குள்ளேயே தன்னைச் சுதாகரித்துக் கொண்டு ஒரு முழுமுச்சான போட்டிக்குத் தயாராகிவிட்டது. ஒரு ஜனாதிபதிக்கு உரித்தான பிரபல்யத்தைத் தேடிக் கொள்ளாதிருந்த அதன் தலைவர் ரணில் விக்கிரசிங்கவும்கூட ஒரு விளையாட்டு வீரனுக்குரிய சுபாவத்துடன் இதை நிதாதனமாகக் கையேற்று நேரடியாகவே சவாலை எதிர்கொள்ளத் தயாராகி விட்டார்.

ஆனால் இக்கட்டு யாருக்கு நேர்ந்ததென்றால் எங்கள் தமிழ்க் கட்சிகளுக்குத்தான். ஏனெனில் பாராளுமன்றத் தேர்தலல்லாமல் ஜனாதிபதித் தேர்தலே அவர்கள் முன் குதித்துள்ளது. பாராளுமன்றத் தேர்தலாய் இருந்தால் அதில் அவர்கள் யார் பக்கம் இருப்பது என்று முடிவெடுக்க வேண்டிய நெருக்கடி இருக்காது. அவரவர் தங்கள் தங்கள் கட்சிகளுக்காகவே வேலை செய்து தங்களால் இயன்ற ஆசனங்களைக் கைப்பற்றுவதில் முனைந்திருப்பர்.

அரசாங்கமமைக்க எந்தக் கட்சிக்காவது ஆதரிப்பதா அல்லது எதிர்க் கட்சிகளாகச் செயற்படுவதா என்பதையெல்லாம் அவர்கள் தேர்தல் பெறுபேறுகளின் பின்னர் தீர்மானிக்கக் கூடியதாக இருந்திருக்கும்.

அப்படியான ஒரு பாராளுமன்றத் தேர்தலுக்குப் பின்னர் இந்த ஜனாதிபதித் தேர்தல் வந்திருந்தாலும்கூட பாராளுமன்றத் தேர்தல் பெறுபேறுகளைப் பொறுத்து, அதில் அதிகாரத்தைக் கைப்பற்றிய கட்சியைப் வைத்து யாருக்கு ஆதரவளிப்பது பயனுள்ளது என்று கணக்குப் பார்க்க வாய்ப்பு இருந்திருக்கும்.

ஆனால் இவற்றிற்கெல்லாம் வாய்ப்பின்றி எல்லாவற்றையும் முந்தியடித்துக்கொண்டு இந்த ஜனாதிபதித் தேர்தல் வந்து நிற்பதே அவர்களுக்குத் தர்ம சங்கடத்தைத் தோற்றுவித்துள்ளது.

இப்போது இவர்கள் மூன்று வகைப்பட்ட முடிவுகளில் ஒரு முடிவை எடுக்க வேண்டியவர்களாகினர். ஒன்று சந்திரிக்காவுக்கு ஆதரிப்பதா இல்லையா என்ற முடிவு, இரண்டாவது ரணிலை ஆதரிப்பதா இல்லையா என்ற முடிவு. மூன்றாவது இடைப்பட்ட முடிவுகள்.

இந்த இடைப்பட்ட முடிவுகள் பலதாக இருக்கலாம். ஒன்றில் ரணில், சந்திரிக்கா இருவரையும் விடுத்து வாசுதேவ நாணயகார போன்ற மூன்றாவது வேட்பாளர் ஒருவரை ஆதரிப்பதாக இருக்கலாம். அல்லது தமிழ்க் கட்சிகளின் வேட்பாளர் ஒருவரை நிறுத்தி அவருக்கு வாக்களிக்கக் கோரலாம். அல்லது எவருக்குமே வாக்களிக்காது தேர்தலைப் பகிஷ்கரிக்கக் கேட்கலாம். அல்லது எதிர்ப்பின் அடையாளமாக சிதைந்த வாக்குகளைப் போடும்படி கேட்கலாம்.

ஆனாலும் இந்த இடைப்பட்ட முடிவுகளாகவுள்ள அனைத்துமே ரணில் அல்லது சந்திரிக்காதான் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படப்போகிறார் என்ற நியதியை மாற்றிவிடக்கூடியவையல்ல. அவை நேரடி விளைவை ஏற்படுத்துபவையல்ல. ஆனாலும், விரும்பியோ விரும்பாமலோ இந்த முதன்மை வேட்பாளர்களான இருவரில் யாராவது ஒருவரைப் பலப்படுத்தும் அல்லது பலவீனப்படுத்தும் பாத்திரத்தைத்தான் வகிக்கப்போகின்றன.

இந்த உண்மை தெரிந்திருந்தாலும் வெளிப்படைப் பார்வைக்கு தங்கள் சார்பு நிலைகளை வெளிக்காட்டாது மறைக்கக் கூடிய நிலைப்பாடுகளாக இந்த இடைப்பட்ட முடிவுகள் அமைந்திருக்கவே தமிழ்க் கட்சிகள் அவற்றிற்குள் புகுந்து கொள்வது வசதியானதெனக் கருதின.

இந்தவகையில் சரி பிழைகளுக்கப்பால் நேரடியான முடிவுகளை எடுத்த தமிழ்க் கட்சிகள் இரண்டு ஒன்று ஈ.பி.டி.பி. அது சந்திரிக்காவை ஆதரிப்பதாக முடிவெடுத்தது. மற்றது டெலோ. அது முடிவு செய்ய தாமதமானாலும் இறுதியில் ரணிலை ஆதரிப்பதான முடிவுக்கு வந்தது.

இடைப்பட்ட முடிவுகளில் முதலாவதாக முயற்சிக்கப்பட்ட எத்தனம் தமிழ்க் கட்சிகள் சார்பில் பொது வேட்பாளர் ஒருவரை தேர்தலில் நிறுத்துவது என்ற முயற்சி. இக் கருத்தை முதலில் தெரிவித்தது ஈ.பி. ஆர்.எல்.எ.ப். பின்னர் டெலோ அதனைத் தனதாக ஏற்றுக் கொண்டது. அத்தோடு ஈரோஸ், புளொட் ஆகிய கட்சிகளையும் இவை அணிசேர்த்துக் கொண்டன.

மாறி மாறி வந்த இரு பிரதான கட்சிகளுமே தமிழ் மக்களின் பிரச்சனைக்குச் சரியான தீர்வைத் தரவில்லை. அதனால் இரண்டிலும் நம்பிக்கை இழந்த மக்கள் தமது எதிர்ப்பைக் காட்டும் வண்ணம் பொது வேட்பாளருக்கு வாக்களிக்க வேண்டும் என்பதே இவர்கள் கூறிய காரணமாக இருந்தது.

ஆனாலும் இம் முடிவினையிட்டு சில கேள்விகள் இருந்தன.

இந்தப் பொது வேட்பாளர் ஒருபோதும் ஜனாதிபதிப் பதவிக்குத் தெரிந்தெடுக்கப்படப் போவதில்லையென்பது தெரிந்த விடயம். அவ்வாறிருக்கையில் இப் பொது வேட்பாளருக்குப் போடும் வோட்டுக்கள் விழலுக்கு இறைத்த நீராகிப் போகாதா என்பது முதற் கேள்வி. அப்படிப் பயனற்றுப் போவதைவிட, பிரதான வேட்பாளர்கள் இருவரில் யார் ஆட்சிக்கு வருவது ஒப்பீட்டளவில் அதிக சாதகமெனக் கணித்து அவருக்கு வாக்களிப்பது நல்லதில்லையா என்பது இதையொட்டிய இன்னோர் கேள்வி.

வரப்போகும் ஜனாதிபதி யார் என்பதைத் தீர்மானிப்பதைவிட எதிர்ப்பைத் தெரிவிப்பது பிரதானமானது எனக் கருதினால் எதிர்காலத்தில் நாம் எதிர்கொள்ளப்போகின்ற ஜனாதிபதி யார் என்பதை நாமே தீர்மானிக்கும் ஒரு வாய்ப்பைக் கைவிட வேண்டியவர்களாவோம்.

ஆனால் அதிலும் ஒரு பெரிய கேள்வியொன்று தொக்கி நிற்கிறது.

அதாவது எமது எதிர்ப்பைக் காட்டுவதற்கான அடையாளமாக நாம் நிறுத்தும் பொது வேட்பாளருக்கு தமிழ்ப் பிரதேசங்களில் விழுந்த வாக்குகள் அங்கு சந்திரிக்கா அல்லது ரணிலுக்கு விழுந்த வாக்குகளை விடக் குறைவானதாக ஆகிவிட்டால் நிலைமை என்ன? நாம் எதிர்ப்பைக் காட்ட எடுத்த முயற்சி தலைகீழாகி தமிழ் மக்களின் ஆதரவை வெளிக்காட்டுகின்ற ஒரு தோற்றப்பாட்டை ஏற்படுத்தி விடாதா?

அவ்வாறு ஆகுவதற்கு நிறைய சாத்தியக் கூறுகள் உள்ளன. எப்படியெனில் பொதுவாக தமிழ்ப் பிரதேசங்களில் உள்ள மக்கள் இப் பிரதான கட்சிகளில் நம்பிக்கையில்லாவிடத்து வெறுமனே வாக்களிக்காது தம்பாட்டில் இருப்பார்களேயன்றி இந்தப் பொது வேட்பாளருக்கு வாக்களித்தாக வேண்டுமெனத் திட சங்கற்பத்துடன் வாக்குச் சாவடிகளுக்குச் சென்று வாக்களிக்க முனைப்புக்காட்ட மாட்டார்கள். ஏனெனில் இவ் வேட்பாளர் ஜனாதிபதியாகப் போவதில்லை என்பது அவர்களுக்குத் தெரிந்த விடயம். மற்றயது, பொது வேட்பாளருக்கு வாக்களிப்பது ஒரு இலட்சிய காரியம் என்ற உணர்வு அவர்களுக்கு ஏற்படுமளவு தமிழ்க் கட்சிகளால் ஒரு பெரும் உணர்வலை ஏற்படுத்தப்படப்போவதில்லை. இதைவிட, இப் பொதுவேட்பாளரது முகம் எதுவென்பதையும் மக்கள் எடைபார்ப்பார்கள். அது சுரேஷா, சிறீகாந்தாவா, சித்தார்த்தனா என்பதற்குத்தகவே மக்கள் தம் விருப்பு வெறுப்புகளை வெளிப்படுத்துவார்கள். வெறுமனே 'பொது வேட்பாளர்' என்ற பெயரில் கேட்டாற்போல் இவர்களில் யாரையும் பொதுக் கனவானாக அங்கீகரித்துவிடமாட்டார்கள்.

இத்தகைய ஒரு சிக்கலை உணர்ந்ததாலோ, அல்லது தமக்குள் ஒரு பொதுத் தலைவரைத் தெரிந்தெடுக்க இந்தப் பொதுச் சேவைக்குப் புறப்பட்ட கட்சிகளுக்கு முடியாமல் போனதாலோ இவர்கள் குமார் பொன்னம்பலத்தை பொது வேட்பாளராக நிற்கும் படி கேட்டுச் சென்றார்கள்.

ஆனால் உண்மையில் குமார் பொன்னம்பலத்திற்கு அவ்வாறு ஒரு 'பொது' முகம் உள்ளதா என்பது கேள்விக்குரியது. அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் தலைவரான குமாரை எப்படி மக்கள் ஒரு பொதுமகனாகக் கணிப்பார்கள் என இவர்கள் நம்பினர்? இறுதியாகப் போட்டியிட்ட தேர்தல்களில் தமிழ் மக்களால் புறக்கணிக்கப்பட்ட அவர், இப்போது புலிகளை ஆதரித்துப் பேசி வருவதால் மட்டும் மக்கள் ஆதரவைப் பெற்றுவிட்டாரென எடைபோட முடியுமா? உண்மையில் குமார் புலிகளை ஏற்றுக் கொண்டுள்ளாரேயன்றி புலிகள் குமாரை ஏற்றுக்கொள்வதாகத் தெரிவிக்கவில்லை.

அது இறுதியில் வெளிப்படத்தான் செய்தது. பொது வேட்பாளராக நிற்கப் புலிகளின் அனுமதியைக் கோரியிருந்த அவருக்கு புலிகள் அனுமதியளிக்கவில்லை. அதனால் அவர் தானாகவே இந்தப் பொதுவேட்பாளர் முயற்சியிலிருந்து விலகிக் கொண்டதுடன் தான் அம் முயற்சிக்கு எதிரானவர் என அறிக்கையும் விடுத்தார்.

இதேவேளை புலிகள், சிங்கள தேசத்தின் ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்க நிகழும் இத் தேர்தலில் தமக்கு எந்த ஈடுபாடும் இல்லையெனக் கூறிவிட்டனர்.

அத்தோடு இந்தப் பொது வேட்பாளர் முயற்சி அப்படியே கைவிடப்பட்டுவிட்டது.

இதனையடுத்துத்தான் இத் தமிழ்க் கட்சிகள் தங்கள் தனிப்பட்ட முடிவுகளே மேற்கொள்ளவேண்டியவர்களாயினர்.

இப்போது இவை எதிர்பார்த்து நின்ற மற்றயதோர் விடயம் புலிகள் தலைவர் பிரபாகரன் தனது மாவீரர் தின உரையில் தமிழ் மக்களுக்கு தனது தேர்தல் நிலைப்பாடு பற்றி என்ன கூறப்போகிறார் என்பதே. ஆனால் அவர் இதைப்பற்றி எதுவுமே சொல்லவில்லை.

எனினும் இலண்டனில் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்டன் பாலசிங்கம் மாவீரர் தினத்தன்று ஆற்றிய உரையில் "சிறிலங்கா அரசியல் அமைப்பில் எமக்கு நம்பிக்கையில்லை. இதில் பங்குபற்றுவதால் எமது மக்களுக்கு விமோசனமும் இல்லை. ஆகவே இது விடயமாக நாம் அலட்டிக் கொள்ளத் தேவையில்லை. எமது கட்டுப்பாட்டிலுள்ள மக்கள் வாக்களிக்க மாட்டார்கள். ஏனைய இடங்களிலுள்ள மக்கள் என்ன செய்ய வேண்டுமென்பதைத் தாங்களே தீர்மானிக்கட்டும். அது அவர்களின் சுதந்திரம்" என்றார்.

இந்த சுதந்திரத்தை பாலசிங்கத்தின் உரையிலிருந்து உணர்ந்து கொண்டதாலோ என்னவோ, அதன் பின் டெலோ இயக்கம் ரணில் விக்கிரமசிங்கவை தாம் ஆதரிப்பதாக முடி வெடுத்துக் கொண்டது.

ஈ.பி. ஆர்.எல்.எ.ப். விடயத்தில்தான் பாரிய ஒரு பிரச்சனை இதன் பின் கிளம்பியது. ஈ.பி. ஆர்.எல்.எ.ப். செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச்சந்திரன் தமது கட்சியின் நிலைப்பாடென விடுத்த அறிக்கையில், இத் தேர்தலில் யாருக்கு வாக்களிக்க வேண்டுமெனக் கோரும் தார்மீக உரிமை தமக்கில்லையெனவும் மக்களை மதியூகமாகச் சிந்தித்து வாக்களிக்கும்படியும் கோரியிருந்தார்.

இந்த அறிவிப்பில் தென்பட்ட அர்த்தமற்றதன்மை யாதென்றால், மக்கள் எடுக்க வேண்டிய அந்த மதியூகமான முடிவு என்ன? சந்திரிக்காவை ஆதரிப்பதா, ரணிலை ஆதரிப்பதா, அல்லது வேறுயாரையும் ஆதரிப்பதா, பகிஷ்கரிப்பதா- எது? ஒவ்வொருவருக்கும் ஒவ்வொன்று மதியூகமானதாகத் தெரியும். ஒருமித்த ஒரு மதியூக முடிவை எடுப்பதற்கு மக்கள் என்ன ஒரு கட்சியா அல்லது இயக்கமா? மக்களுக்கு கட்சியல்லவா மதியூகமான முடிவைத் தெரிவிக்கவேண்டும்? இப்படி மக்களை மதியூகமாக முடிவெடுக்கும்படியான ஒரு மதியூகமற்ற முடிவை எடுத்திருப்பதாக அதன் செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச்சந்திரன் அறிவித்திருக்க, அதுகூட கட்சியின் முடிவல்ல என்று அதன் மூத்த தலைவர்களில் ஒருவரான முன்னாள் முதலமைச்சர் வரதராஜப் பெருமாள் மாற்று அறிக்கை ஒன்றை விடுத்தார்.

அம் முடிவு சுரேஷ் பிரேமச்சந்திரனின் தனிப்பட்ட முடிவெனவும் கட்சியின் மத்திய கமிட்டி கட்சி முடிவை விரைவில் தெரிவிக்கும் எனவும் அவர் கூறியிருந்தார்.

அதைவிட விரைவில் வெளிவந்த சுரேஷ் பிரேமச்சந்திரனின் மற்றொரு அறிக்கை வரதராஜப் பெருமாளைக் கட்சியை விட்டு விலக்கிவிட்டதாக அறிவித்தது. ஆனால் வரதரோ தன்னை விலத்த சுரேஷுக்கு அதிகாரமில்லையெனப் பதிலறிக்கை விடுத்துள்ளார்.

இத்தோடு அனைத்துக் கட்சிகளையும் ஒற்றுமைப்படுத்தி ஒரு பொது வேட்பாளரை முன்வைக்க முனைந்த அக் கட்சி தனக்குள்ளேயே ஒற்றுமையில்லாமால் இரு அணிகளாகப் பிளவுறும்அபாயத்துக்குள்ளாகிப் போனது. இந்த ஜனாதிபதித் தேர்தலில் இவர்கள் தாக்கம் செலுத்துவதற்குப் பதில் இத்தேர்தல்தான் இவர்களில் தாக்கம் செலுத்திவிட்டது.

புளொட்டைப் பொறுத்தவரை மௌனம்தான் அவர்களது நிலைப்பாடாக இதுவரை இருந்தபோதும் இப்போது சந்திரிக்காவை ஆதரிக்கச் சம்மதம் தெரிவிவித்துள்ளதாகச் செய்திகள் கிட்டுகின்றன. ஈரோஸ் இருப்பதாகக் காட்டிக்கொள்ளவில்லை.

இவைபோக அதிகம் பேரது கவனம் கூட்டணி என்ன சொல்லப் போகிறது என்பதிலும் இருந்தது. கூட்டணிக்குள் நிலவிய இருவகைப்பட்ட கருத்துப் போக்கால் இந்த ஜனாதிபதித் தேர்தலில் ஒருமித்த ஒரு நிலைப்பாட்டிற்கு விரைவாக வர முடியவில்லை. காலம் தாழ்த்தி இறுதியில் அதன் முடிவாக எந்தக் கட்சியையும் ஆதரிக்கப் போவதில்லை என்ற முடிவை வெளியிட்டது. அதைக்கூட அறுதியான ஒரு தீர்மானமாக அது தெரிவிக்கவில்லை. திரும்பவும் கூடி தங்கள் முடிவுபற்றி ஆராயவுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

இருந்தும், ஜோசப் பரராசசிங்கம் பச்சை அணிக்குச் சார்பாக சமிக்ஞைகள் கொடுத்துள்ளதாக அக் கட்சி வட்டாரங்கள் திருப்திப்பட்டுக் கொள்கின்றன. அதேநேரம் சம்பந்தன் நீல அணிக்குச் சார்பாக சமிக்ஞை தந்திருப்பதாக இவர்களும் திருப்திப்பட்டுக் கொள்கிறார்கள். பாம்புக்குத் தலையையும் மீனுக்கு வாலையும் காட்டினாலும் கூட்டணியின் உண்மையான நிலைப்பாடென்ன என்பதைத் தமிழ் மக்களுக்குக் காட்டுவது நல்லதெனப் பலர் ஆதங்கப்படுகிறார்கள்.

மொத்தத்தில் ஜனாதிபதித் தேர்தல் இந்தத் தமிழ்க் கட்சிகளை நன்றாகத் தள்ளாட வைத்துவிட்டது என்பது உண்மைதான்.

# மறுபிறவி

**ராஜீவ் கொலை வழக்கில் தூக்குத் தண்டனை பெற்று, மேன் முறையீட்டில் விடுதலையானவர் புகைப்படப் பிடிப்பாளர் சுபா சுந்தரம். ராஜீவ் கொலை வழக்கு தொடர்பான புதிய தகவல்கள், விசாரணை நடந்த முறைகள் பற்றி அவர் கூறும் தகவல்கள் புதியவை. கண்டிப்பாக நாம் அறிந்து கொள்ள வேண்டியவை.**

சுபா சுந்தரம்

"நீங்க தூக்கத்திலே இருப்பதால் உங்களுக்கு இந்தக் கொடுமைகள் தெரியவதில்லை. தெரிந்தால், ரொம்ப வருத்தப்படுவீங்க என்பதால்தான் நாங்களும் சொல்வதில்லை"

மருந்து தடவிக்கொண்டே விஜயன் சொல்லி முடித்தார். விஜயனின் மாமனார் பாஸ்கரனும் கைது செய்யப்பட்டு இதே மல்லிகையில்தான் சிறை வைக்கப்பட்டிருந்தார். ஒரு நாள் காலையில் அவரைப் பார்த்தபோது காதில் பிளாஸ்டர் போடப்பட்டிருந்தது. இரவு நடந்த அதிரடி விசாரணையில் காது கிழிந்து போனதாக பின்னால் தெரிந்து கொண்டேன்.

"விரல்களுக்கிடையில் பென்சிலைக் கொடுத்து அழுத்தும்போது உயிர் போவது போல வலியெடுக்கும்" என்று விசாரணையின் தன்மையை விவரித்தார் சகசிறைவாசி ஒருவர். கிராக்கிங் டீம் ஆட்கள், 'லாடம்' கட்டுவதில் ஸ்பெஷல் ட்ரெய்னிங் பெற்றவர்கள், சிறைவாசியை படுக்கச் செய்து, அவரது பாதத்தில் லத்தியால் லாடம் கட்டப்படும். அடிபட்ட இடத்தில், உள்காயமாக ரத்தம் கட்டிப்போய்விடுவதால் அடிபட்டவரால், தரையில் கால்வைக்கவே முடியாது. ஓர் அடி எடுத்து வைப்பதென்றாலும் நரகலோகத்திற்கு சென்று திரும்புவது போல இருக்கும்.

ஒருமுறை எனக்கு காலில் சுளுக்கு ஏற்பட்டது போல வலியெடுத்தது. நான் சிரமப்படுவதைப்பார்த்த விஜயன், உடனே காவலரை அழைத்து 'மூவ்' ஆயின்மெண்ட் கொண்டு வரச்சொன்னார். சிறிது நேரத்தில் மருந்து வந்தது.

"எப்படி இவ்வளவு சீக்கிரமாக மருந்து வாங்கி வரச்செய்தீர்கள் விஜயன்?"

"சார்-இரவு நேர அர்ச்சனைக்குப் பிறகு எங்களுக்கு இந்த பிரசாதத்தைக் கொடுப்பார்கள். உள்காயங்களில் வலி எடுக்காமல் இருப்பதற்காக மூவ், தென்னமரக்குடி எண்ணெய், ஐயோடேக்ஸ் எல்லாம் மல்லிகையிலேயே இருக்கிறது. நான் எப்போதும் மூவ்தான் பயன்படுத்துவேன். உங்களுக்கு அதைத்தான் கொண்டு வரச்சொன்னேன்!"

விஜயன் விவரித்த போது, காலில் ஏற்பட்டிருந்த சுளுக்கு இதயத்திற்கு அருகில் வந்திருந்தது.

விசாரணை காலத்தில் எதிர்பாராத சம்பவங்கள் ஏதேனும் எங்கேனும் நடந்துவிட்டால் கிராக்கிங் டீம் ஆட்கள் தங்கள் உச்சபட்டச கோபத்தையும் சிறைவாசிகள் மீது கண்மூடித்தனமாக் காட்டுவார்கள். மல்லிகையில் பேப்பர் படிக்கும் வசதிகள் எங்களுக்கு கிடையாது. ஆனால் காவலர்களுக்கு காலையும் மாலையும் பேப்பர் வரும்.

அவர்களிடம் கேட்டால், சிலர் செய்திகளை மட்டும் சொல்வார்கள். சிலர் பேப்பரையே கொடுத்துவிடுவார்கள். அப்படி ஒரு முறை பேப்பர் தலைப்புச் செய்தியை பார்த்த போது தலையிலிருந்து கால் வரை அதிர்ச்சி பரவியது.

"சி.பி.ஐ.அதிகாரிகளால் விசாரணைக்காக சொந்த ஊருக்கு அழைத்துச் செல்லப்பட்ட கோடிக்கரை சண்முகம் 'தூக்குப் போட்டு' இறந்தார்' என்பதுதான் அந்த செய்தி. சண்முகம் மரணத்தையடுத்து மல்லிகையில் கெடுபிடி உச்சத்தை எட்டியது. நினைத்த நேரத்திலெல்லாம் எங்கள் அறைகளுக்கு வந்த கிராக்கிங் டீம் ஆட்கள், சிறைவாசிகளை இழுத்துச்சென்று தங்கள் பாணியில் விசாரித்து அனுப்பினர்.

இந்த சமயத்தில், சிறைவாசி ஒருவரை விசாரணைக்காக மேலே அழைத்து வரும்படி காவலருக்கு உத்தரவிட்டார் கிராக்கிங் டீம் அதிகாரி. விசாரணைக் கொடுமைகள் நாளுக்கு நாள் அதிகமாவதை அந்தக் காவலரே உணர்ந்திருந்ததால் கைதியை மேலே அனுப்ப தயங்கினார். "என் பொறுப்பில் பாதுகாப்புக்கு விடப்பட்டிருக்கும் கைதியை மேலே அனுப்ப நான் தயாராக இல்லை. என் பொறுப்பிலிருந்து நீங்கள் எடுத்துக்கொள்வதாக எழுதிக்கொடுத்துவிட்டு வேண்டுமானால் அழைத்துச் செல்லுங்கள். இல்லையென்றால், நீங்கள் செய்கிற சித்திரவதையால் பழி என் மீதுதான் விழும்."




காவலர் உறுதியாகச் சொல்லிவிட்டதால் அதிகாரியால் அந்த சிறைவாசியை 'மேலே' அழைத்துச் செல்ல முடியவில்லை. அன்றைய தினம் அந்த சிறைவாசிக்கு அதிர்ஷ்ட நாள் போலும். விசாரணை நெருக்கடிகளால் மரணத்தின் விளிம்புவரை சென்று வந்த சிறைவாசிகளும் உண்டு. ராஜீவ் கொலை வழக்கில் சுப்ரீம் கோர்ட் தீர்ப்பளித்த பிறகு பெள்ளாச்சியில் பேட்டியளித்த சி.பி.ஐ. கார்த்திகேயன், "விசாரணையின்போது மூன்றாந்தர சித்திரவதைகள் செய்யப்படவில்லை" என்று தெரிவித்திருந்தார். இதைப் படித்த போது மல்லிகையில் அடித்த மருந்துவாடை தான் என் நினைவுக்கு வந்தது.

ராஜீவ் கொலை வழக்கு விசாரணை முழுவதும் 'இன் கேமரா'வில்தான் (In-Camera) நடந்தது. நான் இளவயதில் பத்திரிகை நிருபராக பணியாற்றியபோது ஒரு கள்ளநோட்டு வழக்கு பற்றிய செய்திக்காக கோர்ட்டிற்கு சென்றிருந்தேன். அப்போது, In-Camera என போர்டு மாட்டப்பட்டு கதவுகள் மூடப்பட்டிருந்தன. விசாரணை விவரங்கள் வெளியே தெரியக்கூடாது என்பதற்காகத் தான் இந்த போர்டு என்று தெரிவித்தார்கள். நானே இன்-கேமரா விசாரணையில் சிக்குவேன் என்று அப்போது நினைக்கவில்லை.

புகைப்படக்காரனாகிய எனக்கும் (இன்) கேமிராவுக்கும் உள்ள தொடர்பு எப்படியெல்லாம் தொடர்ந்திருக்கிறது பார்த்தீர்களா?

# இனப்பிரச்சினையின் யதார்த்தத்தை உணரும் சர்வதேச சமூகம்!

அலசுவது - இராஜதந்திரி

இலங்கை இனப்பிரச்சினை ஒரு தீர்வைக் காணாது அடுத்த நூற்றாண்டுக்கும் தாவ இருக்கின்றது. அதேசமயம் கடந்த சுமார் முப்பது வருடகாலமாக பிரிட்டனில் ஒரு தலையிடியாக இருந்துவந்த வட அயர்லாந்துப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணும் சூழ்நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஐக்கிய இராச்சியத்தின் ஓரங்கமாக இருந்து வந்த வட அயர்லாந்து தனது சுயாதிக்கத்தைக் கொண்டிருக்கும் உரிமையை பிரிட்டிஷ் அரசி வழங்கியுள்ளார்.

வட ஐரிஷ் விவகாரம், ஸ்கொட்லாந்து விவகாரங்களில் பிரிட்டனின் ஆட்சியாளர்கள் வெளிப்படுத்திய அரசியல் அணுகுமுறைகள், ஜனநாயக அரசியலின் தாயகமே பிரிட்டன் என்பதை இந்த நூற்றாண்டின் இறுதியிலும் உறுதிப்படுத்துவதாகவே இருக்கின்றது.

பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் இனவாதிகளுக்கோ, அல்லது மத வாதிகளுக்கோ, பணிந்துவிடவில்லை. இதேசமயம் பிரிட்டிஷ் மக்கள்கூட தாம் அரசியல் ரீதியாக எதிர்நோக்குகின்ற பிரச்சனைகளை அரசியல் வழிமுறைகள் மூலமாகவே தீர்க்க வேண்டுமென்றே

சுமார் 40 வருடங்களுக்கு முன்னரே தமிழர் பிரச்சனையின் யதார்த்தத்தை இலங்கையின் ஆட்சியாளர்கள் உணர்ந்திருப்பார்களேயானால், இலங்கையில் கடந்த இரு தசாப்தகாலத்துக்கும் மேலாக ஓடிக்கொண்டிருக்கும் இரத்தப் பிரவாகத்தைத் தடுத்து நிறுத்தியிருக்கவும் முடியும்.

அத்துடன் இலங்கைப் பிரச்சனையில் சுயாட்சி வடிவில் தீர்வொன்று ஏற்படுத்தப்பட்டிருந்தால், அத்தீர்வு உலகில் இனப்பிரச்சனைகள் தொடர்பாக

பிரிட்டனில் வட ஐரிஷ் பிரச்சனை நோக்கப்பட்ட பாணியிலேயே இலங்கையிலும் இனப்பிரச்சினை குறித்து ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி அரசியலாளர்கள் சுயநலமற்ற போக்கைக்

வேளையிலேயே திரு. பிரபாகரனின் செய்தி வெளியாகியுள்ளது. கூடவே தமிழீழ விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தைகள் பற்றியும் தற்போதைய ஜனாதிபதித் தேர்தல் அரங்கில் குதித்துள்ள அரசியலாளர்கள் குறிப்பிட்டு வரும் வேளையிலேயே,



எஸ்.ஜே.வீ. செல்வநாயகம்

இதன்மூலம் இதுவரை காலமும் மத அடிப்படையில் கத்தோலிக்கர்கள், புரொட்டஸ்தாந்தினர் கீரியும், பாம்புமாக இருந்து வந்த வட ஐரிஷ் மக்கள் தமது பகைமையை விலக்கிக் கொள்ளும் சந்தர்ப்பமும் ஏற்பட்டுள்ளன.

வட அயர்லாந்துப் பிரச்சனை பிரிட்டிஷ் ஆட்சியாளர்களுக்கு பெரும் தொல்லையைக் கொடுப்பதாகவே இருந்து வந்தது. ஐரிஷ் கெரில்லாக்கள் பிரிட்டனின் ஆட்சியாளர்களை தமது இராணுவ நடவடிக்கைகள் மூலமாக பெரிதும் நெருக்கடிக்குள்ளாக்கி வந்திருந்தனர். இதனால் வட ஐரிஷ் பிரச்சினைகூட ஓர் இரத்தம் தோய்ந்த வரலாற்றையே கொண்டிருந்தது.

எனினும் வட ஐரிஷ் விடயத்தில் பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் வெளியிட்ட அரசியல் ரீதியான அக்கறையே வரவேற்கக் கூடியதாகவும், ஜனநாயகப் பாரம்பரியங்களை மதிப்பதாகவும் விளங்கியிருந்தது.

வட-ஐரிஷ் கெரில்லாக்கள் இராணுவ ரீதியான அழுத்தங்களை அதிகப்படுத்திய போதெல்லாம் பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் நிதானமிழக்காமல் அரசியல் நடைமுறைகளிலேயே மிகுந்த நம்பிக்கை வைத்திருந்தனர்.

உலகில் ஏராளமான நாடுகளைக் கட்டி ஆண்ட ஒரு தேசமே பிரிட்டன் என்பது குறிப்பிடத்தக்கது. அத்துடன் உலகில் இன்று இராணுவ ரீதியாகக்கூட பிரிட்டன் முன்னணி வகிக்கின்றது.

இருந்தபோதிலும் வட ஐரிஷ் விடயத்தில் பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் இராணுவ ரீதியான அழுத்தங்களைவிட அரசியல் ரீதியான நடவடிக்கைகளையே ஸ்திரப்படுத்தியிருந்தனர்.

வட ஐரிஷ் சர்ச்சை முழு பிரிட்டனுக்கும் பிரச்சனையானதொன்றென்பதை பிரிட்டனின் அரசியல் கட்சிகள் நன்குணர்ந்திருந்தன. அத்துடன் வட-ஐரிஷ் பிரச்சனையை தாம்

உறுதியாக நம்பியிருந்தனர். இதன் வெளிப்பாடாகவே பிரிட்டனில் இரத்தப் பிரவாகம் தோன்றுவது தவிர்க்கப்பட்டிருந்தது. மக்கள்கூட அழிவுகள், அவலங்களால் சூழப்படும் நிலைக்குள்ளாகாமலிருந்தனர்.

இலங்கை இனப் பிரச்சினையைப் பொறுத்தவரைகூட ஒரு சுயாட்சியுடன் கூடிய அதிகாரப் பகிர்வு குறித்தே கடந்த பல தசாப்தங்களாகப் பிரஸ்தாபிக்கப்பட்டு வந்திருந்தது.

தமிழ் அரசியலின் தனிப் பெருந்தலைவராக விளங்கிய அமரர்

நல்லதோர் முன்னுதாரணமாகக்கூட விளங்கியிருக்க முடியும்.

ஆனால் இலங்கைப்பிரச்சினை ஓர் அரசியல் பிரச்சனை என்ற நிலையிலிருந்தும் நழுவி இராணுவ ரீதியான ஒரு சர்ச்சையாகவே வடிவம் பெற்றுள்ளதையே அவதானிக்க முடிகின்றது.

பிரச்சினையில் சம்பந்தப்பட்டவர்கள் ஒருவரோடொருவர் பேசவேண்டிய நிலைமாறி, இரு தரப்பிலும் துப்பாக்கிகளே ஒன்றுடன் ஒன்று பேசிவருவதைக் காணமுடிகின்றது.

கையாளவேண்டுமெனவும் முன்னாள் பிரிட்டிஷ் அமைச்சர் லியாம் பொக்ஸ் இலங்கை வந்திருந்த சமயம் வலியுறுத்தியிருந்தார்.

இலங்கையில் இனப்பிரச்சனைத் தீர்வு குறித்து தம்மிடையே புரிந்துணர்வை ஏற்படுத்த முடியாத பிரதான கட்சிகள், திரு. லியாம்பொக்ஸ், காட்டிய வழியைக்கூடப் பின்பற்றத் தவறியவையாகவே இருக்கின்றன.

இந்நிலையில் தற்போது பிரிட்டனில் வட அயர்லாந்துப் பிரச்சனைக்கு எட்டப்பட்டுள்ள தீர்வு மீளவும்

திரு. பிரபாகரனும் தமது நிலைப்பாடு பற்றி தெட்டத் தெளிவான கருத்துக்களை ஒரு நீண்ட உரையாகவே வெளியிட்டுள்ளார்.

இருந்தபோதிலும் தேர்தல் களத்தில் மும்முரமாக இருப்போர் திரு. பிரபாகரனின் கருத்துக்களுக்கு எவ்வளவு தூரம் செவி சாய்த்துள்ளனர் என்பதே பிரதான கேள்வியாக இருக்கின்றது.

## வட ஐரிஷ் பிரச்சினையைத் தீர்த்து புதிய நூற்றாண்டினுள் பிரவேசிக்கும் பிரிட்டன்!!

எஸ்.ஜே.வி. செல்வநாயகம் அவர்கள் சுமார் 40 வருடங்களுக்கு முன்னரே சமஷ்டி முறையிலான அதிகாரப்பகிர்வே இலங்கையின் வடக்கு-கிழக்கைத் தாயகமாகக்கொண்ட தமிழ் மக்களுக்கு சிறந்ததோர் அரசியல் தீர்வாக இருக்குமென்பதை வலியுறுத்தி வந்தார்.

அத்துடன் எத்தகைய விஸ்தாரமான சிக்கல்களுக்கும், தலையீடுகளுக்கும் இடந்தராமல் இலங்கையின் இனப்பிரச்சனைக்கு, இலங்கையின் அரசியலாளர்களின் பங்களிப்பு மூலமாகவே தீர்வைக் காண முடியுமென்பதையும் அமரர் எஸ்.ஜே.வி செல்வநாயகம் நம்பியிருந்தார்.

இதன் அடிப்படையில் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்காவின் தந்தையாரான முன்னாள் பிரதமர் எஸ்.டபிள்யு. ஆர்.டி. பண்டாரநாயக்காவுடன் இனப்பிரச்சனைத் தீர்வு குறித்த ஒப்பந்தமொன்றை மேற்கொள்ளவும் அமரர் எஸ்.ஜே.வி முன்வந்திருந்தார்.



தேர்தல் பிரசார வேகம் கண்ணை மறைத்த நிலையில் தென்னிலங்கை அரசியல்வாதிகள் திரு. பிரபாகரனது பேச்சை உதாசீனப்படுத்தியிருக்கலாம்.

ஆனால் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தலைவரது மாவீரர் வார உரையை இலங்கையில் இருக்கின்ற சர்வதேச சமூகத்தின் பிரதிநிதிகள் மிக உன்னிப்பாகவே செவிமடுத்துள்ளதை அவதானிக்க முடிந்துள்ளது.

இலங்கையில் உள்ள வெளிநாட்டு இராஜதந்திரிகள் திரு. பிரபாகரனின் உரையை வெறுமனே செவிமடுப்பதோடு மட்டும் நின்று விடவில்லை.

அதுகுறித்து தமது

## நிராகரிக்கப்பட முடியாத 'மாவீரர் வார'ச் செய்தி!!!

எதிர்நோக்கும் ஒரு பொதுப் பிரச்சனையாகவே அவை கருதின.

பிரிட்டனில் எந்தவொரு அரசியல் கட்சி பதவிக்கு வந்த போதிலும் எதிர்க்கட்சியுடன் வட ஐரிஷ் பிரச்சனை குறித்து ஒருமித்த கண்ணோட்டத்தையே கொண்டிருந்தன.

வட ஐரிஷ் பிரச்சனை குறித்து எவ்விதத்திலும் தமது சொந்த அரசியல் நலன்களை பிரிட்டிஷ் அரசியலாளர்கள் முதன்மைப்படுத்தவில்லை. அவர்களது இத்தகைய சுய நலமற்ற போக்கே தற்போது வட-ஐரிஷ் சர்ச்சையை ஒரு முடிவுக்குக் கொண்டுவர உதவியுள்ளது.

வட ஐரிஷ் பிரச்சனை மட்டுமல்ல ஸ்கொட்லாந்துக்கான சுயாட்சி அதிகாரத்தைக்கூட பிரிட்டிஷ் அரசு வழங்கியிருந்தது,

இதன் மூலம் பிரிட்டனின் வடக்கேயுள்ள ஸ்கொட்லாந்து மக்கள்கூட தமது தனித்துவத்தைக் காப்பாற்றியுள்ளதை அவதானிக்க முடிந்தது. கடந்த ஆண்டில் ஸ்கொட்லாந்து விவகாரத்தையும் பிரிட்டன் அரசு சுமுகமாகத் தீர்த்து வைத்ததென்பது குறிப்பிடத்தக்கது.

இத்தகைய தீர்வுகள் மொழி, மத, கலாசார, பிரதேச ரீதியாக தனித்துவங்களைக் கொண்டுள்ள மக்களின் அரசியல் அபிலாஷைகளை அங்கீகரிப்பவையாகவே இருக்கின்றன.

ஆனால் மிதவாத அரசியலில் நம்பிக்கைகொண்ட அமரர் எஸ்.ஜே.வி. செல்வநாயகத்துக்கு இனப்பிரச்சனையைத் தீர்த்து வைப்பதில் அன்றிருந்த அக்கறை அன்றைய சிங்களத் தலைவரான எஸ்.டபிள்யு. ஆர்.டி பண்டாரநாயக்காவிடமோ அல்லது வேறு சிங்களத்தலைவர்களிடமோ காணப்படவில்லை.

இலங்கை இனப்பிரச்சனையின் ஆழ, அகலத்தையும், அது எதிர்காலத்தில் ஏற்படுத்தக்கூடிய பாரிய சிக்கல்களையும் ஊகித்து உணரும் தீர்க்க தரிசனம் பெரும்பான்மை இனத்தலைவர்களிடம் காணப்படவில்லை.

எஸ்.டபிள்யு. ஆர்.டி. பண்டாரநாயக்கா மட்டுமல்ல. அவருக்குப் பின்னர் பிரதமராக வந்த டட்லி சேனநாயக்காவுடன்கூட இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண தமிழ்த்தலைவர் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் முன் வந்திருந்தார்.

ஆனால் அவரது முயற்சிகள் யாவும் முறியடிக்கப்பட்டே வந்திருந்தன.

இந்நிலையில் இன்று இலங்கையின் இனப்பிரச்சினை பூதாகரமாக மாறியுள்ளதையடுத்து அதனைத் தீர்க்க முடியாது திண்டாடும் நிலைக்கே அரசியலாளர்கள் முகங் கொடுத்துள்ளனர்.

21ம் நூற்றாண்டுக்குள் பிரவேசிக்கவுள்ள இத்தருணத்தில் பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் பிரச்சனைகளையும் தம்மோடு சுமந்து செல்ல விரும்பவில்லை.

தமக்கு தலையிடியையும், வேதனைகளையும் ஏற்படுத்திய சர்ச்சைகளுக்கு துணிச்சலுடன் முடிவுகட்டிய பின்னரே பிரிட்டிஷ் மக்கள் புதிய நூற்றாண்டில் காலடி எடுத்து வைக்க முன்வந்துள்ளனர்.

இதேசமயம் கடந்த 300 ஆண்டுகளில் ஒரு தீராத ஒரு பிரச்சனையாகவும் பின்னர் கடந்த 30 வருடங்களில் ஒரு கெடுபிடியாகவும் இருந்து வந்த வட ஐரிஷ் பிரச்சினை தீர்க்கப்பட்ட குதூகலத்தில் ஐரிஷ் மக்கள்கூட தன்னம்பிக்கையுடன் புதிய நூற்றாண்டினுள் பிரவேசிக்கின்றனர்.

இலங்கையில்கூட கடந்த சில வருடங்களுக்கு முன்னர் பிரிட்டிஷ் அமைச்சராகவிருந்த லியாம் பொக்ஸ் இனப்பிரச்சனைத் தீர்வுக்கான சில வழிமுறைகளைச் சொல்லியிருந்தார்.

திரு. லியாம் பொக்ஸ் இலங்கையின் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி அரசியல் வாதிகளிடையே இனப்பிரச்சனை விடயத்தில் கருத்தொருமிப்பைக் கொண்டிருக்கும் உடன்படிக்கையொன்றுக்கும் வழிவகுத்திருந்தார்.

இலங்கையின் அரசியலாளர்களை விழிப்படைய வைப்பதாகவே இருக்கின்றது.

ஆயினும் பெரும்பான்மை இன ஆட்சியாளர்கள் விழிப்படைவார்களா? என்பதே பிரதான கேள்வியாக இருக்கின்றது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிப் பதவிக்காகக் கடும் போட்டியிடுவதில் ஆர்வம் காட்டும் தென்னிலங்கை அரசியலாளர்கள், நாட்டு நலனைவிட தமது சொந்த அரசியல் நலன்களை முன்வைத்து பிரசாரக் கணைகளைத் தொடுத்து வருவதையே அவதானிக்க முடிகின்றது.

இந்நிலையில் ஒரு வாரத்துக்கு முன்னர் வன்னியில் மாவீரர் வாரத்தை முன்னிட்டு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் வெளியிட்டுள்ள செய்தி முக்கியத்துவம் மிக்கதொன்றாகவே இருக்கின்றது.

கடந்த சிலவருடங்களாகவே மாவீரர் வாரச் செய்தியை திரு. வே. பிரபாகரன் வெளியிட்டு வருகின்றார். ஆனால் இத்தடவை வெளியான அவரது மாவீரர் வாரச் செய்தி பல்வேறு விதத்திலும் முக்கியத்துவம் வாய்ந்ததாகவே இருக்கின்றது.

ஏனெனில் இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல் பிரசாரம் சூடுபிடித்துள்ள

அபிப்பிராயத்தையும் தெளிவாகவே அவர்கள் வெளிப்படுத்தியுள்ளனர்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் இராணுவ பலத்தைச் சர்வதேச சமூகத்தின் பிரதிநிதிகள் மிக உயர்வாகவே எடைபோட்டுள்ளனர். அத்துடன் திரு. பிரபாகரன் குறிப்பிடுகின்ற மூன்றாந்தரப்பு மத்தியஸ்தத்துடனான அரசியல் தீர்வு நடவடிக்கைகளில் தவறு எதுவும் இருக்க முடியாதென்பதையும் வெளிநாட்டு இராஜதந்திரிகள் ஒளிவு-மறைவின்றிக் குறிப்பிட்டுள்ளனர்.

இந்நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகளுடனான பேச்சுக்கள் குறித்தும், இனப்பிரச்சினைத் தீர்வு குறித்தும் தெளிவான கண்ணோட்டங்களையோ அல்லது அரசியல் நடவடிக்கைகளையோ கொண்டிராதிருக்கும் இலங்கையின் அரசியலாளர்கள் திரு. பிரபாகரன் கூறியவற்றை மனந்திறந்து ஏற்பதற்கு தயக்கத்தை வெளிப்படுத்தலாம்.

ஆனால் திரு. பிரபாகரன் கூறியவற்றை நன்கு அலசி ஆராய்ந்த சர்வதேச சமூகத்தின் பிரதிநிதிகள் வெளியிட்டுள்ள அபிப்பிராயங்களை இலங்கையின் அரசியலாளர்கள் நிச்சயம் செவிமடுக்க வேண்டியவர்களாகின்றனர்.

ஏனெனில் இலங்கையிலுள்ள சர்வதேச சமூகத்தின் பிரதிநிதிகள் 'கிணற்றுத் தவளைகள்' போலிருந்து எதனையும் குறிப்பிடவில்லை என்பதையே கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

# இடி அமீன்

உண்மைத் தொடர்

அதிர் இடி 88

**கடந்தவாரம்**

**இடி அமீனின் அந்தப்புரத்தில் முப்பதுக்கும் மேற்பட்ட அழகிகள் இருந்தனர். இவர்களில் பெரும்பாலானோர் விரகதாபத்தால் தவித்தனர். அந்தப்புரத்தின் காவலுக்காக நியமிக்கப்பட்டிருந்த காவலாளிகளைக் கண்காணிக்க அங்கு அடிக்கடி செல்லும் அமீனின் மெய்காப்பாளன் ஒருவனுக்கும் அந்தப்புர அழகி ஒருத்திக்கும் இடையில் ஏற்பட்ட உறவு பற்றி தகவல் அறிந்த அமீன், அவர்கள் இருவரையும் படுமோசமாகச் சித்திரவதை செய்கிறான். இதற்கிடையில் எண்டபே விமான நிலையத்தில் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தவர்களால் கடத்தப்பட்ட ஃபிரான்ஸ் எயார்லைன்ஸ் விமானம் தரை இறங்குகிறது.**

**இனி...**

அமீனுடைய அந்தப்புரத்து அழகிகள், அமீன் அங்கு வந்தவேளை பலதரப்பட்ட கோலங்களில் கிடந்தனர். அவர்கள் அனைவரும் ஒருவகையில் சிறைக்கைதிகளே! ஒவ்வொரு தடவையும் அமீன் அங்கு வருவதற்கு முன்னர் அங்கு மேற்பார்வையாளராக உள்ள அம்மையாருக்கு தொலைபேசியில் அறிவித்துவிட்டுத்தான் வருவான். அறிவித்தல் கிடைத்ததும் அவ்வம்மையார், அழகிகள் அனைவரையும் அலங்கரித்துக்கொண்டு ஆயத்தமாகி இருக்குமாறு பார்த்துக் கொள்வார்.

அமீன் சகலரையும் தன்முன் பவனியாக வருமாறு கட்டளையிடுவான். அவர்களும் உரிய அலங்காரங்களுடன்- அமீனை வசப்படுத்தும் நோக்கத்தில்- புன்னகையைச் சிந்திய வண்ணம் வருவார்கள். அமீனுடைய அன்றைய இரசனைக்கேற்ப ஒருவரையோ இருவரையோ தெரிந்தெடுத்து மாளிகைக்கு அனுப்புமாறு பணிப்பான்.

அன்றைய தினம் மாளிகைக்குச் செல்வதற்காக அமீனால் தேர்ந்தெடுக்கப்பட்ட பெண்களில் சிலர், ஏதோ கொலைக் களத்துக்குச் செல்பவர்களைப்போல பயப்படுவார்கள். அவர்கள் பெரும்பாலும், அமீனுடைய படுக்கை அறையைப் பகிர்ந்து கொள்ள ஏற்கனவே சென்று வந்தவர்களாக இருப்பர். அமீனுடைய கொடுமையான காம வெறிக் களியாட்டங்களை அனுபவித்தமையினால், அத்தகைய சித்திரவதையை மீண்டும் அனுபவிக்க அஞ்சுவதனால்தான் இந்நிலை. அந்தப்புரத்துக்கு வந்தும், அமீனால் அதுவரை தீண்டப்படாதவர்கள் சிலரும் இருந்தனர். அவர்கள் அமீனால் தெரிவானால், ஓரளவு மகிழ்ச்சியுடன் காணப்படுவர். அமீனுடைய இரசனை பற்றிய அனுபவம் அவர்களுக்கு இல்லை அல்லவா?

இன்று அமீன் அந்தப்புரம் வந்தது, அன்றையத் தேவைக்கு அழகிகளைத் தேர்ந்தெடுப்பதற்காக அல்ல. இந்த உண்மை தெரியாத அந்தப்புரத்து அழகிகள் ஆள்பாதி ஆடைபாதி என்ற நிலையில், மேற்பார்வையாளரான அம்மையாரின் அதட்டலுக்குப் பயந்து ஓடோடி வந்து, முன் வரவேற்பு மண்டபத்தை அடைந்தனர். அமீன் அதட்டலோடு தன் குரலை உயர்த்தினான். உகண்டா மொழியில் எத்தனை தூஷணை வார்த்தைகள் உள்ளனவோ அத்தனையும் அமீனின் வாய் வழியாக வெளியேறின. ஏறத்தாழ அரை மணிநேர அர்ச்சனையின் பின்னர்தான் மூச்சுவிட்டான். அவன் அங்கு வந்தால் விரும்பிப் பருகும் பானத்தை மேற்பார்வையாளர் கைகளில் ஏந்தியவண்ணம் நின்றிருந்தாள். அக்கோப்பையைக் கையிலெடுத்து ஒரே மூச்சில் உறிஞ்சிக் குடித்துவிட்டு பாத்திரத்தை சுவரில் எறிந்தான். எதுவிதமான ஒலியையும் எழுப்பாமல், அமைதியாக நின்றிருந்த அழகிகளின் மண்டையிலேயே அந்தப் பாத்திரம் விழுந்து நொருங்கியது போல் அந்த ஒலி இருந்தது.

திடகாத்திரமான ஆண்மை நிரம்பிய சகல அதிகாரங்களையும் கொண்ட தனக்கு மட்டுமே உரிய ஒரு பெண், வேறோர் ஆடவனை ஏன் நாடவேண்டும். அவ்வாறு அடாத நடவடிக்கையிலீடுபட்ட அப்பெண்ணுக்கு நேர்ந்த கதி என்ன என்பதை மனதில் இருத்தி, ஒழுங்காக நடந்துகொள்ள வேண்டும். இல்லையேல் இப்திக்கா என்ற அப்பெண்ணுக்கு நேர்ந்த கதியே ஏனையோருக்கும் நிகழும் என்பதுதான் அமீனின் அன்றைய எச்சரிக்கையாக இருந்தது.

அப்பெண்களுக்கு தங்களுடன் அந்தப்புரத்தில் ஒன்றாக வசித்த இப்திக்காவுக்கு என்ன நடந்ததென்பது தெரியாது. அப்பெண்ணை சிலர் வந்து அழைத்துச் சென்றது தெரியும். அவள் மெய்காப்பாளன் ஒருவனின் காதலியாக இருந்ததும் அவர்களுக்குத் தெரியும்.

அமீன் அங்கிருந்து புறப்படும்போது, அவனுடன் வந்திருந்த மெய்காப்பாளன் ஒருவன், அன்றையத் தினசரியின் பிரதிகளைக் கொண்டுவந்து அந்தப்புர மேற்பார்வையாளரான பெண்ணிடம் கொடுத்து, அவற்றை அழகிகளிடம் கொடுக்குமாறு சொல்லிவிட்டுப் போனான். இப்திக்காவும் அவளது காதலனும் தற்கொலை செய்துகொண்டதாக வெளிவந்த செய்தி பத்திரிகையில் வெளியாகியிருந்தது.

**இடி** அமீனின் அலுவலகத்துக்கு, 1976 ஜூன் 28ம் திகதி அதிகாலை ஓர் அவசரச் செய்தி வந்தது. அப்பொழுது அமீன் தனது படுக்கையில் புதிதாக முதல் நாள் இரவுதான் அகப்பட்டிருந்த ஓர் அழகியை அரவணைத்தபடி படுத்திருந்தான். படுக்கையின் அருகில் மூன்று வர்ணத் தொலைபேசிகள் வரிசையாக இருந்தன.

அமீன் பள்ளியறையிலிருக்கும்போது, எவரும் அவனைத் 'தொந்தரவு' செய்யலாகாது என்பது திட்டவட்டமான கட்டளை. படுக்கை அறைக்கு அருகில் அமீனின் பிரத்தியேக அந்தரங்கத் தொடர்பாளருடைய அலுவலகம் ஒன்று இருந்தது. அமீனுக்கு வரும் தொலைபேசிகளை முதலில் அந்த அலுவலர்தான் எடுப்பார். மிக மிக அவசரமான காரணம் என்றால் மட்டும், படுக்கை அறைக்குள்ளிருக்கும் சிவப்பு வர்ணத் தொலைபேசி அலறும். இப்பொழுதும் அதே சிவப்பு வர்ணத் தொலைபேசிதான் கிணுகிணுத்தது. வேண்டா வெறுப்புடன் அதனை எடுத்துக் காதில் வைத்தான்.

விமானப்படைத் தளபதியிடமிருந்து அந்தத் தகவல் வந்திருந்தது. இஸ்ரேல் நகரிலிருந்து புறப்பட்ட ஃபிரான்ஸ் எயார் வேய்ஸ் 139 இலக்கப் பயணிகள் விமானம் ஒன்று கடத்தப்பட்டு எண்டபே விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்டுள்ளதாக விமானப்படை அதிகாரி சொன்னார்.

ஏறத்தாழ 300 பயணிகளை ஏற்றிக் கொண்டு டெல் அவீலிருந்து புறப்பட்ட விமானம், ஏதென்ஸ் நகரில் எண்ணை நிரப்பத் தரையிறங்கியபோது, அங்கிருந்து விமானத்தில் ஏறிய கடத்தல்காரர்களால் அவ்விமானம் கடத்தப்பட்டுள்ளது.

பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் மக்கள் முன்னணியினர்தான் இவ்விமானத்தைக் கடத்தியவர்கள். பயணிகளில் பெரும்பாலானோர் இஸ்ரேலியர்களாக இருந்தமையினால், பா.வி. இயக்கத்தைச் சேர்ந்த சிலர் இந்தக் கடத்தலை மேற்கொண்டிருந்தனர்.

இவ்விமானக் கடத்தலுக்குத் தன்னாலான ஒத்தாசைகளை வழங்குவதன் மூலம் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தாருடன் நல்லுறவை வலுப்படுத்துவதற்கும் அரபு நாடுகளின் நல்லெண்ணத்தைப் பெறுவதற்கும் ஒரு நல்ல வாய்ப்புக் கிடைத்திருப்பதையொட்டி அமீன் உள்ளூர பெருமகிழ்ச்சி அடைந்தான். அதே சமயம் தானும் மனிதாபிமானம்மிக்க ஒரு தலைவன்தான் என்பதனையும் பறைசாற்ற வேண்டிய நிலையிலுமிருந்தான். ஏற்கனவே பிறநாடுகளில் அமீனைப் பற்றிய பலதரப்பட்ட கதைகள் பரவியிருந்தன. ஆகவே ஃபிரான்ஸ் எயார் லைன்ஸ் விமானக் கடத்தல் ஒரு சர்வதேச அந்தஸ்தைப் பெற்றிருந்தது. ஃபிரான்ஸ் நாட்டின் நல்லெண்ணத்தையும் இதன் மூலம் சம்பாதிக்க வேண்டிய அவசியமுமிருந்தது.

விமானத்தில் பல நாடுகளையும் சேர்ந்த பயணிகள் இருந்தனர். அவர்களுக்கு எத்தீங்கும் ஏற்படாமல் காக்க வேண்டியதும் அவசியமாகவிருந்தது.

தனது நம்பிக்கைக்குப் பாத்திரமான சுகாதார அமைச்சர் சியம்பாவுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு எண்டபே விமான நிலையத்துக்கு ஒரு நல்ல மருத்துவரையும் ஒரு தாதியையும் அழைத்துக்கொண்டு ஒரு அம்பியூலன்ஸ் வண்டியுடன் செல்லுமாறு கேட்டுக்கொண்டான்.

அமைச்சர் சியம்பா அன்று காலை 6.00 மணி பி.பி.சி. செய்தியில் எண்டபே விமான நிலையச் சம்பவம் பற்றிக் கேட்டுத் தெரிந்துகொண்டிருந்தார். அமைச்சரிடம், நுபியாவைச் சேர்ந்தவளான ஒரு குறிப்பிட்ட தாதியையும், பாலஸ்தீனியர்களால் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு டாக்டரையும் அழைத்துச் செல்லுமாறு அமீன் கேட்டுக்கொண்டான்.

அமைச்சர் சியம்பா எகிப்து நாட்டைச் சேர்ந்த டாக்டர் அயாட் என்பவருடன் தொடர்புகொண்டு, நிலமையைச் சுருக்கமாகக் கூறி எண்டபே புறப்பட ஆயத்தமாக இருக்கும்படி சொன்னார். பிற்பகல் 3.00 மணிக்குத்தான் அமீன், உடனடியாக எண்டபே செல்லுமாறு அமைச்சரைக் கேட்டுக்கொண்டான். காலையிலேயே டாக்டருடனும் தாதியுடனும் ஆயத்தமாக இருக்கும்படி, அமீன் கூறியிருந்தமையினால் மருத்துவ உதவிக் குழுவுடன் அமைச்சர் சியம்பா, அவருடைய அமைச்சகத்தில், அமீனின் அடுத்த உத்தரவுக்காகக் காத்திருந்தார். **(இடி தொடரும்)**



**தருவது**

**அழகன்**

# ரொனால்டோவின் புதிய ஒப்பந்தம்



**உ**லகப்புகழ் பெற்ற பிரேஸில் நாட்டு உதைபந்தாட்ட வீரர் ரொனால்டோ, உதைபந்தாட்ட அணிகளில் விளையாடுவதற்காக ஒப்பந்தங்களில் கையெழுத்திடுவார். அதுபோல் இப்போது புதிய ஒப்பந்தம் ஒன்றில் கையொப்பமிட்டுள்ளார். அவர் ஒப்பந்தம் செய்திருப்பது அவருக்கு மனைவியாக வரப்போகும் மிலென் டொமினிக்ஸுடன்தான்.

ரொனால்டோ-மிலென் திருமணம் முறிந்து போனால் செய்யப்பட்டுள்ள ஒப்பந்தம் உயிர் பெறும். திருமணம் தொடர்ந்தால் ஒப்பந்தம் செத்துவிடும். இந்த ஒப்பந்தத்தின் சாராம்சம் என்னவென்று அறிவிக்கப்படவில்லை.

இந்த ஒப்பந்தத்தினால் ரொனால்டோவுக்கா அல்லது மிலெனுக்கா இலாபம் வரும் என்று தெரியாது. ஆனால் இந்த ஒப்பந்தத்தினால் இலாபம் பெறுபவர்கள் இருவர். அவர்கள் இந்த ஒப்பந்தத்தைச் செய்து கொள்ள ஆலோசனை கூறியவர்கள்.

600 கோடி ரூபாய்க்கும் அதிகமான சொத்துக்களை வைத்திருக்கும் ரொனால்டோவின் தொழில் ரீதியான ஆலோசகர்களாக பிட்டா, மார்ட்டினஸ் ஆகியோர் இருக்கின்றனர்.

ரொனால்டோ கையெழுத்திடும் அனைத்து ஒப்பந்தங்களிலும் 10 சதவீத கமிஷன் இவர்களுக்குக் கிடைக்கிறது. ரொனால்டோவின் திருமணம் முறிந்து போனால் இவர்கள் இருவருக்கும் 100 கோடி ரூபாய்க்கும் அதிகமாகக் கிடைக்குமாம்.

காதலிகளை அடிக்கடி மாற்றுவது ரொனால்டோவுக்கு ஒன்றும் புதிதல்ல. எனவே ரொனால்டோவின் ஆலோசகர்களுக்கு அதிஷ்டம் கிட்டும் என்பதில் சந்தேகமில்லை!

# நவாஸ் ஷெரீப்புக்காகப் பிரார்த்தனை

**இ**ந்திய-பாகிஸ்தான் எல்லைப் பிரச்சனைக்குக் காரணமானவர் என்று இந்தியாவின் பல பகுதிகளில் பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப்பின் கொடும்பாவிகள் எரிக்கப்பட்டன




அண்மையில் இவரது ஆட்சி கவிழ்க்கப்பட்டு, கைது செய்யப்பட்டார். அப்போது இந்தியாவின் ஜாட்டி உம்ரா என்ற கிராமத்தவர்கள் அவர் விடுதலை பெறவேண்டிப் பிரார்த்தனை செய்தனர்.

வட இந்தியாவின் சீக்கிய புனிதஸ்தலமான அமிர்தசரஸ் நகருக்கு 25 கிலோமீட்டர் தொலைவில்தான் ஜாட்டி உம்ரா கிராமம் உள்ளது. இங்கு சீக்கியர்கள்தான் அதிகமாக வாழ்கின்றனர்.

இந்தக் கிராமத்தில்தான் நவாஸ் ஷெரீப் பிறந்து வளர்ந்தவர். இதனால்தான் இவருக்காகப் பிரார்த்தனை செய்து வருகிறார்கள்.

"அவர் 'நல்லபடியாக' நடத்தப்படவேண்டும். விரைவில் விடுதலை செய்யப்படவேண்டும் என்பதே எங்கள் விருப்பம், இடையறாத பிரார்த்தனை!" என்கிறார்கள் ஜாட்டி உம்ரா கிராம மக்கள்.

# உலகம் சுற்றும் இத்தாலியர்



**பெ**ப்பிடெண்டி என்பவர் 62 வயதான இத்தாலியர். இவர் சாதனை படைக்க உலகத்தைச் சுற்றி வருகிறார். 'ஏற்கனவே பலர் உலகத்தைச் சுற்றி சாதனை படைத்துள்ளனரே?' என்று நீங்கள் கேட்கலாம்.

இவர் உலகத்தைத் சுற்றி வருவது லொறிகளில் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. 4 பெரிய லொறிகளில் இவரும் இவருடைய சகாக்களும் உலகத்தைச் சுற்றி வருகின்றனர்.

இவர்கள் அலாஸ்கா, தென்னமெரிக்கா, ரஷ்யா என்று போகாத இடமே இல்லையாம். இந்தியாவுக்கு மட்டும் 42 தடவைகள் சென்று திரும்பியிருக்கிறாராம் பெப்பிடெண்டி.

1995ம் ஆண்டு இத்தாலியில் இருந்து தனது பயணத்தைத் தொடங்கியவர், இன்னும் அங்கு திரும்பவேயில்லை. 2000ம் ஆண்டு பிறக்கும் முன் டிசம்பர் 24ல் இத்தாலிக்குப் போகவுள்ளாராம்.

லொறிகளில் பயணம் செய்வது இவரை வெகுவாகக் கவர்ந்து விட்டதாம். அவை யாவும் இனிமையான அனுபவங்கள் என்கிறார் பெப்பிடெண்டி.

# ஆரோக்கியக் குளியல்



**இ**ந்தியாவின் மும்பாயில் உள்ள அழகு நிலையங்களில் புதிதாக அறிமுகமாகியுள்ளது இந்த ஆரோக்கியக் குளியல். ஓர் ஆள் படுப்பது போன்ற பெரிய பாத்திரத்தின் உள்ளே அமிழ்த்திக் குளிக்க வைக்கிறார்கள்.

இந்தக் குளியலில் அப்படி என்ன விசேஷம்? மக்னீசியம் சல்ஃபேட் உப்பை சுத்தமான நீரில் கொட்டி அதில் சிறிது ஒலிவ் எண்ணெயை ஊற்றி, சுமார் இருபது நிமிடம் படுக்க வைக்கிறார்கள்.

படத்தில் நீங்கள் பார்ப்பது போன்று, 20 நிமிடம் படுக்க வைக்கிறார்கள். இந்தக் குளியல் கழுத்துக்குக் கீழிருந்து மட்டும்தான்.

இந்த உப்புக்குளியலால் இரத்த ஓட்டம் சீராகுமாம். அத்துடன் உடலில் உள்ள உயிரற்ற திசுக்கள் வெளியேறி உடல் புத்துணர்ச்சி பெறுமாம்.


# திக்குமுக்காட வைத்த வீராங்கனைகள்

**ச**மீபத்தில் அமெரிக்காவின் ஒகியோ மாகாணத்தைச் சேர்ந்த ரக்பி பெண்கள் அணி, போட்டி ஒன்றில் கலந்து கொள்வதற்காக வோஷிங்டன் சென்றது.

போட்டியைக் கண்டு இரசிக்கப் பலர் வந்திருந்தனர். தமது இரசிகர்களை அதிர்ச்சியில் உறைய வைக்க ஒகியோ மாகாண ரக்பி அணி வீராங்கனைகள் விரும்பினார்கள்.

அதற்காக எல்லாரும் ஒன்றாகக்கூடி தமது மேலாடைகளைக் களைந்து இரசிகர்களை திக்குமுக்காட வைத்தார்கள். அப்படியே ஃபோட்டோவுக்கும் போஸ் கொடுத்துவிட்டு, தங்கள் உடலை உடைக்குள் மறைத்துக் கொண்டனர்.





## பிரமாண்ட வரவேற்பு

மலரப்போகும் புதிய நூற்றாண்டை வரவேற்று உலகெங்கும் மண்டபங்கள் ஸ்தூபிகள், கோபுரங்கள் போன்ற ஞாபகச் சின்னங்கள் வடிவமைக்கப்பட்டு வருகின்றன.

அதில் ஒன்றுதான் இந்த அலங்கார மண்டபம். இங்கிலாந்தின் இலண்டன் நகரின் கிறீன்விச் பகுதிக்கு அண்மையில் அமைக்கப்பட்டுள்ள பிரமாண்ட அலங்கார மண்டபமே இது.

பலகோடி ரூபாய் செலவு செய்து அமைக்கப்பட்டுள்ள இந்த மண்டபம் பல அருங்காட்சிகளை உள்ளடக்கியுள்ளது.

இந்த உலகப் பிரசித்தி பெற்ற மண்டபத்தினைப் பார்ப்பதற்காகப் பல உல்லாசப்பயணிகள் இப்போதே முண்டியடித்து வருகின்றனர்.

இருப்பினும் இதன் வெளிப்புறத் தோற்றத்தை மட்டுமே பார்ப்பதற்கு இப்போது அனுமதியளிக்கப்படுகிறது.

மலரும் புதிய நூற்றாண்டில் இது பார்வைக்காகத் திறந்து வைக்கப்பட இருக்கிறது.

(பட உதவி: அகமட் நியாஸ்-அஸாம் அலி)



## அதிசய கோழிக்குஞ்சு

கோழிகளுக்கு இரண்டு கால்கள்தான் இருக்கும். ஆனால் படத்தில் இருக்கும் இந்தக் கோழிக்குஞ்சுக்கு 4 கால்கள் உள்ளன.

இந்த அதிசயக் கோழிக்குஞ்சு பொரித்திருப்பது நம் நாட்டில் அல்ல. வெளிநாட்டில். பல்கேரிய நாட்டில் உள்ள கோழிப்பண்ணையில்தான் இந்தக் கோழிக்குஞ்சு பொரித்துள்ளது. (பட உதவி: ஹமீஸ் ஹலீம்)





## தகவல் பெட்டி

## முதன் முதலாக அழகி

என்ன இரண்டு பேரில் யார் அசல் நவோமி கெம்பல் என்று தெரியவில்லையா? வலது புறம் இருப்பவர் தான் அசல் நவோமி கெம்பல். அப்போது இடது புறம் உள்ளது?

மெழுகு பொம்மை. என்ன ஆச்சரியமாக இருக்கிறதா? உலகின் சூப்பர் மொடல் அழகி நவோமி கெம்பலின் இந்த மெழுகு பொம்மை இலண்டனில் உள்ள மெடம் டுசார்ட் மெழுகு பொம்மை கூடத்தில் வைக்கப்பட்டுள்ளது.

இந்த மெழுகு பொம்மைக் கூடத்தில் இதுவரை உலகின் புகழ்பெற்ற அரசியல் தலைவர்கள், அறிஞர்கள் விளையாட்டு வீரர்கள். வீராங்கனைகள், நடிக நடிகையர்களின் பொம்மைகள் மட்டுமே காட்சிக்கு வைக்கப்பட்டன. இப்போதுதான் முதன் முதலாக மொடல் அழகி ஒருவரின் பொம்மை இங்கே காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கிறது.



## செல்லிட வானொலி



ஃபிரான்ஸ் ரெலிகொம் நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ள செல்லிடப் பேசி இது. இந்தச் செல்லிடப்பேசியில் வானொலியும் உள்ளது. செல்லிடப் பேசியில் தொடர்பு கொள்ளாமல் இருக்கும்போது, இன்னொரு பட்டனைத் தட்டிவிட்டால் வானொலி நிகழ்ச்சிகளைக் கேட்கலாம்.

வானொலி கேட்டுக் கொண்டிருக்கும்போது தொலைபேசி அழைப்புக்கள் வந்தால், வானொலி உடனே தானாக நின்றுவிடும். தொலைபேசியில் பேசலாம். ரூ இன் வண் செல்லிடப்பேசி.

## பிரமாண்ட பேரணி

இதுவும் மலரப்போகும் புதிய நூற்றாண்டை வரவேற்கும் தகவல் தான். அமெரிக்காவில் உள்ள நியூயோர்க் நகரின் புரோட்வே பகுதியில் அண்மையில் நடைபெற்றது இந்தப் பிரமாண்ட பேரணி.

வண்ண வண்ண உடைகள் அணிந்தும் வாத்தியக் கருவிகளை இசைத்துக்கொண்டும் பிரமாண்ட பலூனைப் பறக்கவிட்டபடி நடந்த இந்தப் பேரணி பார்ப்பவர்களைப் பரவசப்படுத்தியது.

# நடிகரின் சிபாரிசும் நடிகையின் நன்றிக் கடனும்

'பாட்ஷா' பட இயக்குநர் இசையையும், நடனத்தையும் பின்னணியாக வைத்து இயக்கிய படத்தில் அறிமுகமானவர் 'மா' என்ற எழுத்தில் முடிவடையும் நான்கெழுத்து நடிகை.

இவர் அறிமுகமான முதல் படம் வெளியாகுமுன்னரே ஏழெட்டுப் படங்களில் கதாநாயகியாக நடிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. இவருக்கு இந்த வாய்ப்புகள் எப்படிக் கிடைத்தன என்று மற்ற நடிகைகளுக்கு ஆச்சரியம் கலந்த பொறாமை.

இவர் முதன் முறையாக 'வாய்ப்பு'க் கேட்டுச் சென்றது ஏழு முன்னணி நடிகரில் ஒருவரிடம்தான். இந்த நடிகர் தேசபக்தி படங்களில் நடித்து வருபவர். சில படங்களை இயக்கியும் இருக்கிறார்.

வாய்ப்புக் கேட்டு வந்த நடிகையை நடிகரும் மேக்-அப் டெஸ்ட் எடுத்து, கோணங்களை எல்லாம் சரிபார்த்து ஓ.கே. சொன்னார்.

## ஒத்துழைப்பு

தனது அடுத்த படத்தில் நடிப்பதற்கு சான்ஸ் வாங்கித் தருவதாக உறுதியளித்தார். இதனால் நடிகர் அழைக்கும் போதெல்லாம் நடிகை வந்து அவர் விருப்பப்படி ஒத்துழைத்தார்.

இந்த நிலையில் நடிகர் சொந்தமாகத் தயாரித்து இயக்கி நடித்து வெளியான மணியான கொடிப் படம் படுதோல்வியடைய, அடுத்த படத்தைத் தயாரிக்க மிகவும் சிரமப் பட்டார்.

'இத்தனை நாளும் என்னைத் தொட்டதுக்கு என்ன பதில் சொல்லுங்கள்?' என நடிகை போர்க்கொடி உயர்த்தினார்.

ஒருபக்கம் தனது படங்களின் தொடர்த் தோல்விகள், மறுபக்கம் நடிகையின் தொந்தரவு எனக் கலங்கிப் போனார் நடிகர்.

நிலைமை மோசமாகி வருவதைத் தெரிந்துகொண்ட நடிகர், "உனக்கு நான் சான்ஸ் வாங்கித் தருகிறேன்! உன்னைப் பெரிய நடிகையாக்குகிறேன்." என்று நடிகையிடம் சத்தியம் செய்துகொடுத்தார்.

## சிபாரிசு

தான் நடிக்கும் மூன்றெழுத்துப் படத்தில் நடிகையைப் போடுமாறு தயாரிப்பாளரிடம் வற்புறுத்த, அவரும் அப்படியே செய்தார். இந்தப்படத்தில் இவருக்கு ஜோடியாக மீன் நடிகை ஏற்கனவே நடித்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அதன்பின் நடிகை ஒப்பந்தமான அத்தனை படங்களும் நடிகரின் சிபாரிசில் கிடைத்தவைதான். இதற்கு நன்றிக் கடனாக அந்த நடிகரை தனது வீட்டில் உள்ள ஒருவராககவே கருத ஆரம்பித்துவிட்டார் நடிகை.

அதுமட்டுமல்ல நடிகர் எப்போது வந்து கதவைத் தட்டினாலும் அவரை அழைத்து அவருடன் 'சங்கம'மாகி வருகிறார் அந்த நடிகை.

•••

## ஓவர் டைம்

அண்மையில் 'ஜீன்ஸ்' நாயகனின் அப்பா சிங்கை நாட்டில் ஏற்பாடு செய்த கலை நிகழ்ச்சியில் பங்குபற்றி விட்டு முன்னணி நடிகைகள் சிலர் இந்தியா திரும்பியிருக்கிறார்கள்.

போன இடத்தில் நிகழ்ச்சிக்குப் போய் காசு பார்த்தது ஒருபுறம். இன்னொரு புறம் 'ஓவர் டைம்' செய்தும் சில இலட்சங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஒரே கல்லில் இரண்டு மாங்காய்கள் என்பது இதைத் தானோ?

## வெற்றிக்கொடி

தமிழில் இருந்து இந்தித் திரையுலகிற்குச் செ... இயக்குநர்கள் தமிழில் வெற்றி பெற்ற படத்தை இந்... மறுபதிப்பாக்கி வெற்றிப்படமாக்கி விடுவார்கள். ஆ... முதல் தடவையாக நேரடி இந்திப்படத்தை எடுத்து வெ... பெற்றுள்ளார் பிவாசு.

'ஹோகி பியார் கீ ஜீத்' என்ற பெயரில் வாசு இ... படம் இந்தியில் பெருவெற்றி பெற்றுள்ளது. படத்தின் வெ... விழாவில் கலந்துகொண்ட வாசுவை இந்திப்படத் தயா... பாளர்கள் மொய்த்து விட்டார்கள்.

"தமிழ் நாட்டில் படப்பிடிப்புகள் வைத்துக்கொ... சம்மதித்தால் இயக்குவேன்" என்று கூறிவிட்டாராம் வ...

## காதோடு சொல்லுகிறேன்

சிம்ம நடிகைக்கும் நடன சுந்தரமானவருக்கும் இ... நட்பை எல்லாரும் அறிவார்கள். அண்மையில் சி... நட்சத்திர இரவு நடத்த சிம்ம நடிகையுடனுடன் ... வரும் போயிருந்தார். அங்கே சில பணம் ப... மனிதர்களிடம் சிம்ம நடிகை கொஞ்சம் தாரா... கொண்டாராம். இது சுந்தரமானவருக்குப் ... இதனால் இருவருக்கிடையில் வாய்ச்சண்டை... தகராறு கைகலப்பில் முடிந்ததாம்.

பெரிய இயக்குநரின் மகள் நாயகனா... காதலின் சின்னம்' படத்தில், மூன்றெழு... நடிகையும் நடிகையும் நடித்துள்ளார். ... போது இயக்குநரின் மகளும், நடிகை... விடுவார்களாம். தான் அறிமுகப்படுத்... களிலும் விட்டுக் கொடுத்து அனுச... நடிகை இப்போது தன் மகளுடன் ... கிறாளே என்று கோபப்பட்டாராம் ...

ஆசை நாயகனுக்கு ஜோடியா... 'மா' எழுத்தில் ஆரம்பித்து 'கா' எ... கைக்குப் பெரிதாகப் படங்கள் இ... போன்ற வீட்டில் சொகுசு வா... தெரியுமா? பெரிய மனிதர்களு... பிஸியாக இருக்கிறார். இத... சொகுசான வாழ்க்கைக்கும் ...

கொங்கு நாட்டுத் த... யாணமே வேண்டாம் என்று ... கேட்டால், கல்யாணம் என்... ஒருவனுடன் ஒரே வீட்டி... இப்படி அடங்கிக் கிடக்க ... யாது என்று கூறுகிறார். ... அம்மணி அப்படிக... களா?




## கார்த்திக் ராசி

கார்த்திக் தன்னுடன் படங்களில் ஜோடியாக நடிக்கும் நடிகைகளின் பெயர்களை எண்சோதிடராசி பார்த்தபின் தான் தனக்கு ஜோடியாக நடிக்கச் சம்மதம் கொடுக்கிறாராம்.

சிலவேளைகளில் தனக்குப் பிடித்த நடிகைகளின் பெயர் ராசி பொருந்தாவிட்டால் அவர்களின் பெயரில் உள்ள எழுத்துக்களை சற்று மாற்றி வைத்து ஜோடி சேர்த்துக் கொள்கிறார்.

## மெருகூட்டுகிறார் ராஜா

கமலின் 'ஹேராம்' படத்திற்கு இசையமைப்பவர் எல். சுப்ரமணியம். இவரது இசையில் பாடல்கள் பதிவு செய்யப்பட்டு படப்பிடிப்பும் முடிந்துவிட்டது. இப்போது பின்னணி இசையில் கூடுதல் மெருகூட்ட இளையராஜாவை அணுகினார் கமல்.

இளையராஜாவும் அதற்கு சம்மதித்து பின்னணி இசையில் கூடுதல் மெருகூட்டி வருகிறார்.

## ராணியும் கோவிந்தாவும்

இந்தியில் அதிகமான படங்களைக் கைவசம் வைத்திருப்பவர் ராணி முகர்ஜி. இவர் கமலின் ஜோடியாக 'ஹேராம்' படத்திலும் நடித்துள்ளார். இந்தியில் ஜெட் வேகத்தில் முன்னணிக்கு வந்து கொண்டிருக்கும் ராணி படவாய்ப்புக்களைப் பிடிப்பதில் கெட்டிக்காரி. இயக்குநர், தயாரிப்பாளர், ஹீரோ என்று எவர் 'டின்னரு'க்குக் கூப்பிட்டாலும் தட்டிக் கழிக்கமாட்டார்.

இப்போது இவரை கோவிந்தாவுடன் ஒப்பிட்டுப் பேசுகிறார்கள். இந்தித் திரையுலகில் மிகவும் பருமனான கதாநாயகன் கோவிந்தாதான். தமிழில் பிரபு போல. இவரைப் போலவே ராணியும் குண்டாகி விட்டார் என்று மும்பாய்க்காரர்கள் கேலி செய்கிறார்கள்.

படப்பிடிப்பு, டின்கஷன் என்று ராணி பிஸியாக இருப்பதால் உடற்பயிற்சி செய்வதில்லையாம். இனி தினமும் உடற்பயிற்சி செய்து உடலை கட்டுக்கோப்பாக வைத்திருக்க முடிவு செய்துள்ளாராம்.


கோவிந்தா-ராணி முகர்ஜி

## மினி சினி

- கதாநாயகியாக நடித்து வரும் தேவயானி 'கண்ணுக்குக் கண்ணாக' படத்தில் முரளிக்குத் தங்கையாக நடிக்கிறார். இதேபோல் 'மாயி' என்ற படத்தில் சரத்குமாருக்குத் தங்கையாக நடிக்கிறார் சுவலட்சுமி.
- வெற்றிநடை போட்டுவரும் 'முதல்வன்' படத்தை இயக்கிய ஷங்கர் அடுத்து இயக்கும் படத்திற்கு 'அந்நியன்' என்று பெயரிடத் தீர்மானித்துள்ளார். இப்படத்தில் கதாநாயகனாகக் கமல் நடிப்பார் எனத் தெரிகிறது.
- தமிழில் படுதோல்வி அடைந்த சில படங்களை மொழி மாற்றித் தெலுங்கில் வெளியிட்டால் அங்கு வெற்றி பெறுவதுண்டு. அந்த வகையில் தமிழில் தோல்வியடைந்த 'என் சுவாசக் காற்றே' படம் தெலுங்கில் வெற்றி நடைபோடுகிறது.
- முன்னணி நடிகைகள் ஒரே ஒரு பாடல் காட்சியில் நடனமாடிவிட்டுப்போவது இப்போது சகஜமாகிவிட்டது. 'இந்து' படத்தில் ஒரே ஒரு பாடலுக்கு நடனமாடிய குஷ்பு 'வெற்றிக்கொடி கட்டு' படத்திற்காக மறுபடி நடனமாடவுள்ளார்.
- அர்ஜுன் கதாநாயகனாக நடிக்க ராஜ்கபூர் இயக்கி வரும் படம் 'சுதந்திரம்'. இப்படம் இந்தியில் அமீர்கான் வெற்றிகரமாக ஓடிய 'குலாம்' படத்தின் தமிழ்ப் பதிப்பு ஆகும்.
- விஜயகாந்த் முதன் முறையாக மூன்று வேடங்களில் நடிக்கும் படம் 'சிம்மாசனம்'. இதில் லட்சுமி, சுகன்யா, குஷ்பு, மானஸிகா, மும்தாஜ் ஆகிய ஐந்து நாயகிகள் மூன்று வேடங்களில் நடிக்கும் விஜயகாந்திற்கு ஜோடிகளாக நடிக்கின்றனர்.
- ஹொலிவூட் தயாரிப்பாளர் அசோக் அமிர்தராஜ் தமிழில் தயாரித்த 'ஜீன்ஸ்' படத்திற்கு இசையமைத்தவர் ஏ.ஆர்.ரஹ்மான். விரைவில் அசோக் அமிர்தராஜ் தயாரிக்கவுள்ள ஹொலிவூட் படம் ஒன்றில் ஏ.ஆர்.ரகுமானை இசையமைப்பாளராக அறிமுகப்படுத்தவுள்ளார்.
- விஜய் நடிக்கும் படங்களுக்கு தெலுங்கில் நல்ல வரவேற்பு இருப்பதால் அவர் நடித்த தமிழ்ப் படங்கள் தெலுங்கில் மொழி மாற்றப்பட்டு வருகிறது. இந்த வரிசையில் அவர் நாசர் இயக்கத்தில் நடித்த 'தேவதை' படம் தெலுங்கில் மொழிமாற்றப் படவிருக்கிறது.
- டாக்டர் ராஜசேகர்-ரம்பா ஜோடியாக நடிக்கும் 'பாரத் 200' என்ற மொழிமாற்றுப் படத்தில் முக்கிய வேடத்தில் மனோரமாவும் நடிக்கிறார். நீண்ட இடைவெளிக்குப் பின் மனோரமா இப்படத்தில் பாடல் ஒன்றைப் பாடியுள்ளார்.
- கன்னடத்தில் இருந்து வந்த 'ஏ', 'ஏ.கே.47' போன்ற படங்களில் நாயகியாக நடித்தவர் சாந்தினி. பிரசாந்த் ஜோடியாக 'ஆசையில் ஓர் கடிதம்' படத்தில் நடிப்பவர் பெயரும் சாந்தினி. பெயர்க் குழப்பம் வராமல் இருக்க முன்னவர் ஏ.கே. சாந்தினி என்று வைத்துள்ளார்.

## ரம்பாவிடம் 'அபேஸ்'

ரம்பாவுடன் 'உன்னருகே நானிருந்தால்' படத்தில் நகைச்சுவை நடிகர் விவேக்கும் நடித்து வருகிறார். ஒருநாள் படப்பிடிப்பை முடித்துவிட்டு வரும்போது ரம்பாவின் மேக்-அப் கண்ணாடியை 'அபேஸ்' செய்து கொண்டு வந்துவிட்டார்.

'ரம்பாவின் ராசி எனக்கும் வரட்டும்' என்று சொல்லிக்கொண்டு இருந்தவருக்கு கைமேல் பலனும் கிடைத்ததாம். அதுவரை யாரோ ஒருவர் கொடுக்க வேண்டிய 2 இலட்சம் ரூபாவை இவரிடம் திருப்பிக் கொடுத்து விட்டாராம்.

ரம்பாவின் ராசி நல்ல ராசிதான் போலும்.



## சம்பளம் முக்கியமில்லை

'கோடீஸ்வரன்' படத்தில் கதாநாயகனாக அறிமுகமாகும் எபி குஞ்சன், தந்தையின் தயாரிப்பில் மட்டுமன்றி வெளிநிறுவனங்கள் தயாரிக்கும் படங்களிலும் நடிக்க முடிவு செய்துள்ளாராம்.

"நல்ல கதை, நல்ல வேடம், நல்ல இயக்குநர் தான் முக்கியம். இதில் சம்பளம் குறைந்தாலும் நடிக்கமாட்டேன் என்பதில்லை. சம்பளம் முக்கியமில்லை" என்று சொல்கிறார் எபி.

## கரிஷ்மாவின் காதல்

'கோடீஸ்வரன்' படத்தில் ஒரே ஒரு பாடலுக்கு நடனமாடியிருக்கும் இந்தி முன்னணி நடிகை கரிஷ்மா கபூர். சினிமாவில் முன்னணி நடிகையாக இருப்பதைப் போன்று கிசுகிசுக்களில் அடிபடுவதிலும் முன்னணியில் இருக்கிறார்.

முதலில் அஜய் தேவ்கன் பின் அமிதாப்பச்சனின் மகன் அபிஷேக் என்று பலருடன் இணைத்துப் பேசப்பட்ட இவர், இப்போது பெரும் தொழிலதிபர் ஒருவரின் மகனுடன் கிசுகிசுக்கப்பட்டு வருகிறார்.

ஆனால் வழமைபோல் இதையும் மறுத்து வருகிறார் கரிஷ்மா கபூர்.

## மறுபடி மகனுடன்

பாரதிராஜா தனது மகனை நாயகனாக வைத்து இயக்கிய 'தாஜ்மஹால்' படத்திற்கு எதிர்பார்த்த வரவேற்பு கிடைக்கவில்லை. இருப்பினும் பாரதிராஜா கவலைப்படவில்லை. அடுத்த படத்திற்கான முயற்சியில் இறங்கிவிட்டார்.

பாரதிராஜா இயக்கும் அடுத்த படத்திலும் அவரது மகன் மனோஜ்தான் கதாநாயகனாக நடிக்கிறார். இவருடன் முக்கிய வேடத்தில் பார்த்திபனும் நடிக்கவிருக்கிறார். இந்தப் படத்தை பாரதிராஜாவே சொந்தமாகத் தயாரிக்கப் போகிறார்.

## தமிழைவிட இந்தி மேல்

கல்கத்தா கன்னழகி ரியா சென் 'தாஜ்மஹால்' படத்தை அடுத்து நடித்து வரும் ஒரே ஒரு தமிழ்ப் படம் 'குட்லக்'. சுமார் ஆறு தமிழ்ப்பட வாய்ப்புக்களை நிராகரித்த ரியா சென் 'குட்லக்' படத்திற்கு மட்டும் ஏன் ஓ.கே. சொன்னார் தெரியுமா? 'குட்லக்' இந்தியிலும் வெளியாக உள்ளபடியால் தானாம். "தமிழில் ஐந்தாறு படங்களில் நடிப்பதைவிட ஒரே ஒரு இந்திப் படத்தில் நடித்தால் இந்தியா முழுவதும் பிரபலமாகி விடலாம்" என்கிறார் ரியா.


மனோஜ்-ரியா சென
படம்: தாஜ்மஹால்

## அப்படியா சங்கதி?

'பூவே உனக்காக' படம் மூலம் அறிமுகமானவர் அஞ்சு அரவிந்த். தற்போது இவர் 'கண்ணா உன்னை நேசிக்கிறேன்', 'உன்னருகே நானிருந்தால்', 'வானத்தைப் போல', 'ஏழையின் சிரிப்பில்' என நான்கைந்து படங்களில் நடித்து வருகிறார்.

அத்துடன் சில தொலைக்காட்சித் தொடர்களிலும் நடித்து வருகிறார்.

அண்மையில் இவர் கேரள தொழிலதிபர் ஒருவரை மணந்துகொண்ட விஷயத்தை எல்லாரிடமும் மறைத்து வருகிறார்.

தனக்கு இன்னமும் திருமணம் நடக்கவில்லை என்பது போலவே மற்றவர்களிடமும் நடந்து வருகிறார்.

எவ்வளவு நாளைக்குத்தான் மறைப்பீங்க மேடம்?

## ஜனவரி உனக்காக

முரளி-மீனா நடித்து 'இரணியன்' படம் தற்போது ஓடிக்கொண்டிருக்கிறது. இப்படத்தை தரம் சந்த் லுங்கட்டின் தாரா கிரியேஷன்ஸ் தயாரித்தது. இதையடுத்து இந்நிறுவனம் தயாரிக்கும் புதிய படம் 'ஜனவரி உனக்காக'.

இந்தப் படத்தில் சத்யராஜ் கதாநாயகனாக நடிக்க அவருக்கு ஜோடியாக சௌசல்யா நடிக்கிறார். இருவரும் ஜோடியாக நடிக்கும் முதல்படம் இது. இவர்களுடன் பிரகாஷ்ராஜ், ரஞ்சித், சார்லி, மணிவண்ணன், விவிங்ஸ்டன் ஆகியோர் நடிக்கிறார்கள்.

திரைக்கதை-வசனம் எழுதி இயக்குபவர் புதிய இயக்குநர் ஷிவா. இவர் இயக்குநர் கேயாரிடம் படங்களில் உதவி இயக்குநராகப் பணிபுரிந்தவர். இதன் படப்பிடிப்புக்கள் சென்ற மாதம் ஆரம்பமாகி விட்டன. வரும் வருடம் ஜனவரி மாதம் இப்படத்தை திரையிடத் திட்டமிட்டுள்ளார்கள்.

## "இளைஞர்களுக்குப் பொறுமை இல்லை"

### ரம்பாவின் ஆதங்கம்

சிம்ரான் வரவுக்குப் பின் சிறிது ஆட்டங்கண்டுள்ளார் ரம்பா. இருப்பினும் ரம்பா பிஸியாகத்தான் நடித்து வருகிறார். ரம்பாவுக்கும் புதிய படவாய்ப்புக்கள் குறைந்து விட்டன என்று பேச்சு அடிபடுகிறதே...

"யார் அப்படிச் சொன்னது? எனக்குப் புதிய படவாய்ப்புக்கள் வந்து கொண்டுதான் இருக்கின்றன. தமிழில் 'கோசலன்', 'தென்றலைத் தூது விட்டு', 'உன்னருகே நானிருந்தால்' 'சுதந்திரம்' தெலுங்கில் 3 படங்கள், இந்தியில் 2, கன்னடத்தில் 1. இவ்வளவு படங்கள் இருக்கின்றன. இன்னும் புதிய படங்களுக்கான பேச்சு வார்த்தைகள் நடைபெற்று வருகின்றன."

### கவர்ச்சிப் பதுமையா?

'இளமை உள்ளவரைதான் கவர்ச்சியாக நடிக்க முடியும். வயதான பின் கவர்ச்சியாக நடித்தால் யார் பார்ப்பாங்க? அத்தோடு இப்போதுள்ள ரசிகர்களின் ரசனையும் மாறியுள்ளது. கதாநாயகிகள் அழுதா பிடிக்காது. அந்தக்காலம்போல அண்ணன்-தங்கை பாசத்தைச் சொன்னா இப்ப எடுபடாது. இப்ப உள்ள இளைஞர்களுக்குப் பொறுமை இல்லை.

### ரசிகனா வெறியனா?

"சில ரசிகர்கள் நடிகைகளுக்கு கோவில் கட்டறது, குளம் வெட்டறதுன்னு முட்டாள்தனமா இருக்காங்க என்னைப் பொறுத்தவரை ஒரு ரசிகன் ரசிகனா மட்டும்தான் இருக்கணும். வெறியனா மாறக்கூடாது."



## விஜயகாந்தின் புதிய திட்டம்

முன்னணி நடிகர்களில் மூன்றாவது இடத்தில் இருப்பவர் விஜயகாந்த். ரஜினி, கமல் படங்களுக்குப்பிறகு இவரது படங்கள்தான் அதிக விலைக்கு விற்பனையாகும்.

சில காலமாக இவரது படங்கள் தொடர்ந்து தோல்விகளைச் சந்தித்து வருகின்றன. சரியான கதைத் தேர்வின்றியும் கதாபாத்திரங்களில் கவனம் செலுத்தாமலும் நடித்த படங்கள் தோல்வியடைந்தன.

இனிமேல் வித்தியாசமான கதைகளைத் தேர்ந்தெடுத்து, தன் வயதிற்கேற்ற கதாபாத்திரங்களிலும் நடிக்க திட்டமிட்டுள்ளார். முதல் கட்டமாக தனது உடல் எடையையும் கணிசமாகக் குறைத்துள்ளார்.

வருடத்தில் ஓரிரு ஆக்ஷன் படங்களில் நடித்து தனது ரசிகர்களின் விருப்பத்தையும் பூர்த்தி செய்யவும் எண்ணியுள்ளாராம் விஜயகாந்த்.

## தெலுங்கில் வாய்ப்பு

சின்னவன் சாதனைக்காக எடுக்கப்பட்ட 'சுயம்வரம்' படத்தில் பிரபுவுக்கு ஜோடியாக நடித்தார் ஜஸ்வர்யா. 'சுயம்வரம்' தெலுங்கில் மொழிமாற்றப்பட்டு தமிழைப் போலவே அங்கும் ஜோராக ஓடியது. அதில் நடித்திருந்த ஜஸ்வர்யாவின் நடிப்பு அவர்களுக்கும் பிடித்து விட்டது. அதனால் 2 தெலுங்குப் படங்களில் நடிக்கும் வாய்ப்பும் ஜஸ்வர்யாவுக்குக் கிடைத்துள்ளது. இதுமட்டுமன்றி ஜஸ்வர்யாவுக்கு தொலைக்காட்சித் தொடர்களில் நடிப்பதற்கும் வாய்ப்புக்கள் வந்த வண்ணம் உள்ளன.


அர்ஜுன்-மனிஷா கொய்ராலா
படம்: முதல்வன்

## எரிச்சலும் பாராட்டும்

ஷங்கர் இயக்கத்தில் வெளிவந்துள்ள 'முதல்வன்' தமிழ்நாட்டில் வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கிறது. இருப்பினும் இது சில அரசியல் நெருக்கடிகளில் சிக்கியுள்ளது. அத்துடன் தமிழக முதல்வரின் எரிச்சலையும் சம்பாதித்து விட்டதாகக் கேள்வி.

ஆனால் ஆந்திராவில் தலை கீழ். தமிழைவிட தெலுங்கில் சுப்பர் ஹிட். 'முதல்வன்' படத்தைப் பார்த்த ஆந்திர மாநில முதல்வர் சந்திரபாபு நாயுடு இயக்குநர் ஷங்கரை அழைத்து, விருந்து கொடுத்துப் பாராட்டியுள்ளார்.

சேரன் இயக்கிய 'தேசிய கீதம்' படத்திலும் முதலமைச்சரைத் தாக்கியே கதை அமைக்கப்பட்டிருந்தது. இப்போது 'முதல்வன்' படமும் அப்படியே இதன் காரணமாக 'முதல்வன்' ஓடும் திரையரங்குகளில் கேளிக்கை வரி, பிளாக் டிக்கெட் போன்ற விஷயங்களை உன்னிப்பாகக் கவனிக்க தமிழக அரசால் அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

முகப்பில்
விஜயகாந்த்
படம்– வல்லரசு

வினிதா –பிரபு

## உனக்கில்லை மரணம்

நேற்று வரை
முகம் தெரியாதவனே!
உன்
எழுத்துக்களால்
புத்துலகம் படைத்தவனே!
**
உனக்கொரு
அன்பு மடல்...!
பார்ப்பாயா?
**
மழைக்கால
வானவில் போல்
ஏன்...
மறைந்து விட்டாய்
அகாலத்தில்...?
**
வானவில்
வானில் நிலைத்திருக்குமானால்
அதன் வண்ணம்
எம் மனங்களில் நிறைந்திருக்காது.
எனவேதானா
நீயும்...?
**
இல்லை...
நீ வானவில் இல்லை.
வில்லில்லா வானம்.
நீ!
**
அற்புதா...
உனக்கில்லை மரணம்
உன் முரசு கொட்டும் வரை
உன் கொள்கை
வாழும் வரை...
நீ நேசித்த நாம்...
வாழும் வரை...
உன் சுவாசம் காற்றில்
இருக்கும் வரை...
உனக்கில்லை மரணம்!

எஸ். காமிலா-
கெக்கிராவ.

## நெஞ்சைப் பிழியும் சோகக்காட்சி



இரண்டாம் உலகப் போரின் கொடூர முகத்தை மலேசிய மக்கள் அறிந்து கொண்ட நாள் 1942 பெப்ரவரி 7. அன்று தான் ஜப்பானிய விமானங்கள் மலேசியா மீது குண்டுமாரி பொழிந்தன. இந்த ஒருநாள் தாக்குதலில் மட்டும் 10 ஆயிரம் பேர் வரை மாண்டனர்.

ஒரு தாய், குண்டுவீச்சில் பலியாகியிருக்கும் தன் குழந்தையைப் பார்த்துக் கதறி அழுகிறார். பார்ப்போர் நெஞ்சைப் பிழியும் சோகக்காட்சி இது.

## வேதனையின் விளிம்பில்

சிந்திக்கிறேன்.... சிந்திக்கிறேன்....
பல பல சிந்தனைகள்...
சிந்தனைகள்.
செயற்படுத்த முடியவில்லை
என்னால் முடியவில்லை!
தீர்மானம் தேட முயன்று
தோற்றுப் போனேன்!...
நான் தோற்றுப் போனேன்!
என்னுள் கேள்விகள் எழுகின்றன...
பல கோணங்களில் எழுகின்றன.
விடைகளைத் தேடுகிறேன்...
தினம் தேடுகிறேன்!
கேள்விக்குறிகளாய் என்
சிந்தனைகள் தொடர்கின்றன...
மீண்டும் தொடர்கின்றன...
வேதனையின் விளிம்பில் நான்....
நின்று கொண்டிருக்கின்றேன்...
நித்தமும் நான்...?
நின்று கொண்டிருக்கின்றேன்!

செல்வி இராமையா
அருள்ஜோதி- மட்டக்களப்பு.

## கண்ணீர் அஞ்சலி

உன் எழுத்தால்
அற்புதங்கள் படைத்துக்கொண்டிருந்த
அற்புதனே-நீ
அற்பர்களின் தோட்டாக்களுக்கு
இரையாகிப்போனது
இன்னும் எங்களால்
கிரகித்துக் கொள்ள முடியவில்லை...!
-o-
உன்
உடல் மரித்துவிட்டதுதான்...
ஆனால்
உன் எழுத்துக்கள் மூலம்
என்றும் நீ
எங்களுடன்
வாழ்ந்து கொண்டிருப்பாய்...?
-o-
உன் எதிர்காலத் திட்டங்களை
முன் எடுத்துச் செல்வதில்
நாங்களும் பங்கெடுத்துக்கொள்வோம்...!
-o-
உன்
ஆத்மா சாந்தியடைய-நாங்கள்
இறைவனை
இறைந்து வேண்டிக் கொள்வோம்...
-o-
இறைவனடி சேர்ந்துவிட்ட
உனக்காக- எங்கள்
இதயார்த்தமான
கண்ணீர் அஞ்சலி...!

'ரசிகன்' ராம். யுவராஜ்.

## தேன்கிண்ணம்

## ஏதோ ஓர் ஏக்கம்

கடைவாயில் குருதி சொட்ட
மனிதர்களை தின்றுகொண்டே
யுத்தப்பேய் சிரிக்கின்றான்
அழவில்லை பூமி மாதா
ஏதோ ஓர் ஏக்கத்தில்....!
••
மண்ணுக்குள் மனிதத்துவம்
பூமியிலே காடைத்துவம்
அத்தனையும் தாங்கிக்கொண்டு-மாதா
ஏதோ ஓர் ஏக்கத்தில்...
••
மழலைகளின் குருதியாலே
மாதாக்கு அபிசேகம்
கன்னியரின் கற்பாலே
அவளுக்கு மலர் மாலை...!
கற்பின் தாய் உன்மேலே
கற்புக்கே அவமானம்!
இருந்தாலும் ஏனம்மா-நீ
ஏதோ ஓர் ஏக்கத்தில்...!
••
மனித...
உறுப்புக்களின் ஊடாக
வதைக்கின்ற பொருள் செல்ல
பாரிய பணியினிலே
எத்தனையோ மாளிகைகள்!
இத்தனையும்
பார்த்துக்கொண்டு
ஏனம்மா ஏக்கத்தில்...?
••
விடியலுக்காய்
நாங்களெல்லாம்
விடியும் வரை காத்திராது
நின்று விட்ட தூறலை-நாம்
மீட்டித்தான் பாராது-என்றும்
ஓயாத அலைகளோடு
அனைவருமே சங்கமித்தோம்!
எங்களது விடிவுக்காய்
நீயுமா ஏக்கத்தில்...?

நா. ஜோகன்- கல்முனை-3.

## மீண்டும் வரும்

தங்கை ரமணியே!
உங்கள்
கிராமம் கிழியவும்,
இயற்கை அழியவும்
சுதந்திரம் இழக்கவும்,
காரண கர்த்தா யார்?
உங்கள்
உறவுகள் கலையவும்
வாழ்வு சிதையவும்
ஊர் உருக்குலையவும்
காரண கர்த்தா யார்?
ரமணி!
பதிலைக் கண்டு
பகைவனை அழிக்க
இன்றே புறப்படு
இழந்தவை எல்லாம்
மீண்டு வரும்.
மீண்டு வரும்.

செல்வி கு. சுவர்ணா-
புதுக்குடியிருப்பு.
('முரசு' 331ல்
வெளியான
ரமணியின்
கேள்விக்குப் பதிலாக
அமைகிறது)

## நில் - கவனி - முன்னேறு

## ஊக்கம் தேவை

**நா**ம் செய்யும் செயலில் ஆர்வம் இருந்தால் உடனே ஊக்கம் பிறக்கும். ஊக்கம் உடற் சோர்வைக் குறைத்துச் சிரமங்களைச் சிறியதாக்கி வெற்றியைத் தேடித்தரும்.

மோட்டார் சுற்றினாலும் இயந்திரம் பழுதின்றி வேலை செய்யத் தயாராக இருந்தாலும் இதனை இணைக்கும் பெல்ட் இல்லாவிட்டால் என்ன பயன்?

ஒன்றுக்குமே பயன்படாது.

ஆற்றலை ஆக்கச் சக்தியுடன் இணைக்க ஊக்கம் என்ற பெல்ட் தேவை. வெறும் மனக்கிளர்ச்சியும் பரபரப்பும் ஆர்வமாகிவிடாது. அதில் ஆழமும் அகலமும் இருக்காது. வாழ்க்கையின் முன்னேற்றத்துக்கு அது பயன்படாது. ஆழமான ஆர்வம்தான் ஊக்கத்திற்கு உறுதுணையாக நிற்கும்.



ஒரு பலவீனமான தாய் தன் குழந்தைக்கு காய்ச்சல் வந்துவிட்டால் இரவு பகல் தூங்காமல் கண்ணும் கருத்துமாகப் பார்த்துக்கொள்கிறாள். இது அவளால் எப்படி முடிகிறது.

தன் குழந்தையிடத்தில் அவளுக்கு இருக்கும் அன்பும் அரவணைப்பும் குழந்தையை எப்படியும் குணமாக்கிவிட வேண்டும் என்கிற ஆர்வமும் ஊக்கமும்தான் காரணமாக இருக்கிறது. அவளுடைய முழு கவனமும் குழந்தையின் மேல் இருப்பதனால்தான் தன்னுடைய பலவீனத்தைக்கூட பொருட்படுத்துவது இல்லை.

இதே போன்ற ஆர்வமும் ஊக்கமும் நமக்கு வேண்டும். ஊக்கம் உடற் சோர்வைக் குறைத்துச் சிரமங்களைச் சிறிதாக்கிப் பெரும்பாலும் வெற்றியையே தேடித்தரும்.

துணிவுடன் உறுதியும் உண்மையுடன் ஊக்கமும் பெருந்தன்மையுடன் ஆர்வமும் சேர்ந்திருந்தால்போதும் எல்லாவற்றிலும் வெற்றியே கிடைக்கும்.

ஊக்கத்தின் மேம்பாட்டினால் ஆர்வத்தின் மிகுதியால் மனோவலிமையை பெற்றுவிட முடியும். வீணான வெறுப்புகளையும் மடமையான கழிவிரக்கங்களையும் களைந்து எறியவேண்டும்.

சிறந்த வாழ்க்கை வாழ வேண்டும் என்ற ஆர்வத்தை செய்கையிலே கொண்டு வந்து அவற்றைச் சாதித்து முடிக்கத் தக்க மனோதிடம் உறுதியும் ஊக்கமும் உழைப்பும் வேண்டும்.

வாழ் என்ற சொல்லில் இருந்துதான் வாழ்க்கை என்று வந்திருக்கிறது. நன்றாக வாழ்ந்திரு என்ற பொருளில்தான் வாழ் என்ற சொல் பிறந்திருக்கிறது. நன்றாக வாழ திறமையும் ஆர்வமும் அவசியம் வேண்டும்.

## இந்தவாரம் உங்கள் பலன்

ஜோதிடர் 'கரீனா'

12.12.99 முதல் 18.12.99வரை

**மேடம்:**
எதிலும் கவனமாக நடக்க வேண்டும். பொருள் விரயமும் எதிர்பார்த்த விடயம் ஏமாற்றமுமாக முடியும். உடல்நிலை சீராக இருக்காது. பிள்ளைகளால் பிரச்சனைகள் தோன்றும். ஏதேனும் முக்கிய, பொருட்கள் இழக்கவேண்டிவரும். அச்சுவினி கார்த்திகைக் காரர் கவனமாக இருக்கவேண்டும்.
அதிஷ்ட நாட்கள் : வெள்ளி, சனி.
அதிஷ்ட நிறம்: இளநீலம்; எண்: 9.
அதிஷ்ட திகதிகள்: 12, 16.

**இடபம்:**
கிரகபலம் இராசி அமைப்பில் மாற்றம் பெறுவது திருமணத்தடைகள் விலகும். கல்வி முயற்சிகள் உயர்வடையும். மனம் ஓரளவு அமைதிப் பெறும். ஆலயத்தரிசனம் கிடைக்கப்பெறும். எதிலும் கவனமாக நடந்துகொள்ளவேண்டும். ரோகிணி நட்சத்திரருக்கு மரணப் போராட்டம், வீண் அலைச்சல்கள் இருக்கும்.
அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், வியாழன்.
அதிஷ்ட நிறம்: ஊதா நிறம்; எண்: 6.
அதிஷ்ட திகதிகள்: 15, 18.

**மிதுனம்:**
11, 10ல் கிரக அமைப்பு நன்றாக இருப்பதால் புதியவசதி வாய்ப்புக்கள் ஏற்படும். பயண வெற்றிகளும் தூர இடத்து உறவினர் நண்பர்களின் சேர்க்கையும் காணப்படும். பரீட்சை அமைப்பு உயர்வாக அமையும். நெடுநாட்களாக நினைத்திருந்த விடயங்கள் பூர்த்தியாகும். மிருகச்சீரிடக்காரர் மகிழ்ச்சியாக காணப்படுவர்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், புதன்.
அதிஷ்ட நிறம்: மஞ்சள்; எண்: 3.
அதிஷ்ட திகதிகள்: 12, 14.

**கடகம்:**
மனதில் சந்தோஷம் ஏற்படும். தூரப் பயணத்துக்கு இடமுண்டு. உறவினர், நண்பர்கள் வீட்டுக்கு வருவார்கள் பணவசதிகள், கொடுக்கல் வாங்கல்கள் நடைபெறும். புதிய திட்டம் சில காலத்திற்கு ஒத்தி வைக்கப்படும் நிலை ஏற்படும். தெய்வக் கருமங்கள் செய்யவேண்டி ஏற்படும். ஆயிலியக்காரர்களுக்கு தெய்வ அனுகூலம் உண்டு.
அதிஷ்ட நாட்கள் : வெள்ளி, சனி.
அதிஷ்ட நிறம் : சாம்பல்வர்ணம்; எண்:* 4.
அதிஷ்ட திகதிகள் : 13, 16.

**சிம்மம்:**
பண உதவிகள், பெரியவளர்ச்சிகள் எல்லாவற்றையும் 9இல் வியாழன் பெரிய மாற்றத்துடன் செய்யவுள்ளார். பயண வெற்றியும் மனதில் சந்தோஷமும் அமையும். கல்வி தொழில் பிறசமுகத்தோர்களை சந்திக்கும் வாய்ப்பு ஏற்படும். காதல் கைகூடும் மகநட்சத்திர ஆண்களுக்கு வெற்றி கிடைக்கும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : மண்ணிறம்; எண்: 5.
அதிஷ்ட திகதிகள் : 15, 14.

**கன்னி:**
மனக்கஷ்டம், நோய் துன்பம் தொடரும். எதிலும் நிம்மதியற்ற நிலை காணப்படும். கணவர் வழியில் திருப்திகள் காணப்படமாட்டா. வீண் பிரச்சனைகளை தவிர்க்கவேண்டும். அந்தப் பெண்களுக்கு தொழில் வசதிகள் பெருகும்.
அதிஷ்ட நாட்கள்: செவ்வாய், வியாழன்.
அதிஷ்ட நிறம்: வெள்ளை; எண்: 2.
அதிஷ்ட திகதிகள்: 14, 17.

**துலாம்:**
குடும்பத்தில் கருத்து வேற்றுமைகள் தலைகாட்டும். எதிர்பார்த்த சந்தோஷங்களும் அமையும். கல்வியுடன் தொழில் வசதிகள் ஏற்படும். பொருள் பலம் வந்து சேரக்கூடிய கால ஜாதகபலன் உள்ளன. உடலில் சிறுசிறு நோய்துன்பங்கள் வந்து போகும். சுவாதி நட்சத்திர குடும்ப பெண்களுக்கு வசந்தமான நேரமாகும்.
அதிஷ்ட நாட்கள்: வியாழன், வெள்ளி.
அதிஷ்ட நிறம்: மண்ணிறம்; எண்: 1.
அதிஷ்ட திகதிகள்: 14,15.

**விருச்சிகம்:**
மன உறுதி தரும். புதிய திட்டங்கள் நடைமுறைக்கு வரப்பெறும். பணவசதிகள், குடும்பத்தில் சுபவைபவங்கள் இடம்பெறும். பத்திரிகை துறையைச் சேர்ந்தவர்களுக்கு இது மிகவும் உயர்வான வாரமாக அமையும். கல்வி உயர்வாக அமையப்பெறும்.
அதிஷ்ட நாட்கள் : வியாழன், ஞாயிறு.
அதிஷ்ட நிறம் : பலவர்ணம்; எண் : 6.
அதிஷ்ட திகதிகள் : 12, 18.

**தனுசு:**
பயண முயற்சிகள் விரும்பிய இடமாற்றம் என்பன கைகூடக்கூடிய பலன் உண்டு. காரிய சித்தி ஏற்படும். கல்வி, பரீட்சைகள் என்பன சீராக அமையும். குடும்ப உறவினர்களால் உதவிகள் கிடைக்கும். பயணவிருத்தி காணப்படும்.
அதிஷ்ட நாட்கள்: சனி, திங்கள்.
அதிஷ்ட நிறம்: மஞ்சள்; எண்: 3.
அதிஷ்ட திகதிகள்: 12, 15.

**மகரம்:**
நோய்துன்பங்கள் குறையும். பிள்ளைகளின் தொடர்புகள் நன்றாகக் காணப்படும். பணச்சிக்கல்கள் குறைந்தாலும் தேக நிலை தொடரும். மனதில் வெறுப்புக்கள் கூடிக்காணப்படும். பணவிரயங்கள் அலைச்சல் நிலை ஏற்படப்பார்க்கும். அவிட்ட, திருவோணக்காரர் கவனமாக இருக்கவேண்டும்.
அதிஷ்ட நாட்கள்: வெள்ளி, சனி.
அதிஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு; எண்: 7.
அதிஷ்ட திகதிகள்: 13, 16.

**கும்பம்:**
பணவசதிகள் வந்து சேரும். மனதில் போராட்டம் ஏற்படுவதுடன் பலகாலம் நீடித்த பிரச்சனைகள் எதிர்பார்புக்கள் பெரிய அளவில் தலை எடுக்கும். உறவினர் அமைப்பில் பிரிவினைகள் ஏற்படும். வார இறுதியில் ஓரளவு பிரச்சனைகள் குறையும். சதய நட்சத்திரருக்கு நன்றாக இல்லை.
அதிஷ்ட நாட்கள்: புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம்: ஒரேஞ்சு வர்ணம்; எண்: 5.
அதிஷ்ட திகதிகள்: 14, 11.

**மீனம்:**
புதிய விடயங்கள் கைகூடும். இடமாற்றம், பயண வசதிகளைக் கொடுக்கலாம். கல்வி, பரீட்சைகள் வெற்றிகளைக் கொடுக்கும். பணவரவு உண்டு. உத்திரட்டாதிக்காரருக்கு, வசதியான உயர்வான நேரமாகும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், வியாழன்.
அதிஷ்ட நிறம் : இளம் பச்சை; எண்: 6.
அதிஷ்ட திகதிகள் : 12, 15.

# லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

## விருந்துக்குச் செல்லும் போது!

நீங்கள் விருந்துக்குச் செல்லும்போது நினைவில் வைத்திருக்க வேண்டிய முக்கிய விஷயங்கள்:

- அழையாத விருந்தாளியாகச் செல்வது அவ்வளவு நல்லதல்ல.
- விருந்துக்குச் சென்று தற்புகழ்ச்சி செய்து கொண்டிருத்தல் ஆகாது.
- ஏற்கனவே சொன்னபடி குறிப்பிட்ட நேரத்தில் விருந்து வீட்டிற்குச் சென்று விடுங்கள்.
- எவ்வளவு நெருக்கமானவரது வீட்டிற்குச் சென்றாலும் அங்கிருந்துகொண்டு, வீட்டில் உள்ளவர்களின் குறையை மட்டும் பார்த்துக் கொண்டிருக்கவோ, பேசிக் கொண்டிருக்கவோ வேண்டாம். குறிப்பாகக் குழந்தைகளை "அப்படி வளர்க்க வேண்டும் இப்படி வளர்க்க வேண்டும்!" என்று ஆலோசனைகளை வாரி விட வேண்டாம்.
- எந்த வீட்டிற்குச் சென்றாலும் உங்களால் முடிந்த அளவு ஏதாவது இனிப்புக்களையாவது பண்டங்களையாவது வாங்கிச் செல்லுங்கள்.



- விருந்தினர் வீடுகளில் இருக்கும் அலங்காரப் பொருட்களை அனுபவிக்கவோ, சொந்தம் கொண்டாடவோ விரும்ப வேண்டாம்.
- வீடு திரும்பும்போது உங்கள் வீட்டிற்கு வர அவர்களை மனப்பூர்வமாக அழையுங்கள்.

## கைகள் மென்மையாக...!

வீட்டு வேலைகளைச் செய்யும் பெண்களின் கைகள் சொரசொரப்பாக இருக்கும். இதைப் போக்க,

உள்ளங்கையில் அரைத்தேக்கரண்டி சீனியைக் கொட்டிக் கொள்ளுங்கள். அதன் மேல் அரைமூடி எலுமிச்சம் சாற்றைப் பிழிந்து, உள்ளங்கை இரண்டையும் சூடு பறக்கத் தேயுங்கள். சீனி இல்லாமல் போகும் வரை இப்படிச் செய்ய வேண்டும். பிறகு குளிர்ந்த நீரில் கையைக் கழுவி விடுங்கள்.



தொடர்ந்து சில நாட்கள் இப்படிச் செய்து வந்தால் சொரசொரப்பு நீங்கி உள்ளங்கைகள் பட்டுப்போன்று மென்மையாக அமையும்.

நுளம்பு கடித்த இடத்தைச் சொறிந்தால் உடலில் சிறு புண்கள் ஏற்படும். அல்லது தடித்துவிடும் இதை நீக்க,

பட்டாணியைத் தூளாக அரைத்து சம அளவு அரிசிமாவு, முல்தானி பவுடர் மற்றும் ரோஸ்வோட்டர் கலந்து, உடல் முழுக்க அழுந்தத் தேய்த்து, பத்து நிமிடங்களுக்குப் பின் சில்லென்ற தண்ணீரால் கழுவி விடுங்கள்.

பாதிக்கப்பட்ட இடங்களில் அவ்வப்போது வெறும் ரோஸ்வோட்டரைப் பூசி வந்தாலும் நல்ல பலன் கிடைக்கும்.

## சமையல் குறிப்புக்கள்

✳ கீரையை மசியல் செய்யும்போது சோறு வடித்த கஞ்சியைச் சிறிது விட்டு மசிக்க, நன்கு குழைவாக மசியும்.

✳ துவரம் பருப்பை வேக வைக்கும்போது, ஒருபிடி கொள்ளையும் போட்டு வேக வைத்தால் உடம்புக்கு நல்லது.

✳ சுடுநீர்ப் போத்தலில் தேனீர், கோப்பி, பால் போன்ற பானங்கள் அதிகநேரம் சூடாக இருக்கவேண்டுமென்றால், சுடுநீர்ப்போத்தலினுள் இரண்டு அங்குலத்திற்குக் குறையாமல் காலியாக இடம் இருக்க வேண்டும். வழிய வழிய ஊற்றி மூடக்கூடாது.



✳ மண் பாத்திரங்களை வாங்கியதும் உள்ளே எண்ணெய் தடவி அடுப்பில் வைத்துச் சூடாக்கவும். பின் தேய்த்துக் கழுவி உபயோகித்தால் மண் வாசனை வராது.

✳ தக்காளி காயாக இருந்தால் சீக்கிரம் பழுக்க வேண்டுமா, ஒரு வாழைப் பழத்தை எடுத்து பிளாஸ்டிக் பை ஒன்றில் போட்டு, அதனுடன் பழுக்க வேண்டிய தக்காளிக் காய்களையும் போட்டு அதன் வாயை இறுக்கமாகக் கட்டி விடுங்கள். தக்காளிகள் இரண்டு நாட்களுக்குள் பழுத்துவிடும்.


## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் மகளிர் மட்டும்

☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.

(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.



**வாரம் ஒரு பட்டுச் சேலை** GT

பெயர்:........................

முகவரி:........................

........................

தொழில்:........................

கையொப்பம்:........................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 18-12-1999**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


வழங்குவது புவனா

# 17 மோனிக்கா என் மோனிக்கா

மோனிக்காவின் சித்தி தெப்ரா அவளிடம் கொடுத்திருந்த ஜென்னி ஃபர் ஃபிளாவேர்சின் சுயசரிதையை அன்றிரவே மோனிக்கா படித்து முடித்துவிட்டாள். ஜென்னி ஃபர், கிளின்ரனுடன் உறவாடிய முறைகளை பச்சை பச்சையாகவே வர்ணித்திருந்தார். அத்தகைய இன்ப அனுபவங்கள் தனக்கும் கிளின்ரனிடம் ஏற்பட்டதைப்போல் மோனிக்கா கற்பனையில் மிதந்தாள்.

பொழுது விடிந்தும் சில மணிநேரம் மோனிக்கா படுக்கையைவிட்டு எழுந்திருக்கவில்லை. அவளுடைய சித்திதான் காப்பியுடன் வந்து அவளை எழுப்பினாள். சித்தியை காலை வேளையில் கண்டதும் மோனிக்காவுக்கு சற்று நாணம் ஏற்பட்டுவிட்டது.

இத்தகைய ஒரு விரசமான புத்தகத்தை தனது சித்தியே படித்துப் பார்க்கும்படி தந்தாளே என்பதை நினைத்தமையினால் தான் அவளை அத்தகைய நாணம் அப்பிக்கொண்டதோ தெரியாது.

சித்தி தெப்ரா, அந்த நூலைப் படிக்கும்படி மோனிக்காவிடம் ஏன் கொடுத்தாளோ; அதுவே நேரெதிர் விளைவினை ஏற்படுத்தி விட்டிருக்குமோ என்று தெப்ராவை ஐயம் கொள்ளவைத்தது.

கிளின்ரன் வெவ்வேறு பெண்களுடனும் நெருக்கமான உறவு வைத்திருந்துள்ளார்; அவருடைய இயல்பான சுபாவம் அதுதான் என்பதை அறிந்தால், மோனிக்கா கிளின்ரனின் வலையில் வீழாமல் தப்பித்துக்கொள்ளுவாள் என்றுதான் தெப்ரா கருதினார். இளமைத் துடிப்புடன் இருந்த மோனிக்கா, ஜென்னி ஃபர் பிளாவேர்சின் வர்ணனைகளில் மயங்கி மென்மேலும் கிளின்ரன்பால் ஈர்க்கப்படலானாள்.

அடுத்த நாட்காலை பலதரப்பட்ட கற்பனைகளைச் சுமந்தவளாக மோனிக்கா வெள்ளை மாளிகையில் பிரவேசித்தாள். அன்று தனது வாழ்க்கையில் ஒரு புதிய திருப்பம் ஏற்படப் போகிறது என்று அவள் மனம் குதூகலம் அடைந்த வண்ணமிருந்தது.

தொலைபேசி மணி ஒலி எழுப்பும் ஒவ்வொரு தடவையும் தனக்குத்தான் ஜனாதிபதியின் அழைப்பு வருகிறது என்று கருதலானாள். எந்தக் கணமும் ஜனாதிபதியின் அந்தரங்க அலுவலர் தன்னை கிளின்ரனிடம் அழைத்துச் செல்ல வருவார் என்று வாயில் கதவையே பார்த்த வண்ணம் இருந்தாள்.

### ஏமாற்றம்

அன்று முழுவதும் அவளுடைய மனம் அதீத கற்பனைகளில் மிதந்தது. அன்றாடக் கடமையைக்கூட அவளால் கவனிக்க முடியவில்லை. அவளருகிலிருந்த ஏனைய சகாக்கள், மோனிக்காவுக்கு ஏதோ உடல்நிலை சரியில்லையோ என்று எண்ணத் தலைப்பட்டனர். ஆளுக்கொரு நிவாரணி மாத்திரைகளைக் கொண்டுவந்து அவளிடம் நீட்டினர். இதனால் மோனிக்கா சினமடைந்தாள்.

இதேவேளை ஜனாதிபதியின் அந்தரங்க அலுவலர் ஒருவர் உள்ளே நுழைந்தார். தன்னிடம்தான் வருகிறார் என்று அவளுடைய எண்ணம் குதித்து விளையாடியது. ஆனால் ஏமாற்றம். அவளருகில் நெருங்கி வருவது போல் வந்த அலுவலர், அவளுடைய இருப்பிடத்துக்கு சில மீட்டர்கள் தள்ளி இடதுபுறம் திரும்பி, அந்தப்பகுதித் தலைவரிடம் சென்று ஏதோ பேசிவிட்டுச் சென்றார்.


மோனிக்காவின் வாழ்க்கையில் அதுவரை இத்தகையதோர் ஏமாற்றம் நிகழ்ந்ததேயில்லை. ஏமாற்றமடைந்த மோனிக்காவின் மனம், அவளுடைய மாஜிக் காதலன் பிளேய்லரின் எண்ணத்தில் தாவியது. அவனுடன்தான் அனுபவித்த இன்ப லீலைகளை எண்ணிச் சப்புக் கொட்டியது.

ஜனாதிபதி ஜோன் எஃப் கென்னடியும் பல பெண்களுடன் அந்தரங்க உறவு வைத்திருந்தார் என்பதையும் மோனிக்கா அறிவாள். வெள்ளை மாளிகையில் பணிபுரியும் பெண்களை அவருடைய பிரத்தியேக அலுவலகத்துக்குள் வரவழைத்து காதல் லீலைகளில் மூழ்குவாராம்.

அவரிடம் பெண்களை அழைத் துச் செல்ல அந்தரங்க அலுவலர்களே வருவார்களாம். அதேபோல்தான் அவளுடைய அலுவலகத்துக்குள் வந்த அந்தரங்க அலுவலரும் தன்னை கிளின்ரனிடம் அழைத்துச் செல்லவே வருகிறார் என்று அவள் கருதினாள். அன்றைய ஏமாற்றம் மோனிக்காவை வெகுவாகப் பாதித்தது. வீடு திரும்பியதும் சகலருடனும் எரிந்து விழுந்தாள்.

தனது அறைக்குள், புகுந்து கட்டிலில் குப்புறப்படுத்த வண்ணம் அண்டி பிளேய்லருடன் தொலைபேசியில் தொடர்புகொண்டாள். "நீ இப்போது என்னிடம் பறந்தோடி வரவேண்டும்!" என்று விரகபதாபத்துடன் சிணுங்கினாள்.

மோனிக்கா காதல் உலகக் கற்பனைக் கடலில் எவ்வாறுதான் நீச்சலடித்தாலும் தனது தொழிலைப் பொறுத்த மட்டில் படு சுட்டியாகவே இருந்தாள். எந்தெந்தக் கோப்புக்கள் எங்கெங்கே உள்ளன; அவற்றின் இலக்கங்கள் என்ன என்பன போன்ற தகவல்களை மறக்காமல் நினைவில் வைத்திருந்தாள். முக்கியமான மிக



## தேடி வந்த அதிஷ்டம்...!

நீளமான இலக்கங்களைக்கொண்ட தொலைபேசிகளின் எண்களும் அவளுக்கு அத்துப்படி. அவளுடைய பிரிவில் பலவருடங்களாகப் பணிபுரியும் உயர்தர நிலையிலுள்ள அதிகாரிகளே, முக்கியமான கோப்புக்களைத் தேடி எடுக்கும் பொறுப்புகளை மோனிக்காவிடமே ஒப்படைப்பார்கள். எத்தகைய தாமதமுமின்றி, அக் கோப்புக்களைத் தேடி எடுத்து அவற்றின் விவரங்களையும் கணனியில் தொகுத்து உடனடியாகப் பிரதிகளையும் எடுத்து ஒப்படைத்து விடுவாள். இதனால் மோனிக்காவின் பெயர் உயர் அதிகாரிகள் மட்டத்தில் பரவலாக அடிபடத் தொடங்கியது.

வெள்ளை மாளிகையில் பயிற்சியாளர் பணி ஆக ஆறுமாதங்கள் மட்டுமே நீடிக்கும். இதற்குச் சம்பளம் எதுவும் வழங்கப்பட மாட்டாது. எனினும் வாராவாரம் கைச்செலவுக்கென ஒரு குறிப்பிட்டத் தொகை வழங்கப்படும்.

குறிப்பிட்ட காலக்கெடு முடியும் திகதி நெருங்க நெருங்க, பயிற்சியாளர்கள் அடிக்கடி சந்தித்து வருங்காலத்தில் அவர்களுடைய திட்டங்கள் என்னென்ன என்பதை ஒட்டி கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டனர். மோனிக்காவைப் பொறுத்தவரை மற்றுமொரு தவணை வெள்ளை மாளிகைப் பணியில் நீடிக்கவே விரும்பினாள். தன்னை ஒத்த பயிற்சியாளர்களிடமும் இக்கருத்தையே வெளிப்படுத்தியிருந்தாள்.

### அழைப்பு

வார இறுதி-சனி, ஞாயிறு விடுமுறை முடித்து திங்கட்கிழமை வெள்ளை மாளிகை திரும்பியதும் மோனிக்காவுக்கு ஒரு செய்தி காத்திருந்தது. அவளுடைய பிரிவின் மேற்பார்வையாளர் ட்ரேசி பெக்கெற், தன்னை அன்று பகல், தனது அலுவலகத்தில் வந்து சந்திக்கும்படி ஒரு குறிப்பை அனுப்பியிருந்தார்.

அதன்படி அவரைச் சந்திப்பதற்காக மோனிக்கா அவருடைய அலுவலகம் போனாள். தனது இருக்கையை விட்டு எழுந்து வந்து அவர் மோனிக்காவின் கையைக் குலுக்கிய வண்ணம் வரவேற்று, இருக்கையில் அமரும்படி கேட்டுக் கொண்டார். "நீ மிகவும் அதிஷ்டசாலிப் பெண்!" என்ற வார்த்தைகளை முதலில் உதிர்த்தார். தொடர்ந்து, "மிஸ் லிவின்ஸ்கி, இந்தச் சொற்ப காலத்தில் உனக்களிக்கப்பட்ட பணியில் நீ திறம்படச் செயலாற்றியிருக்கிறாய். உனது மேலதிகாரிகள் அனைவரும் உன்னுடைய பணியை மெச்சிப் பாராட்டுக் குறிப்புகளை அனுப்பியிருக்கின்றனர்.

வெள்ளை மாளிகையின் நடைமுறைப்படி, பயிற்சிக்குச் சேர்க்கப்பட்டவர்கள், குறிப்பிட்ட ஆறு மாதங்களுக்குள் உரிய திறமையை வெளிப்படுத்துவார்களானால் அவர்களுக்கு மேலும் ஆறு மாதங்கள் பயிற்சிப் பணியை நீடிக்க வாய்ப்பு அளிக்கப்படும். மேலும் இரண்டாவது தவணை பணியாற்ற வாய்ப்புப் பெறுபவர்கள் வெள்ளை மாளிகையின் நிரந்தர வேலையில் இணையும் சந்தர்ப்பத்தையும் பெறுவார்கள். உனது எண்ணம் என்ன? உனது சம்மதத்தை இன்னும் இரண்டொரு நாட்களில் தெரிவிக்கலாம். வாழ்த்துக்கள்!" என்று கூறி அவளுடைய கைகளைக் குலுக்கி வழியனுப்பினார்.



(வருவாள்)


## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?

## இணுவில் வாசகிக்கு அதிஷ்டம்!

| இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி | |
|---|---|
| இவர்தான் | சுமதி சுந்தரலிங்கம், 32, வன்னிய சிங்கம் வீதி, இணுவில் தெற்கு, இணுவில். |

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

## அம்மன் ஜுவல்ஸ்-முரசு இணைந்து வழங்கும்

## வைரமோதிரப் போட்டியில் அதிஷ்டசாலிகள் இவர்கள்தான்.

வைரமோதிரப் பரிசு பெறும் அந்த சூப்பர் அதிஷ்டசாலியின் பெயர், விபரங்கள் அடுத்தவாரம் இடம்பெறும்.

சென்றவாரங்களில் 20 அதிஷ்டசாலிகளின் பெயர், விபரங்கள் இடம் பெற்றன. ஏனைய 5அதிஷ்டசாலிகளது பெயர், விபரங்கள் இதோ:

1. தி. தயாகரன்
சைக்கிள் வேர்க்ஸ் சொப்,
ஆஸ்பத்திரி வீதி, மன்னார்.

2. மு. ஹைறுன்நிசா
இல. 217 ஏ.பி.எம்.வீதி,
சாய்ந்தமருது-06.

3. ஏ. அழகேஸ்வரி
இல. 118, 2ம் வீதி,
நித்தியபுரி, திருகோணமலை.

4. என். விதுஷியா
இல. 81/1, கேனல் வீதி,
நீர்கொழும்பு.

5. பாதிமா றிகாஸா
இல. 323, பமுனுமுல்ல,
அடுலுகம
பண்டாரகம.






சக்தி தனக்கே உரிமையாக்கு- அது
சக்தியென்று வீணைதனில் பேசும்-
சித்தம்
சக்தி தனக்கே உரிமை யாக்கு-அது
சக்திபரி மளமிங்கு வீசும்.

-சுப்பிரமணிய பாரதியார்.

# யார் உயர்ந்தவர்?

## பாப்பா முரசு சிறுகதை

ஒரு காட்டில் மயில் ஒன்று சந்தோஷமாக தோகை விரித்து ஆடியது. இதைக் காட்டில் உள்ள ஏனைய பறவைகள் பார்த்து இரசித்தன. இதைக் கண்ட மயிலுக்கு கர்வம் கூடியது.



தன் அழகைப் பற்றியே அது பெருமையாக நினைக்கும். தான்தான் அழகான பறவை, தன்னைவிட அழகான பறவை உலகில் இல்லை, என்று அது நினைத்துக் கொண்டது.

இதனால் அந்த மயில் மற்றப் பறவைகளுடன் முகம் கொடுத்தே பேசுவதில்லை.

ஒருநாள் மயில் காட்டில் உலாவிக் கொண்டிருந்தபோது, சிட்டுக்குருவி ஒன்று அதைக் கடந்து சென்றது. அந்தச் சிட்டுக்குருவியோ மயிலைத் திரும்பிக்கூடப் பார்க்காமல் சென்றது.

இதைக் கண்ட மயிலுக்குக் கோபம் வந்தது. உடனே,

"ஏய் சிட்டுக்குருவி!" என்று கூப்பிட்டது.

சிட்டுக்குருவி திரும்பிப் பார்த்து, "என்ன?" என்று கேட்டது.

"என்ன என்னைப் பார்த்தும் பார்க்காத மாதிரிப் போகிறாயே... என்ன திமிரா?" என்றது.

"எனக்கு உன்னிடம் பேச ஒன்றுமில்லை. அதனால்தான் பேசாமல் போகிறேன்!" என்றது சிட்டுக்குருவி.

"என் அழகைப் பார்த்து உனக்குப் பொறாமை. அதனால்தான் பேசாமல் போகிறாய்!" என்று சீண்டியது மயில்.

"நீ அழகான பறவைதான். ஆனால் நீ மற்றவர்களை மதிப்பதில்லை. எனக்கு மதிப்பளிக்கிறவர்களுக்குத்தான் நான் மதிப்பு அளிப்பேன். அதனால்தான் நான் உன்னுடன் பேசவில்லை!" என்றது சிட்டுக்குருவி.

"அப்படியென்றால் நீ என்னை விடப்பெரியவனா?" என்று கேட்டது மயில்.

"யாரும் யாருக்கும் உயர்ந்தவர் இல்லை. நீ அழகாய் இருந்தால், அதற்காக உனக்கு நான் அடிமையாக இருக்க முடியாது. உன்னிடம் பேசிக்கொண்டிருக்க எனக்கு விருப்பமில்லை!" என்று கூறிவிட்டு 'விர்'ரென்டு பறந்துச் சென்றது சிட்டுக்குருவி.

சிட்டுக்குருவி பறந்து செல்வதைப் பார்த்துக்கொண்டிருந்த மயில். அது சொன்னதைச் சிந்தித்துப் பார்க்க ஆரம்பித்தது.

'யாரும் யாருக்கும் உயர்ந்தவர் இல்லை' என்று சிட்டுக்குருவி சொன்னது மயிலுக்குச் சரியென்றுப் பட்டது.

அன்றுமுதல் அது கர்வத்தை விட்டொழித்து மற்றப் பறவைகளுடன் சிநேகமாக இருந்தது.


# அதிசயம் - ஆனால் உண்மை!

→ நியூமெக்ஸிக் கோவில் ஜெமஸ்க்ரீக் மீது அமைந்துள்ள அணைக்கட்டு மிகவும் விந்தையானது. இதன் நீளம் 400 அடி. உயரம் 50 அடி. அகலம் 50 அடி. இந்த அணைக்கட்டு வெந்நீர் ஊற்றுக்களால் உருவானது.





✔ இதுவரை கிடைத்துள்ள வைரங்களிலேயே மிகவும் பெரிதான, இந்த 125 கரட் வைரத்தை 1853ல் ஒரு பிரேஸில் நாட்டு அடிமைப்பெண் கண்டெடுத்தாள். இதற்குப் பரிசாக அவளுக்கு விடுதலை கிடைத்தது.



→ அவுஸ்திரேலிய நாட்டின் குயின்லாந்து மாகாணத்தின் தேசியப்பூ இது. இந்தப் பூ பார்வைக்குப் பெரிய பூப்போல தோன்றினாலும், இது பெரிய செந்நிற இலைகளால் சூழப்பட்ட சிறிய பூ.

# ஹோமியோபதி



மருத்துவமுறைகளில் ஒன்று ஹோமியோபதி முறை. இந்த மருத்துவமுறையை உருவாக்கியவர் ஹானிமன் என்பவர். இவர் 1755-1843 காலப்பகுதியில் வாழ்ந்தவர்.

ஹோமியோபதி மருத்துவ முறையை இவர் உருவாக்கியதால் இவரை 'ஹோமியோபதி மருத்துவத்தின் தந்தை' என அழைக்கிறார்கள். இவர் தமது சிகிச்சை முறையை மேல் நாட்டில் இருந்து பிரித்துக்காட்ட அதற்கு 'அலோபதி' என்று பெயரிட்டார்.

'அலோ' என்பது கிரேக்கச் சொல்லாகும். 'அலோஸ்' என்றால் ஏனையது என்று பொருளாகும். ஏனைய மருந்துகளைக் கொண்டு சிகிச்சை அளிப்பதே அலோபதி. அதாவது நோய்க்குறிகளுக்கு எதிரான விளைவுகளை ஏற்படுத்தும் சிகிச்சை அளிப்பது.

இதற்குப் பின்தான் இந்தச் சிகிச்சை முறைக்கு 'ஹோமியோபதி' என்ற பெயர் வந்தது. 'ஹோமியோ' என்பது 'ஹோமோஸ்' என்ற கிரேக்கச் சொல்லில் இருந்து உருவானதாகும்.

'ஹோமோஸ்' என்றால் நோயின் அதே விளைவுகளைத் தரும் மருந்துகளைக் கொண்டு சிகிச்சை அளிப்பது என்று அர்த்தம் ஆகும்.

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **18.12.1999.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **323**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 321

**பரிசுக்குரியவர்:**
என்.எம். முஸ்தாக் அஹமட்,
மட்/ அலிகார் தேசிய பாடசாலை, ஏறாவூர்.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| ம. துர்கபிரியா, இறம்பைக்குளம் ம.ம., வித்தியாலயம், வவுனியா. | ந. விதுஷன், புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம், யாழ்ப்பாணம். |
| அ. கஜன், சென். ஜோசப் கல்லூரி, திருகோணமலை. | சஜீத் அஹமட் ஏ.காதர், கமு/அல் மனார் மத்திய கல்லூரி, மருதமுனை. |
| வி. ஷர்மிளன், பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி, கொழும்பு-4. | ஜனனிப்பிரியா மோகன், ஸ்ரீ முத்துமாரி அம்மன், த.ம.வி., கம்பளை. |
| கே.டி. ஸ.்ப்ராஸ் மொஹமட், மலிரவெல முல்ல, முஸ்லிம் வித்தியாலயம், வெள்ளவாய. | எம். சபான் ஜவாஹிர், ஸாஹிரா தேசிய பாடசாலை, மாத்தளை. |
| சுந்தரராஜ் தினேஷ்ராஜ், ஸ்பிரிங்வெளி தமிழ் வித்தியாலயம், பதுளை. | சந்திரமோகன் கிஷாந், ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி, திருகோணமலை. |

# விடுகதைகளும் விடைகளும்

1. கண்ணில் கண்டதைச் சுருட்டிக் கொள்வான்;
கலர் கலராய் வெளியே விடுவான்.
அவன் யார்?
2. தன் வயிற்றுப் பிள்ளையைத் தானே கொல்லும் தாய்.
அது என்ன?
3. நித்திரையின் தூதுவன்; நினையாமல் வருபவன்.
அவன் யார்?
4. வட்ட வட்டக் கால்காரன்;
எட்டி எட்டி மிதித்தால் எழும்பிக் குதித்தோடுவான்.
அவன் யார்?
5. எட்டுத் திக்கிலும் பாய்கிறவன் எவர் கண்ணிலும் படமாட்டான்.
அவன் யார்?
6. நாலு கால்காரன் நகர மாட்டான்;
நல்லவனுக்கு இடம் கொடுப்பான்;
கெட்டவனுக்கும் இடம் கொடுப்பான்.
அவன் யார்?
7. வயலுக்குக் காவல்காரன்;
வயிற்றுப் பசி இல்லாதவன்.
அவன் யார்?
8. ஓடத் தெரிந்தவளுக்கு நடக்கத் தெரியாது.
அவள் யார்?
9. எப்போதும் கீழே விழுவான்; ஆனால் அடிபட மாட்டான்.
அவன் யார்?
10. நீலவண்ணப் பூந்தோட்டத்தில் நிறைய நிறைய மின்மினிப்பூச்சிகள்
அது என்ன?


**விடைகள்:**

| | |
|---|---|
| 1. கமரா | 2. தீப்பெட்டி |
| 3. கொட்டாவி | 4. சைக்கிள் |
| 5. காற்று | 6. நாற்காலி |
| 7. கத்தரி வெருளி | 8. தண்ணீர் |
| 9. மழை | 10. நட்சத்திரங்கள். |

# பிரிஸில் கோன்

அமெரிக்காவின் கலிஃபோர்னியா மாநிலத்தில் 'பிரிஸில் கோன்' என்றழைக்கப்படும் மரங்கள் வளர்கின்றன. இவை 6 ஆயிரம் வருஷங்கள் வரை அழிந்துபோகாமல் வளரும்.

அது மாத்திரமன்றி கடல் மட்டத்தில் இருந்து சுமார் 9 ஆயிரம் அடி உயரம்வரை இந்த மரங்கள் வளரக்கூடியவை.



# ஏன் தெரியுமா?

நாம் நிற்கும்போதும் நடக்கும்போதும் நம் உடலின் புவியீர்ப்பு மையம் நம் பாதங்களை விட்டு வெளியே விலகிச் செல்வதில்லை. அதே சமயம் ஒரு பாரமான வாளியைத் தூக்கும்போது, புவியீர்ப்பு மையம் கால் பரப்பைவிட்டு விலகிச் செல்ல வாய்ப்பு ஏற்படுகின்றது.



இந்த நிலையில் நாம் கீழே விழாமல் நின்றிட மறுகையைப் பக்கவாட்டில் (கிடைத் திசையில்) நீட்ட வேண்டியிருக்கிறது. இது ஏன் என்று தெரியுமா?

நம் உடலின் புவியீர்ப்பு மையத்தை மீண்டும் பாதப்பரப்பிற்குள் கொண்டு செல்ல இது உதவுகிறது. இதனால்தான் பாரமான வாளியைத் தூக்கும்போது மறுகையைப் பக்கவாட்டில் நீட்டுகிறோம்.


கயிற்றின் மீது தடியைப் பிடித்துக் கொண்டு கழைக்கூத்தாடிகள் நடப்பதும் இதே அடிப்படையில்தான்.

# உயரமான எரிமலை


உலகெங்கும் சுமார் 450 எரிமலைகள் கனன்று கொண்டிருக்கின்றன என்று கணக்கிடப்பட்டுள்ளது.

உலகிலேயே மிகவும் உயரமான எரிமலை ஆர்ஜென்டினாவில் இருக்கின்றது. இதன் உயரம் 61 ஆயிரம் அடி ஆகும்.

தீப்பிழம்புகளைக் கக்கும் இராட்சத எரிமலைகள் இந்தோனேசிய நாட்டில் அதிகமாக உள்ளன.



# பிளாக் விடோ



சிலந்திகளிலேயே ஒரு சில சிலந்தி இனங்கள்தான் மிகவும் விஷத்தன்மை வாய்ந்தவை. இந்த விஷச் சிலந்திகளில் ஒன்றுதான் 'பிளாக் விடோ' (கறுப்பு விதவை) எனப்படும் சிலந்தி இனம்.

வட அமெரிக்காவில் வசிக்கும் இந்த சிலந்தி ஓர் அங்குலம்வரை இருக்கும். இதன் உடம்பில் ஒரு முடிகூட இருக்காது. கறுப்பு வண்ணத்தில் பளபளவென்று இருக் கும். இதன் அடிப்பாகத்தில் சிவப்பு வண்ணத்தில் கடிகாரம் போன்ற அடை யாளம் இருக்கும். அதனால் இதை 'மணிக்கடிகாரச் சிலந்தி' என்றும் அழைப்பர்.

பொதுவாக இந்தச் சிலந்தி சாதுவாக இருக்கும். ஆனால் இதன் வலையில் ஒரு சின்ன அசைவு ஏற்பட்டால் அவ்வளவு தான்!

அது சிறு பூச்சியாக இருந்தாலும் சரி மனிதனாக இருந்தாலும் சரி, உடனே சீறிப்பாய்ந்து கடித்துவிடும்.

மனிதனுக்கு 'பிளாக் விடோ'க்கள் கடித்தால் பக்கவாதம், தசைச்சுளுக்கு போன்ற உபாதைகள் ஏற்படும்.

# சிகப்பு வணக்கம் 05

திக் திக் தொடர்

கிரைம் சக்கரவர்த்தி ராஜேஷ்குமார்

பெண் போலீஸ் ஸ்க்வாட் இன்ஸ்பெக்டர் ஜெயந்தி, கதவைத் திறந்து கொண்டு வெளிப்பட, அறைக்கு வெளியே பதட்ட முகங்களோடு காத்திருந்த ஆச்சார்யா, ருத்ரா, போலீஸ் கமிஷனர் லட்சமிபதி மூன்றுபேரும் அவரை நோக்கி வேகமாய்ப் போனார்கள்.

லட்சுமிபதி கேட்டார்.

"என்ன... அந்தப் பதினோரு பெண் நிருபர்களில் யார் மனித வெடிகுண்டு என்பதைக் கண்டுபிடித்துவிட்டீர்களா..?"

ஜெயந்தி சின்னதாய் புன்னகைத்தார்.

"அவர்களில் யாருமே மனிதவெடி குண்டு இல்லை."

"நன்றாக சோதனை செய்தீர்களா?"

"அந்தப் பதினோரு பேர்களின் உடைகளையும் களைந்து ஏறக்குறைய பிறந்த மேனிகளாக்கித்தான் சோதனைபோட்டோம். யாரிடமும் எந்த வெடிகுண்டும் இல்லை. ஆனால் வேறு ஒரு ஆச்சர்யம் எங்களுக்குக் கிடைத்தது..."

"என்ன ஆச்சர்யம்?"

"அந்தப் பதினோரு பேர்களில் பத்து பேர் மட்டுமே பெண்கள். ஒருவர் ஆண்!..."

மூன்று பேரும் வியப்புக்குப் போனார்கள்.

"என்னது ஆணா..?"

"ஆமாம்...! பெண் வேடம் போட்ட ஆண்! உடைகளைக் களைந்தபோதுதான் அந்த உண்மை வெளிச்சத்துக்கு வந்தது. அவன் சேலையில் குத்தியிருந்த நேம் பேட்ச் இது..."

கமிஷனர் லட்சுமிபதி வாங்கிப் பார்த்தார்.

'மிஸ். நம்ரதா. ப்ரஸ் ரிப்போர்ட்டர். சூரியக்கதிர். வார இதழ்.'

ஆச்சார்யா கண்களில் வியப்பைத் தேக்கியபடி ருத்ராவையும் லட்சுமிபதியையும் மாறி மாறிப் பார்த்தபடி கேட்டார்.

"ஒரு ஆண் என்னதான் பெண் வேஷம் போட்டாலும் அவனோட நடையும் பேச்சும் காட்டிக் கொடுத்துடுமே....! அவனால எப்படி எல்லாரையும் ஏமாத்த முடிஞ்சது. திஸ்.. ஈஸ்... ஹைலி இம்பாஸிபிள்."

இன்ஸ்பெக்டர் ஜெயந்தி குறுக்கிட்டுச் சொன்னார். "ஸார்..! அவனைப் பார்த்தா யார்க்கும் சந்தேகம் வராது. ஒரு பெண்ணோட முகம் மாதிரியே அவனோட முகமும் இருந்தது. ட்ரஸ்ஸைக் கழற்றும் போதுதான் அவன் ஆண் என்கிற விஷயம் தெரிந்தது."

"வாங்க போய்ப் பார்க்கலாம்."

ஆச்சார்யா அறையை நோக்கிப் போக, மற்றவர்கள் தொடர்ந்தார்கள்.

பெண் நிருபர்கள் பத்துபேரும் சுவரோரமாய்ப் படுக்கவைக்கப்பட்டிருக்க, இன்ஸ்பெக்டர் ஜெயந்தி, அறையின் இன்னொரு பகுதிக்குக் கூட்டிக்கொண்டு போய், அங்கே உள்ளாடைகளோடு படுக்க வைக்கப்பட்டிருந்த பெண் வேடம் கலைத்த அந்த இளைஞனைக் காட்டினார்.

மூன்று பேரும் அவனை பார்வையில் நனைத்தார்கள்.

ஒரு பெண்ணுக்கே உரித்தான சின்ன முகம். மெலிந்த மென்மையான கால்கள். அவைகளில் பெயருக்குக்கூட பூனை ரோமம் இல்லை. முகத்திலும், ரோமம் வளரும் பகுதியான மோவாயிலும் மேலு தட்டிலும் ரோம வளர்ச்சி இல்லாமல் வழவழப்பாய்த் தெரிந்தது.

ஆச்சார்யா ஜெயந்தியிடம் கேட்டார், "இவன் ஏதாவது ஆயுதம் வெச்சிருந்தானா...?"

"ஒரு பேனாவைத் தவிர இவன் கிட்ட வேறு எதுவுமே கிடைக்கலை ஸார்..."

"இவன்கிட்டயிருந்த நேம்பேட்ச்ல எந்தப் பத்திரிகையோட நிருபர்னு போட்டிருந்தது?"

"சூரியக்கதிர்..."

"அப்படியொரு பத்திரிகை தமிழ்ல இருக்கா...? கேள்விப்பட்ட மாதிரி இல்லையே...?"

"நான் அந்தப் பத்திரிகையைப் பார்த்திருக்கேன் ஸார். அது கொஞ்சம் காரமான பொலிடிக்கல் மேகஸீன்... காஸ்ட்லி நியூஸ்களுக்கு அதிகப்படியான முக்கியத்துவத்தைக் கொடுத்து எழுதற பத்திரிகை."

"ஓர் ஆண், பெண் நிருபர் வேஷத்துல ப்ரஸ்மீட்டுக்குள்ளே நுழைந்திருக்கிறான்னா அதுக்கு ஏதாவது ஒரு முக்கியமான காரணம் இருந்திருக்கணும்..."

ருத்ரா குறுக்கிட்டுச் சொன்னார், "ஸார்! நமக்கு ஐ.பி.யிலிருந்து கிடைச்ச தகவல்படி பதினோரு பெண் நிருபர்களில் ஒருத்தி மனித வெடி குண்டா மாறி உள்ளே வந்திருக்கா. பட், அந்தத் தகவல்படி யார்கிட்டேயும் வெடிகுண்டு இல்லை. வெடி குண்டுக்குப்பதிலா இப்படியொரு அதிர்ச்சி நமக்காக காத்திட்டிருந்திருக்கு..."

"இவனுக்கு மயக்கம் தெளிஞ்சாத்தான் நமக்கு விடியல்கள் கிடைக்கும். அதுவரைக்கும் நாம கொஞ்சம் வெயிட் பண்ணியாகணும்..."



"இனிமேலும் கிரிக்கெட் வீரர்களை ஏர்போர்டில் இருக்க வைக்கிறது சரியில்லை. அவங்க எல்லாரையும் ஹோட்டலுக்கு அனுப்பி வெச்சுட்டா நமக்குக் கொஞ்சம் நிம்மதியா இருக்கும்... ஏர்போர்ட்ல இருக்கற மொத்தக் கூட்டமும் போயிடும். வாட். டு... யூ... ஸே மிஸ்டர் ஆச்சார்யா?"

போலீஸ் கமிஷனர் லட்சுமிபதி கேட்டதும், ஆச்சார்யா தலையசைத்தார்.

"எனக்கும் அதுதான் சரின்னு மனசுக்குப் படுது. கிரிக்கெட்டியர்ஸ் ஏர்போர்ட்டை விட்டுக் கிளம்பிட்டாலே எல்லா கூட்டமும் அடுத்த நிமிஷமே வெளியே போயிடும்...!"

ஆச்சார்யா சொல்லிக் கொண்டிருக்கும் போதே அவருடைய சஃபாரி பாக்கெட்டிலிருந்து கங்காருக் குட்டிபோல் எட்டிப் பார்த்துக் கொண்டிருந்த செல்ஃபோன் கனைத்தது.

எடுத்து காதுக்குப் பொருத்தினார்.

"எஸ்..."

"மிஸ்டர் ஆச்சார்யா...?"-ஓர் ஆண் குரல் மென்மையாய்க் கேட்டது.

"ஹோல்டிங்..."

"உங்களோடு ஒரு ஐந்து நிமிஷம் பேச வேண்டும். விஷயம் மிகவும் முக்கியமானது!"

"நீங்கள் யார்...?"

"இந்திய புலனாய்வுத் துறையில் நான் ஒரு முக்கியமான அதிகாரி. பெயரை வெளிப் படுத்த விரும்பவில்லை."

"சரி...! என்ன விஷயம் சொல்லுங்கள்!"

"உங்களுக்குப் பக்கத்தில் இப்போது வேறு நபர்கள் யாராவது இருக்கிறார்களா?"

"ஆமாம்..."

"அப்படியென்றால் உங்களோடு அந்த முக்கியமான விஷயத்தைப் பேசுவது அவ்வளவு உசிதமாக இருக்காது. நீங்கள் ஏதாவது தனியறைக்குச் சென்று அங்கிருந்து என்னோடு பேச முடியுமா...?"

"தனி அறையா?"

"ம்..."

"இங்கே தனியறை ஏதும் பக்கத்தில் இல்லையே...?"

"சரி... கொஞ்சம் ஒதுக்குப்புறமாகவோ அல்லது டாய்லட்டுக்குள் சென்றோ பேச முடியுமா..? ஏனென்றால் நான் கேட்கும் சில கேள்விகளுக்கு நீங்கள் பதில் சொல்லும்போது, பக்கத்தில் இருப்பவர்களுக்கு விஷயம் கசிந்து நாம் என்ன பேசிக்கொள்கிறோம் என்று தெரிந்து கொள்ள வாய்ப்பு இருக்கிறது... கொஞ்சம் சிரமம் பார்க்காமல் ஒதுக்குப் புறமாய் வந்து பேசுகிறீர்களா...?"

"வருகிறேன்... லைனிலேயே இருங்கள்..."

ஆச்சார்யா சொல்லிவிட்டு, செல்ஃபோனை இரண்டு கைகளாலும் பொத்திக் கொண்டு ருத்ராவையும் லட்சுமிபதியையும் ஏறிட்டார். குரலைத் தாழ்த்திக் கொண்டு மெல்லிய குரலில் சொன்னார்.

"யாரோ இந்திய புலனாய்வுத்துறை அதிகாரியாம். என்கூட ஏதோ முக்கியமான விஷயம் பேசணுமாம். யார்க்கும் தெரியாமே ஒதுக்குப்புறமா வந்து பேசச் செல்றார்..."

கமிஷனர் தடுத்தார். "வேண்டாம் மிஸ்டர் ஆச்சார்யா... நம்முடைய கவனங்களை டைவர்ட் பண்ண இது மாதிரியான ஃபோன் கால்கள் வரலாம். இங்கிருந்து கொண்டே 'நான் இப்போது டாய்லட்டிலிருந்து பேசுகிறேன்' என்று சொல்லி, விஷயம் என்ன என்பதைத் தெரிந்து கொள்ளப் பாருங்கள்."

ஆச்சார்யா தலையசைத்து, சில விநாடிகள் மௌனமாய் இருந்துவிட்டு செல்ஃபோனுக்கு உதட்டைக் கொடுத்தார்.

"எஸ்.... சொல்லுங்கள்..."

"இப்போது உங்கள் பக்கத்தில் யாரும் இல்லையே?"

" இல்லை..."

"எங்கேயிருந்துகொண்டு பேசுகிறீர்கள்...?"

"டாய்லெட்..."-

"மிஸ்டர் ஆச்சார்யா... நீங்கள் வயதில் பெரியவர். கிரிக்கெட் போர்டுக்குச் சேர்மன். பொய் பேசலாமா...?"

"பொய்யா...?"

"ம்... பொய்தான். இருக்கிற இடத்தை விட்டு நீங்கள் ஒரு அடிகூட அசையவில்லை. என்னை நீங்கள் நம்பாதபோது நான் எதற்காக உங்களை நம்ப வேண்டும்...? உங்களிடம் சில உண்மைகளைச் சொல்ல நினைத்தேன். உங்கள் நடவடிக்கையால் அதை இப்போது கெடுத்துக் கொண்டீர்கள். ஸாரி...! இனி நான் உங்களோடு பேச விரும்பவில்லை."

"வெயிட்... எ... மினிட்...! நான் இங்கேயிருந்து ஒரு அடிகூட எடுத்து வைக்கவில்லை என்பதை அங்கிருந்தே எப்படித் தெரிந்து கொண்டீர்கள்...?"

"அது உங்களுக்குத் தேவையில்லாத விபரம். என் பேச்சைக் கேட்காதவர்களுக்கு எந்த உதவியையும் செய்யத் தயாராக இல்லை..."

"ஓ.கே... ஓ.கே... நான் இப்போ ஒரு ஒதுக்குப்புறமான இடத்துக்கு போய் தனியாய் உங்களோடு பேச வேண்டும்... அவ்வளவுதானே?"

"ஆமாம்...."

"லைனில் இருங்கள். நான் இப்போது அறையை விட்டு வெளியேற ஆரம்பித்துவிட்டேன்."

"தட்ஸ் குட்...! நீங்கள் எடுத்து வைக்கிற ஒவ்வொரு அடியும் எனக்குத் தெரியும். மறுபடியும் நீங்கள் என்னை ஏமாற்ற நினைத்தால் நான் உங்களை மன்னிக்கப்போவது இல்லை..."

"இதோ! கிளம்பிவிட்டேன்" செல்ஃபோனை காதில் ஒட்டவைத்து கொண்ட ஆச்சார்யா, கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்து சற்றுத் தொலைவில் தெரிந்த ஆபீஸர் டாய்லெட்டை நோக்கிப் போனார்.

★★★

பீட்டர், சிகரெட் பாக்கெட்டில் இருந்த கடைசி சிகரெட்டை உருவி உதட்டுக்குக் கொடுத்துவிட்டு, காலி பாக்கெட்டை ஜன்னலுக்கு வெளியே வீசி எறிந்தான். முரளியைப் பார்த்துக் கிண்டலாய் ஒரு சிரிப்பு சிரித்தான்.

"என்ன முரளி! இன்னும் பத்து நிமிஷத்துக்குள்ளே கஜா ஃபோன் பண்ணுவான் பார்ன்னு சொன்னே... இருபது நிமிஷம் ஓடிப்போச்சு. ஏர்போர்ட்டிலிருந்து ஒரு நியூஸையும் காணோமே...?"

"அதான் எனக்கும் புரியலை..."

"நான்தான் சொன்னேனே.. பைரவியை செலக்ட் பண்ணி மனித வெடிகுண்டா அனுப்பி வெச்சது மகாமகா தப்புன்னு...! அவ காரியத்தை முடிக்காமே ஏதாவது ஒரு சல்ஜாப்பைச் சொல்லிவிட்டு வந்து நிக்கப்போறா... பாரு"

பீட்டர் சொல்லிக் கொண்டிருக்கும் போதே ஃபோன் முணுமுணுத்தது.

"இதோ..! நியூஸ் வந்தாச்சு..." -முரளி பாய்ந்து ரிஸீவரை எடுத்தான்.

"ஹலோ..."

மறுமுனையில் கஜா பேசினான்.

"முரளி..."

"என்ன வாண வேடிக்கை நடந்ததா...?"

"இல்லை..."

"ஏன்..?"

"காரணம் தெரியலை... ப்ரஸ்மீட் முடிஞ்சு கிரிக்கெட் ப்ளேயர் எல்லாருமே வெளியே வந்துட்டாங்க..."

"பைரவி...?"

"அவ வெளியே வரலை. அவ மட்டும் இல்லை. மத்த லேடி ரிப்போர்ட்டர்ஸும் வெளியேவரலை. எனக்கு ஒரே டென்ஷனா இருக்கு. உள்ளே போய்ப் பார்க்கட்டுமா?"

"போய்ப்பாரு...! போலீஸ்கிட்ட மாட்டித் தொலைச்சுடாதே... பைரவியை பத்திரமா கூட்டிகிட்டு வரவேண்டியது உன்னோட பொறுப்பு... ப்ரஸ்மீட்ல என்னவோ நடந்திருக்கு... உடனடியா போய்ப்பாரு..."

"இதோ...! கிளம்பிட்டேன்!"

(தொடர்ந்து வரும்)

---

'சிறை', 'தர்மயுத்தம்' போன்ற வெற்றிப்படங்களை இயக்கியவர் ஆர். சி.சக்தி. அவரது சூடும் சுவையும் கலந்த அனுபவங்கள் இங்கு தொடராகின்றன.

# தர்ம யுத்தம் 15

நிஜ தரிசனம்



அது ஒரு புதிய குடியிருப்புப் பகுதி. 'மாநகராட்சியின் எல்லைக்கு உட்பட்டது' என்று சட்டபூர்வமான அறிவிப்பு இருந்தாலும், அந்தக் குடியிருப்பில் வாழ்ந்தவர்கள் மாநகராட்சியில் சொல்லப்பட்ட எந்த வசதிகளையும் அனுபவிக்காதவர்கள்.

குண்டும், குழியுமான ரோடு; மழைக் காலத்தில் படகுப் போக்குவரத்து இருந்தால் தான் வீட்டிற்குப் போக முடியுமென்ற சூழ்நிலை. மின்சார வயர்கள் அந்தரத்தில் தொங்கிக் கொண்டிருக்கும். சிறு காற்றடித்தாலோ, மழைத் தூறல் விழுந்தாலோ அந்தப் பகுதியில் மின்சாரம் காணாமல் போகும். டெலிஃபோனைப் பற்றி கேட்கவே வேண்டாம்.

ஆனால் அங்கு குடியிருப்பவர்கள் வகை, வகையாக வரி செலுத்துவதில் மட்டும் குறைவில்லை. இரண்டு மூன்று குடியிருப்புக்களைக் கொண்ட அந்தப் பகுதியில், ஒவ்வொரு குடியிருப்புக்கும் ஒரு நகர் என்று பெயர். ஒவ்வொரு நகருக்கும் ஒரு வெல்ஃபேர் அசோஸியேஷன் உண்டு.

அங்கு குடியிருப்பவர்களில் நூற்றுக்கு தொண்ணூற்றைந்து சதவிகிதம் பல்வேறு அலுவலகங்களில் பணிபுரிபவர்கள். காலையில் எழுந்து, சமையல் உட்பட சகலவேலைகளையும் முடித்துவிட்டு, ஆண்களும், பெண்களும் கூட்டமாக சுமார் ஒரு கிலோமீட்டருக்கு மேல் உள்ள மெயின் ரோட்டிற்குச் சென்று, பஸ் பிடித்து, வேலைக்குச் செல்வார்கள்.

அதோடு மாலைவரை அந்தக் குடியிருப்புப் பகுதிகள் அனைத்துமே 'அமைதிப் பூங்கா' என்ற வார்த்தைக்கு அர்த்தங்களாகிவிடும். மறுபடியும் மாலை, அலுவலகங்களுக்குச் சென்ற ஆண், பெண் இருபாலாரும் மெயின் ரோட்டில் இறங்கி, கூட்டங்கூட்டமாகப் பேசிக்கொண்டு வருவார்கள்.

வீட்டிற்கு வந்ததும் சற்று இளைப்பாறல். வீட்டுப்பிரச்சனைகள்; பக்கத்து வீட்டுக்காரர்களுடன் கருத்துப் பரிவர்த்தனை. இவையெல்லாம் இரவு 8 மணியிலிருந்து 9 மணிக்குள் முடிந்துவிடும். மறுபடியும் அந்தப் பகுதி, சென்னை நகரின் சந்தடிகளுக்கு சம்பந்தமே இல்லாத ஊமை பூமியாகிவிடும்.

## போட்டி

ஞாயிற்றுக்கிழமை மாத்திரம் விதிவிலக்கு. தெருக்களில் ஆங்காங்கே கொஞ்சம் கலகலப்பு; சலசலப்பு. வெல்ஃபேர் அசோஸியேஷன் மீட்டிங்குகள். "எங்கள் அசோஸியேஷன்தான் இந்தப் பகுதியின் முழுநலனுக்கும் பாடுபட்டு வருகிறது. மற்ற அசோஸியேஷன்கள் செயலற்றவை" என பரஸ்பரம் குற்றச்சாட்டுக்கள், நோட்டீஸ் விநியோகங்கள். இவைகளுக்கு மத்தியில் அவ்வப்போது திருட்டு பயங்கள். வீட்டிற்கு ஒருவர் ரோந்து சுற்றவேண்டும் என்ற கூட்டமைப்பு.

இதற்கிடையில்; அந்தப் பகுதிக்கு பஸ் சர்வீஸ் வேண்டும் என்று எல்லா அசோஸியேஷனுமே போக்குவரத்துக் கழகத்திற்கு கோரிக்கை விடுத்திருந்தன. அந்தக் கோரிக்கையிலும் ஒரு போட்டி இருந்தது, யாருடைய கோரிக்கை முதலில் போனது என்று.

அங்கு வாழ்ந்த மிகப் பெரும்பாலானவர்கள் படித்தவர்கள்; பதவியில் இருப்பவர்கள். தான் குடியிருக்கும் பகுதிக்கு அடிப்படை வசதிகளை பெற்றுத் தரவேண்டும் என்கிற ஆர்வத்தில் அசோஸியேஷன் அமைத்தவர்கள். அதற்காக உழைத்தவர்கள். அதில் எந்தவித சந்தேகமும் இல்லை.

ஆனால் அந்த உழைப்பிற்குரிய பெருமை யாருக்குப் போவது என்பதில் அவர்களுக்குள் ஒரு போட்டி.

எப்படியோ அந்தப் பகுதிக்கு பஸ் போக்குவரத்து ஒரு குறிப்பிட்ட தேதியில் தொடங்குவதாக அறிவிப்பு வந்தது. அந்த நாளில் தங்களது பெரு முயற்சியால்தான் இந்தப் பகுதிக்கு பஸ் வந்தது என்பதை நிலைநிறுத்திக் காட்ட வாழைமரத் தோரணங்களும், வரவேற்பு பேனர்களும், நன்றி அறிவிப்பு நோட்டீஸ்களுமாக ஒரு அசோஸியேஷன் அமர்க்களப்படுத்தி, முதல் பஸ்ஸை வரவேற்கக் காத்திருந்தது.

ஆனால் இன்னொரு அசோஸியேஷன் சத்தம் போடாமல், சந்தடியே இல்லாமல், சந்தனக் கும்பா, பன்னீர் செம்பு, டிரைவர், கண்டக்டர்களுக்கு மாலை, முதல் பஸ்ஸில் பயணம் செய்பவர்களுக்கு மிட்டாய் என்று எடுத்துக்கொண்டு, மெயின் ரோட்டிலிருந்தது பஸ் திரும்புகிற அந்தத் தெரு முனைக்கே சென்று, பஸ்ஸை வரவேற்று, சந்தனக் குங்குமம் வைத்து, வாழைமரம் வெட்டி, அந்தப் பஸ்ஸிலேயே பயணம் செய்து, பஸ்ஸைக் கூட்டிக்கொண்டு வந்தார்கள்.

## சண்டை

இங்கே வரவேற்கக் காத்திருந்த அசோஸியேஷன்காரர்களுக்கு கோபம், 'நம்மை முந்திக் கொண்டுவிட்டார்களே!' என்று பஸ் நின்றதும், "நாங்கள் இங்கே காத்திருக்கிறோம். நீங்கள் எப்படி அங்கே போகலாம், நாங்கள்தான் இவ்வளவு கஷ்டப்பட்டு பஸ்ஸை இந்தப் பகுதிக்குக் கொண்டுவந்தோம்."

"நாங்கள்தான் முதலில் மனு கொடுத்தோம். அதனால் முதலில் நாங்கள்தான் பஸ்ஸை வரவேற்றோம்."



உடனே யாருடைய மனு, எத்தனாம் தேதி போயிற்று என்று ஒரு ஆராய்ச்சி. யார் சொல்வது பொய், யார் சொல்வது மெய் என்று குற்றச்சாட்டுக்கள். வார்த்தைகள் தடித்து, ஒருவருக்கொருவர் மோதிக் கொள்கிற சூழ்நிலை. படித்தவர்களின் சண்டையைப் பார்த்து புதிதாக வந்த பஸ்ஸின் கண்டக்டரும், டிரைவரும் திகைத்துப் போய் நின்றனர்.

பிறகு அவர்களே தலையிட்டு சமரசம் செய்தனர். "இதுல என்ன சார் இருக்கு! நீங்க படிச்சவங்க, இதுக்குப் போயி சண்டை போட்டுக்கலாமா? நீங்க எல்லாருமே உங்க ஊருக்குப் பஸ்ஸு வரணும்னு ஆசைப்பட்டிருக்கீங்க. முயற்சி பண்ணியிருக்கீங்க. இன்னைக்கு பஸ் வந்தாச்சு. நீங்க எல்லாருமே எங்களை வரவேற்க வேணாமா?" என்று அதிகம் படிக்காத அந்த அப்பாவித் தொழிலாளர்கள் அப்போதைக்கு சமாதானப்படுத்தினாலும், அந்தப் புகைச்சல் மறைய வெகுநாள் ஆயிற்று.

(அனுபவங்கள் தொடரும்)

# வீரன் தான் பிரீன்

**12**

ஐரிஷ் விடுதலைப் போராட்டம் 750 வருடங்களுக்கு மேற்பட்ட நீண்ட நெடிய வரலாறு கொண்டது! 1900ம் ஆண்டு ஆரம்பம் வரை ஐரிஷ் மிதவாதத் தலைவர்கள் பிரித்தாளும் பிரித்தானியரால் ஏமாற்றப்பட்டனர்.

இந்நிலையில் 1913ம் ஆண்டு ஆயுதம் தாங்கிய ஐரிஷ் தொண்டர் படை உருவானது. இதுவே பிற்காலத்தில்–1919 ல் ஐரிஷ் குடியரசு இராணுவமானது. ஐரிஷ் தொண்டர் படையின் வீரன் தான் பிரீன். மனதை உலுக்கும் எழுச்சிமிகு உண்மை வரலாறு இது.

அவர்களுடைய பழைய நண்பர்களில் பலரும் அவர்களைக் கை விட்டுவிட்டனர். அவர்களைக் கண்டவுடன் நண்பர்கள் நடுங்கி விலகினார்கள். எனினும் ஒரு விஷயத்தை மட்டும் தொண்டர்கள் மறக்காது ஆறுதலடைந்து வந்தனர். காலம் மாறும், இன்று நாம் செய்ததைக் கண்டிப்பவர்கள் நாளை உண்மையை அறிந்து நம்மைப் போற்றிப் பின்பற்றுவார்கள்.

1893இல் கலகம் செய்தவர்களையும், 1867இல் புரட்சி செய்தவர்களையும், 1916இல் சுதந்திரப் போர் தொடுத்தவர்களையும் அக்காலத்து மக்கள் கண்டித்தார்கள்; பின்னால் அவர்களே ஆதரித்தார்கள். குடியரசை ஏற்படுத்த வேண்டும் என்று மக்கள் உறுதி கொண்டுள்ளார்கள்.

ஆனால் அதற்காக வேண்டிய காரியத்தை ஆரம்பித்தால் கண்டிக்கிறார்கள். பின்னால் எல்லோரும் நம்முடன் சேருவார்கள். அப்பொழுது நமது கொள்கை வெல்லக் காண்போம்! என்ற நம்பிக்கைதான் அவர்களுக்கு உற்ற துணையாயிருந்தது.

சில இடங்களிலே அவர்களுக்கு ஓர் இரவு தங்குவதற்குக்கூட இடம் கிடைக்கவில்லை. மிகக் குளிரான இரவுகளில், நாய் வந்து ஒதுங்கினாலும் இடம் கொடுக்கக் கூடியவர்கள், அவர்களைத் தாட்சண்யமின்றி வெளியேற்றி விட்டனர்.

ஒரு சமயம் அவர்கள் ஒரு குடியானவன் வீட்டில் தங்கியிருந்தார்கள். வெளியே யாரோ கதவைத் தட்டும் ஓசை கேட்டது. குடியானவன், "யாரது?" என்று கேட்டான். "பொலிஸ்!" என்று பதில் வந்தது. அவ்வார்த்தையைக் கேட்டவுடன் உள்ளேயிருந்த திருக்கூட்டத்தார் எழுந்து துப்பாக்கிகளைத் தூக்கிக் கொண்டு தயாராய் நின்றனர். கதவு திறக்கப்பட்டது.

அடுத்த வீட்டுக்காரன் ஒருவனே ஏதோ காரியமாக அங்கு வந்திருந்தான். அவன் விளையாட்டாகவே 'பொலிஸ்' என்று சொன்னானாம்! அவன் போனவுடன் தொண்டர்களுடைய கைகளில் துப்பாக்கிகளைக் கண்ட குடியானவன், "துப்பாக்கி ஆசாமிகளுக்கு இங்கு இடமில்லை. வெளியேறுங்கள்!" என்று கண்டிப்பாகச் சொல்லி விட்டான். அவர்களுக்கு வேறு வழி இருக்கவில்லை. வானமே கூரையாகப் பூமியைப் பாயாகக் கொண்டு, அவர்கள் வெளியேறினர்.

வழக்கம் போல் வழி நடையை மேற்கொண்டனர். கிழிந்த உடைகளும், கேடுற்ற பூட்ஸ்களும், அவர்களைக் குளிரில் வாட்டி வருத்தின. அவர்கள் எதிர்பார்த்துச் சென்ற நண்பர்களில் பலர் தங்கள் மாட்டுத்தொழுவங்களிலே கூடத் தங்க இடம் கொடுக்கவில்லை.

துன்பம், துணுக்கம், பசி, கால்வலி, விழிப்பு இவற்றைத் தவிர வேறொன்றும் அவர்களுக்குத் துணை நிற்கவில்லை. எவ்வளவு சுற்றியும் அவர்கள் ஸோலோஹட்பக்கிலிருந்து பத்து மைல் தூரத்திற்குள்ளாகவே நடந்து கொண்டிருந்தனர்.

டோனோ என்னும் கிராமத்தில் அவர்கள் தங்கியிருக்கையில் அவர்களுடைய பழைய நண்பன் ஸீமஸ் றொபின்ஸன் அவர்களுடன் வந்து சேர்ந்து கொண்டான்.

றொபின்ஸன் வெடி மருந்து வேட்டையில் அவர்களுடன் இருந்தவன். பல வருஷங்கள் பிரிந்த நண்பனை மீண்டும் கண்டபோது யாவரும் ஆனந்தம் கொண்டனர். பாடிரியான் என்னும் தேசபக்தரான வர்த்தகர் ஒருவர் அவர்களுக்கு மிகுந்த உதவி செய்தார்.

அக்காலத்தில் அவர்கள் மக்களைத் தங்கள் வசப்படுத்தித் தேசத்தில் பெரும் போராட்டத்தை ஆரம்பிப்பதற்குத் திட்டங்கள் போடுவதில் பொழுதைப் போக்கிவந்தனர். அவர்களுடைய தீவிரமான திட்டம் எதையும் டப்ளின் தலைநகரில் இருந்த தலைமைக் காரியாலயத்தார் ஏற்றுக்கொள்ள வழியில்லை. ஆயினும் தலைநகரில் இருந்த நண்பர்கள் சிலர் தான் பிரீன் கூட்டத்தாரை அமெரிக்காவுக்கு இரகசியமாக அனுப்பிவிட வேண்டும் என்று ஒரு கப்பலைத் தீர்மானித்து வைத்து அவர்களைத்தயாராய் இருக்கும்படி தகவலும் சொல்லி விட்டனர்.

தான் பிரீன் அதைக் கேட்டுக் கோபமடைந்தான். தன்னையும் நண்பர்களையும் தேசப்பிரஷ்டம் செய்வதற்கே இந்தச் சதி செய்யப்பட்டதாக எண்ணி, மனம் வாடினான். தலைமை நிலையத்தார் அவர்களுக்கு உதவி செய்து போரை மேலும் நடத்த வேண்டியிருக்க அதை விட்டொழித்து, அவர்களையும் நாடு கடத்தத் துணிந்து விட்டனரே என்று தொண்டர்கள் மனக் கசப்படைந்தனர். எது நேரினும் அயர்லாந்தை விட்டு வெளியேற முடியாது என்று அவர்கள் மறுத்து விட்டனர்.

டோனோவிலிருந்து 'அப்பர் சேர்ச்' வழியாக அவர்கள் நகருக்குச் சென்றனர். அங்கே தங்களுடைய யுத்த சபைக் கூட்டம் ஒன்றை நடத்தினர். தலைமைகள் அதிகாரிகள் உத்தரவு கொடுக்காவிட்டாலும், தாங்களாகவே வேலையை ஆரம்பித்துவிட முடிவு செய்தனர். திப்பெரரியில் தங்கியிருந்த இராணுவத்தார் உடனே அந்த எல்லையை விட்டு வெளியேறிவிட வேண்டுமென்றும், இல்லாவிடில் அவர்களுடைய உயிர் அவர்களுக்குச் சொந்தமில்லை என்றும் ஓர் எச்சரிக்கை விளம்பரத்தைத் தயார் செய்தார்கள்.

அந்த விளம்பரம் தேசம் முழுவதும் ஒட்டப்பட்டது. பத்திரிகைகள் அந்த விளம்பரத்தை வெளியிட்டு ஏளனம் செய்து எழுதின. அந்த எச்சரிக்கை கானல் நீராகக் கருதப்பட்டது. ஆனால், அது உண்மையாகி விட்டதாகப் பிற்காலச் சரித்திரத்திலே காணலாம்.

சில நாட்களுக்குப் பிறகு தொண்டர்கள் தலைமை அதிகாரிகளுடைய உத்தரவை மீறித் தலைநகரான டப்ளினுக்கே சென்று விடவேண்டும் என்று துணிந்து புறப்பட்டனர்.

றொபின்ஸனும், டிரீஸியும் முன்னதாகவே டப்ளினில் இருந்தனர். அங்கு மிகுந்த எச்சரிக்கையுடன் நடமாட வேண்டியிருந்தது.

ஏனெனில் பொலிஸ் கேசட்டில் ஸொலோ ஹட்பக் கொலைகளில் சம்பந்தப்பட்டவர் ஒவ்வொருவரைப் பற்றிய விவரமும், அங்க அடையாளங்கள் முதலியவையும் வாரந்தோறும் விளம்பரமாகி வந்தன. பிடித்துக்கொடுப்பவர்களுக்குப் பரிசும் கிடைக்கும்.

தான் பிரீன் தானும் விரைவாக டப்ளின் செல்ல வேண்டும் என்று துடித்துக் கொண்டிருந்தான். அங்கு சென்றால்தான் பல கஷ்டங்களும் நீங்குமென்று கருதினான்.

டிம் ரியான் என்னும் தோழன் ஒரு மோட்டார் காருடன் உதவிக்கு வந்து சேர்ந்தான். டாம்மி என்பவன் காரை ஓட்டுவதற்கு முன் வந்தான். தான் பிரீனும் ரியானும் காரின் பின் பக்கத்திலும், ஹோகனும் டாம்மியும் முன்பக்கத்திலும் அமர்ந்து கொண்டு, வட திசை நோக்கிப் புறப்பட்டனர். அவர்கள் லிமெரிக் நகருக்குச் செல்லும் வரை ஒரு விசேஷமும் ஏற்படவில்லை.

லிமெரிக் நகர வீதியில் நூற்றுக்கணக்கான இராணுவ வீரர்கள் மோட்டார் லொறிகளில் வந்து கொண்டிருந்தனர். அத்தனை பேர்களும் ஏதோ பெருங் கூட்டங்களைக் கைது செய்யப்போவதாகத் தோன்றியது.

தான் பிரீன் கூட்டத்தாரைப் பிடிக்கவே இராணுவத்தார் லொறிகளில் சுற்றிக் கொண்டிருந்தனர். தொண்டர்கள் எங்கோ பக்கத்தில் ஒளிந்து கொண்டிருந்ததாகக் கேள்விப்பட்டு அவர்களைப் பிடிப்பதற்காகவே ஏராளமான ஆயுதங்களையும், யந்திரத் துப்பாக்கிகளையும் எடுத்துக் கொண்டு வந்திருந்தனர்.

தான் பிரீனும் பெரிய அபாயம் ஏற்படப் போவதாக எண்ணினான். ஒரு சிப்பாய் சிறிது சந்தேகம் கொண்டுவிட்டாலும், அவனுடைய கூட்டத்தாருக்கே ஆபத்துத்தான்.

சிப்பாய்களில் பலர் அவர்களுடைய அங்க அடையாளங்களைப் பற்றி நன்றாகப் படித்து வைத்திருந்தனர். எப்படியாவது பதினாயிரம் பவுண் பரிசைப் பெற வேண்டும் என்பதும் பல சிப்பாய்களின் ஆசை. அத்துடன் மற்றக் குற்றவாளிகளைப் பார்க்கிலும், ஸோலோ ஹட்பக் ஆசாமிகளையே பிடிக்க வேண்டும் என்பது அவர்களுடைய நோக்கம்.

எல்லா சிப்பாய்களும் தான் பிரீனுடைய காருக்குள் உற்றுப் பார்த்துக் கொண்டே சென்றனர். தான் பிரீனும் தோழர்களும் கலக்கமடைந்தால், காரியம் கெட்டுவிடும். அவ்விடத்தை விட்டுத் திரும்பிச்சென்றாலும், சிப்பாய்களுக்கு வேறு சந்தேகம் வேண்டியதில்லை. எனவே தொண்டர்கள் ஒரு பாவமும் அறியாதவர் போல் அமைதியாக இருந்துவிட்டனர்.

இருபது லொறிகளைக் கடந்தாயிற்று.



பட்டிக்காட்டான் யானை பார்ப்பது போல் அவர்கள் பட்டாளத்தாரை வியப்போடு பார்த்துக் கொண்டே சென்றனர். அவர்களுடைய பார்வை, 'அளவற்ற கிருபையுடன் எங்களை ஆண்டடக்கும் துரைமார்களே எவ்வளவு அலங்காரமான உடைகளை அணிந்து செல்கிறீர்கள்!' என்று பரிகசிப்பதுபோல் தோன்றிற்று. எல்லா லொறிகளையும் தாண்டியாகிவிட்டது. ஒரு சிப்பாய் கூட அவர்களைச் சந்தேகிக்கவில்லை. ஆனால், வீதியில் ஒரு மூலையிலே சென்றவுடன், அங்கு காவலுக்காக நிறுத்தப்பட்டிருந்த சிப்பாய் "நிறுத்துங்கள் காரை!" என்று ஒரு போடு போட்டான்! கார் உடனே நிறுத்தப்பட்டது!

## தமிழில் ப.ராமஸ்வாமி

காருக்குள்ளே இருந்தவர்கள் நெருக்கடி ஏற்பட்டு விட்டதாய்க் கருதினார்கள். மற்ற சிப்பாய்கள் எல்லோரும் வேண்டுமென்றே தங்களை விட்டுவிட்டுப் பின்னால் தாங்கள் ஓடி விடாதபடி சூழ்ந்து கொள்ளவே சூழ்ச்சி செய்திருப்பதாக அவர்கள் எண்ணினார்கள். இருக்கும் நிலைமையில் என்ன செய்வது என்று யோசித்தனர்.

தான் பிரீன் துப்பாக்கியை எடுத்து வெளிக்குத் தெரியாமல் மறைவாகப் பிடித்துக் கொண்டான். முதல் குண்டை யார் தலையில் செலுத்த வேண்டும் என்று குறிபார்த்துக் கொண்டான். அவ்வேளையில் ஓர் அதிகாரி அங்கு விரைந்து ஓடி வந்தார்.

"கனவான்களே, உங்களைத் தாமதப்படுத்தியதற்காக மன்னிக்க வேண்டும்!" என்று அவர் கூறினார். 'மன்னிப்பு!' என்ற சொல்லைக் கேட்டவுடன், தான் பிரீன் திடுக்கிட்டுப் போனான். மறைவாகத் துப்பாக்கியைக் கீழே வைத்துவிட்டான். அந்த அதிகாரி காவற் சிப்பாய்களின் தலைவர். வீதியில் இரண்டு லொறிகள் உடைந்து கிடப்பதாயும், அவை குறுக்கே அடைத்துக் கொண்டிருந்ததால் அந்தப் பக்கமாய் கார் செல்ல முடியாதென்றும், எல்லோரும் கீழே இறங்கி நடந்து செல்வது நல்லது என்றும் அவர் கூறினார்.

இதற்குள் தான் பிரீன் மனம் அமைதி பெற்று விட்டது. அவன் மரியாதையாக அதிகாரியைப் பார்த்து, "ஐயா! மிக முக்கியமான வேலையின் நிமித்தம் நாங்கள் அவசரமாகப் போக வேண்டியிருக்கிறது. நீண்ட தூரம் காரில் வந்ததால் களைப்படைந்திருக்கிறோம். அத்துடன் என் காலில் வாதநோய். நான் எப்படி நடக்க முடியும்? நீரே யோசித்துச் சொல்லும்!" என்று கூறினான்.

அதிகாரி இரக்க மடைந்து நாலைந்து சிப்பாய்களை அழைத்து, துப்பாக்கிகளைக் கீழே வைத்து விட்டுத் தான் பிரீனுடைய காரைத் தள்ளிக் கொண்டு போய் மறுப்பக்கத்தில் விடும்படியாக உத்தரவிட்டார். அவர்கள் இருநூறு யார் தூரம் காரைத் தள்ளிக் கொண்டுபோய் விட்டனர்.

அந்தச் சிப்பாய்களுக்குத் தான் பிரீன் சொன்ன வந்தனங்களுக்கு அளவேயில்லை! சிப்பாய்களும் திரும்பத் திரும்ப 'சலாம்' செய்து விட்டு எங்கோ மறைந்திருப்பதாய்க் கேள்விப்பட்ட தான் பிரீன் கூட்டத்தாரைக் கண்டு பிடிக்க மற்றச் சிப்பாய்களோடு சென்றுவிட்டனர்!

சிப்பாய்கள் விடைபெற்றுச் சென்று மறுகணத்திலேயே தான் பிரீனுடைய கார் வேகமாய்ப் பறக்க ஆரம்பித்தது. சிறிது தூரம் சென்ற பின்பு தொண்டர்கள் ஒருவரையொருவர் தழுவிக் கொண்டு வயிறு வெடிக்கும்படி சிரித்தனர். அது வரை உள்ளத்தில் கட்டுப்பட்டிருந்த சந்தோஷம் வெள்ளப் பெருக்கெடுத்தது போலிருந்தது.

(பயணம் ...தொடரும்)

---

# அரங்கம் அந்தரங்கம்

**தமிழகத்தின் பிரபல நடிகர் ஒருவர் உட்பட சில முக்கிய பிரமுகர்கள் பற்றி கவியரசு கண்ணதாசன் எழுதி பெரும் சர்ச்சை கிளப்பிய தொடர்.**

**37**

## கவியரசு கண்ணதாசன்

இதில் வரும் நிகழ்ச்சிகள் பல கற்பனையே: ஆனால் இதில் காணப்படும் பாத்திரங்கள் யாவும் உண்மையே!

அவர்களது பெயர்களைக் கூடக் கொஞ்சம் தான் மாற்றிக் கொடுத்திருக்கிறேன். விவரம் தெரிந்தவர்கள் எந்தப் பாத்திரம், யார் என்பதைப் புரிந்து கொள்வார்கள்.

இவர்களைப் பற்றிய ஏராளமான சம்பவங்கள் எனது குறிப்பில் இருக்கின்றன. ஆனால் அவையெல்லாம் ஒரே சம்பவத்தின் பல பதிப்புகளே!

நான் எழுதியுள்ள நாவல்களில் உயிரோடு உலாவும் சிலரை முழுக்க முழுக்கப் பாத்திரங்களாக்கி எழுதிய நாவல் இது தான்.

இதில் நானும் ஒரு பாத்திரம். என்னோடு சம்பந்தப்படுத்தப் பட்டு வரும் கமலா, உண்மையில் வாழ்ந்த ஒருத்தி. ஆனால் இவளது உண்மைப் பெயர் வேறு.

–கண்ணதாசன்–

இந்திரகுமாரின் கூட இருந்த பெண்ணுக்கு ஆங்கிலம் தெரியாது. ஆகவே இந்திரகுமார் தென்னாட்டுப் பெண்களின் சவுந்தரியத்தை லலிதாவிடம் வருணிக்க ஆரம்பித்தார். லலிதாவுக்கு அது பெருமையாகவே இருந்தது.

"நான் தாய்லாந்துக்குப் போயிருக்கிறேன். அங்கே பதினைந்து வயது பெண்களுக்கே கூந்தல் ஆறடி நீளம் இருக்கும். அது இந்திய- சீன கலப்பு இரத்தம். ஆதலால் கூந்தல் கரு கருவென்றிருக்கும். உடம்பு பால்போலிருக்கும். சுத்தமாக இருப்பார்கள். இந்தோனேசியாவிலும் அப்படித்தான். ஆனால் எந்தப் பெண்ணும் தென்னாட்டுப் பெண்களுக்கு ஈடாகாது. உனக்கு இருக்கும் அழகுக்கு நீ இந்திப் படங்களில் நடித்தால் மளமளவென்று முன்னேறிவிடலாம். புகழ், பணம், சுகம் மூன்றும் கிடைக்கும் ஒரே உலகம் சினிமா உலகம்தான். இன்றையச் சினிமா நடிகைகள் நன்கு முன்னேறி வரும்போது, 'எவனோ ஒருவனைக் காதலித்தேன்' என்று சொல்லிக் கல்யாணமும் செய்துகொண்டு சினிமாவை விட்டு விலகுவதாக அறிவித்து விட்டு வெளி நாட்டுக்குச் சென்று ஒரு பிள்ளையைப் பெற்றுக் கொண்டு தாய் வேஷம் போடத் திரும்பி வருகிறார்கள்.

உனக்கோ இனி அந்த நிலை இல்லை. பேருக்கு ஒரு கல்யாணம் ஆகிவிட்டது என்கிறாய். இனி வாழ வேண்டியது தான் பாக்கி. உன் கணவனும் சினிமா நடிகையரின் கணவன்மாரைப் போலவே தயாள குணம் படைத்தவர் என்பது தெரிகிறது. ஆகவே நாளைக்கே நான் புதுப் படத்துக்கு ஏற்பாடு செய்கிறேன். நடிக்கிறாயா?" என்று கேட்டார் இந்திரகுமார்.

அதென்னவோ இந்தக் குடியில் ஒரு மகிமை. குடித்த உடனேயே வாக்குறுதிகளை அள்ளி வீசச் சொல்கிறது.

லலிதாவுக்கு இருந்த போதையோடு, இந்தப் புகழ்ச்சிப் போதையும் சேர்ந்து கொண்டது.

"எப்படியாவது ஏற்பாடு செய்யுங்கள்!" என்றாள் லலிதா.

"உன் கணவர் எங்கே? அவரிடம் சொல்கிறேன்!" என்றார் இந்திரகுமார்.

லலிதா குமாரசாமியைத் தேடினாள். அவன் எப்போதோ ராஜி வீட்டுக்குப் போய் விட்டான்.

இனி காலையில்தானே லலிதாவைச் சேலை கட்டி அழைத்துச் செல்ல வேண்டும் என்பதால், அவன் மெதுவாக நழுவி விடுவது வழக்கம்.



அதை ஒரு நாளும் லலிதா கவனித்ததில்லை. கவனிக்கும் நிலையிலும் இருந்ததில்லை.

நேரம் ஆக, ஆக கணவன் கூட வந்ததாகவே அவளுக்கு நினைவிருப்பதில்லை.

"பரவாயில்லை, வா! நாளைக்குச் சொல்லிக் கொள்வோம்!" என்றபடி அவளோடு ஆட ஆரம்பித்தார் இந்திரகுமார்.

புறங்கழுத்தில் இரண்டு கரங்களைச் சேர்த்தவாறு அவர் அணைத்துக்கொண்டு ஆடியதும், லலிதா தன்னை மறந்திருந்தாள்.

வழக்கம்போல் ஒரு பள்ளியறை ரசனை.

அவனது விசிட்டிங் கார்டைக் கையில் வாங்கிக் கொண்டாள் லலிதா.

இங்கே இவர்கள் சரசமாடிக் கொண்டிருந்தபோது, ராஜியின் வீட்டில் ஒரு தொழில் திட்டம் உருவாகிக் கொண்டிருந்தது.

என்ன இருந்தாலும் தொழில் அதிபரின் தம்பி அல்லவா? அவரும் ஒரு தொழில் செய்தாக வேண்டுமே!

ராஜியைக் கதாநாயகியாகப் போட்டு ஒரு இந்திப்படம் எடுப்பதென்றும், அதுவும் புராணப்படம் எடுப்பதென்றும் தீவிரமான ஆலோசனை நடந்தது.

"எந்தக் கதையை எடுக்கலாம்...?"

"திரௌபதி வஸ்திராபரணம்....!" என்றான் குமாரசாமி.

"எனக்கு அது பொருத்தமாக இருக்கும்!" என்றாள் ராஜி.

"பணத்தைப் பற்றி கலவை இல்லை. யாரை அர்ஜுனனாகப் போடலாம்...?" என்று கேட்டான் குமாரசாமி.

"இந்திரகுமார் தான் பிரமாதம்!" என்றாள் ராஜி.

"அவரை முன்பே உனக்குத் தெரியுமா...?" என்று கேட்டான் குமாரசாமி.

"ரொம்ப நல்லவர்" என்றாள் ராஜி.

"அப்படியென்றால் அவன் வேண்டாம்!" என்றான் குமாரசாமி.

"சீச்சீ! வேறு தொடர்பில்லை. அதற்குள் பொறாமையா...?" என்றாள் ராஜி.

"முடியாது. யாரும் உன்னைத் தொடுவதை நான் அனுமதிக்க மாட்டேன்!" என்றான் குமாரசாமி.

"தொடாமல் எப்படிச் சினிமாவில் நடிப்பது?" என்று கேட்டாள் அவள்.

ராஜி கெட்டிக்காரி. பக்குவம் பெற்றவள். மெது மெதுவாகத் தன் வலைக்குள் அவனைக் கொண்டு வந்து விட்டாள்.

தானும் பத்து லட்ச ரூபாய் போடுவதாக அவள் கூறினாள்.

"இந்திரகுமாரையே கேட்டு கதாசிரியர், டைரக்டர், இசையமைப்பாளர்களை முடிவு செய்கிறேன்!" என்றான் குமாரசாமி.

"குடி வேகத்தில் நாளை மறந்து விடாதீர்கள்!" என்றாள் அவள்.

"நாளை இது தான் வேலை!" என்றான் அவன்.

(அந்தரங்கம் வரும்)

ஞா வீட்டுக்கு வெளிக்கிடும் போது ஒவ்வொரு நாளும் இருட்டி விடுகிறதே! பாத்தி கட்டும் வேலைகளும் இன்னும் முடிந்தபாடில்லை! தனக்குத்தானே நினைத்துக் கொண்டு ராசாத்தி சுறுசுறுப்பானாள்.

மாலை வண்டுகளின் ரீங்காரம் தோட்டமெங்கும் கேட்டொலித்தன. பாவம் ராசாத்தியின் உயிர் நாடியே அந்தத் தோட்டம்தான். அவளின் அன்புக் கணவனோ அரச ஊழியராக இருந்தாலும், ஆறேழு ஜீவன்கள் உண்பதற்கு அவ்வருமானம் எந்த வகையிலும் போதவில்லை. அந்தமாதிரியான கஷ்டமான ஒரு காலகட்டத்தில்தான் அபூர்வபிறவியாய், தோன்றாத் துணையாக சின்னத்தம்பி இவர்களின் வீட்டுக்கு அநாதையாய் வந்து சேர்ந்தான்.

காலம் தூர இருந்துதான் வாழ்க்கைக்கு இங்கே கல் எறிகிறது. அதை சில அதிஷ்டக்காரர்கள் மாணிக்கக் கல்லாக மாற்றுகின்ற

# சின்னத்தம்பி



சூட்சுமத்தை சும்மாவே அறிந்து விடுகிறார்கள். மற்றும் பலரோ சோகத்தோடு கிடக்கும் வீதியோரக் கற்கள்தான்.

எத்தனை தரம் வாழ்க்கையை கூட்டிக் கழித்தாலும் ஏழைச் சமூகத்துக்கு அது கழித்தல் பின்னம்தான்.

அப்படிப்பட்ட வாழ்வுக்கு பழக்கப்பட்டிருந்த சின்னத்தம்பி, ராசாத்தி குடும்பத்தில் ஒன்றானான். ஓங்கி வளர்ந்திருந்த ஒரு காட்டுப் பிரதேசத்தை வெட்டி எரித்து செப்பனிட்டு தோட்டமாக்கிய தொழிலாளி அவன். ராசாத்தியின் முதலிரு பிள்ளைகளையும் படிக்க வைக்க அவன் பட்டபாடு இரவு பகல் பாராது அலைந்து திரியும் அலைச்சல்-அசதி வந்து தள்ளாத அன்புக்கான தன்மானம். அத்தனையுமே சின்னத்தம்பியின் சொந்தங்கள் ஆயின.

அப்படியே அந்த சின்னக் கிராமத்தின் சிந்தனைக்குள்ளே தன்னையும் கலந்து, இந்த ஓலைக் குடிசைகள் எல்லாம் கல்வீடுகளாயும், நல்ல வீடுகளாகவும் மாறும் நாள் வாராதோ, என அவன் பட்ட ஏக்கம். மிளகாய்த் தோட்டங்களாலும், கமத்து நெல்வயல்களினாலும் கிடைக்க முடியாத வெற்றியின் இலக்கை கல்வியில் மட்டுமே இருப்பதாய் உணர்ந்தவன் கல்வித்துறையில் ஒருநாள் தான்வாழ்ந்த கிராமம் முன்னேறி வந்து உச்சாணியில் உட்காரும் என நம்பியே இருந்தான்.

அவன் மனதின் மானசீகத் தன்மை, தயாளகுணம், தாங்கும் தோள் இப்படி அவனை வர்ணித்துக் கொண்டே போகலாம். ராசாத்தியின் பிள்ளைகள் ஓரளவு வளர்ந்து கொண்டு வரும்போது, சின்னத் தம்பி திருமண வயதை அடைந்திருந்தபோது அவனுக்குப் பிடித்த ஒருத்தியை திருமணம் செய்து கொண்டு தன் சொந்த ஊருக்குச் செல்லத் திட்டமிட்டான். அப்போதுதான் தன்னுடைய பழைய வாழ்வின் நிலமைகளை ஒருதரம் பின்னோக்கிப் பார்க்கின்ற நிலையில் மனசும் உருகச் செய்தது.

தான் கொட்டி எறிந்த வயல் நிலங்கள், வெட்டி விளைவித்த தோட்டக்காணிகள், படிப்பல் முன்னேறிக் கொண்டுவரும் ராசாத்தியின் பிள்ளைகள், தன்னை தத்தெடுத்து தாலாட்டிய உப்புமணல் கிராமம் இப்படி ஒவ்வொன்றாய் மனக் கண்முன் தோன்றி மறைந்தபோது, தன் அருமை மனைவி பிரயாணத்துக்கு தயாராகிக் கொண்டிருப்பது தெரிந்தது. எப்படிப்பட்ட பிரிவுத் துயரை தன்மனசில் சுமந்து உள்ளே. அழுது கொண்டிருந்தாலும், அநாதையாய் வாழ்ந்தவனை அதீதி தரத்துக்கு உயர்த்தி ஊரே ஒன்று திரண்டு பிரியாவிடை தரும்போது மனைவி என்னவோ தன் மாப்பிள்ளை முன்னர் மகாராஜா போலவே வாழ்ந்திருப்பார் என எண்ணி இருக்கலாம். அதுகூட அவனுக்குச் சிரிப்பாய்த்தான் இருந்தது.

ராசாத்தி குடும்பம் இன்று நல்ல நிலையில் முன்னேறி இருந்தாலும் சின்னத் தம்பியின் வாழ்க்கை பற்றியே எதுவித தகவலுமில்லாமலிருந்தது. அவன் பிரிந்து சென்று மூன்று வருடங்களாகிவிட்டன. வருமானம் இல்லாத வீட்டில் வறுமைக் கூனலை நிமிர்த்தியவன் அல்லவா அவனை? எவ்வாறு மறக்கமுடியும்?

அவன் செய்த தோட்டப் பூமி இன்று தரிசாகிப் போய், நெல்வயல்கள் உழவை எதிர்பார்த்து காத்திருப்பதும், ராசாத்தி குடும்பத்தில் ஏற்பட்ட இடைவெளியே நிரப்புவது எத்தனை மனத்துயர்! யுத்தத்தால் அள்ளிச் செல்லப்பட்ட மனிதப் பூக்களாய் எங்கேயாவது உயிரோடிருந்தால் அதுவே எங்கள் பிரார்த்தனையாக இருக்கும். ஆம் நீ எப்போதாவது ராசாத்தியின் குடும்பத்தைத் தேடிவரத்தான் போகிறாய்! ஊனப்படாமல் இருக்கும் உன் நினைவுகள்-இன்னும் ஓடித் திரிவதால்.

-உவைஸ்கனி-

## காலங்கள் கடந்தாலும் அந்த ஒரு கணம்.. என் வாழ்வில் இன்றுவரை ஆறாத ரணம்...!

"இவர்தான் நான்.." என நண்பன் ஜபீர் அவர் கையில் என்னை ஒப்படைத்தான். வானொலி நிலைய வரவேற்பறையில்.

'இப்போதைக்கு-
பஸ் வர வேண்டாம்.
அந்தப் 'பைப்'படியில்...
'சிலுக்கு கரமாய்'... ஒரு
சிங்களக் குளியல்..!'

"ஓ... நீங்க தானா அது..." என மகிழ்ந்தார் அவர். என் 'பாவளக் கவிதையைப் பாராட்டியபடி.

எனது கையை குலுக்கோ குலுக்குன்னு குலுக்கி... திடீரென ஞாபகம் வரச் சிரித்துச் சொன்னார் என தொரு கவிதை.

'புத்தம் புதிதாய்..
அழகாய்...
அதோ வந்து கொண்டிருக்கிறது
அந்தக்-
குப்பை வண்டி!'

"கிண்டல் கவிகளுக்குப் பலே கில்லாடி இவர்.." என்ற ஜபீர்,

"இவர்தான் அவர்..." என,

எனது கையில் அவரை ஒப்படைத்தான். நிலையக் கலையக ஒத்திகை அறைக்குள் நுழைந்தபடி, 'நான் காணும் உலகம்' தந்த 'சார்ள்ஸ்..' ஓ... நீங்கதானா அது..? என மகிழ்ந்தேன், நான்- 'பார்வையிழந்த' நண்பர் சார்ள்ஸைப் புகழ்ந்தபடி. கிராம சஞ்சிகை'யில் அவரும், நாளைய சந்ததி'யில் ஜபீரும் நானும் குரல்தர வரும் நாளெல்லாம்.. நீங்க... நாங்க... 'டா'வாகி... 'இல்லை மச்சான்...' அளவுக்கு மிகவும் நெருக்கமாகி... இரண்டு, மூன்று வருடங்கள் ஆயிற்று. நானும் சார்ள்ஸும் நட்பாகி.

பாமன்கடை 'ரூமி'ல் இருந்தான் சார்ள்ஸ். தன்னிரு சகோதரிகளுடன்...

"என்ன மச்சான் இது... கடைக்காரி பீட் ரூட்டைத் தந்தனுப்பியிருக்கிறாவோ...?" என்றேன். சார்ள்ஸ் வாங்கி வந்த 'உருளைக் கிழங்கை' உருட்டியபடி.

"பொய் சொல்லாதேடா 'உருளைக் கிழங்குதான்..." என்றான். சார்ள்ஸ் என் கையிலிருந்த கிழங்கைத் தட்டிப் பறித்துச் சற்றே சந்தேகத்துடன்...! அக்கா, தங்கை கை கொட்டிச் சிரித்து... "இல்லை அண்ணா அது 'பீட் ரூட் தான்..." என்றதும், மீண்டும் சந்தேகம் சார்ள்ஸுக்கு. "உண்மைதான்... அது... உருளைக் கிழங்குதான்" என்ற பிறகு தான் சிரித்தான் சார்ள்ஸ்..., "கண்ணு தெரியாத படுவா ராஸ்கல்..." என்றென்னைப் பொய்ச் சினக் கிள்ளலுடன் அதட்டி திட்டி.

அப்பாவித் தமிழன் அவன்.

இடைக்கிடை தொடர்ந்த இராணுவத் தொந்தரவால்..இடம்மாறி... இடம்மாறி சிறிது காலம்... காணாமல் போயிருந்தான் சார்ள்ஸ். என்... பாமன் கடைத் தெரு மறந்து...

அவன் ஒரு நல்ல கவிஞன். நல்ல ரசிகன். நல்ல மனிதன். உண்மைதான்!

...... ...... ...... ...... ...... ......

நான்கு வருடங்களுக்கு முன்னர்...-

ஒருநாள்..

வெள்ளவத்தை-காலி வீதியால் நடந்து வந்து கொண்டிருந்தேன், நான்!

எனக்கு முன்னால் தட்டுத் தடுமாறி நடந்து வந்து கொண்டிருந்தாய், நீ!

"டேய்... மச்சான்.. சார்ள்ஸ்..." என்று கூவ நினைத்து... ஊமையாகிப் போனேன், நான்!

உன்னைச் சுற்றி...
என்னைச் சுற்றி...
இராணுவம்!

# 'சார்ள்ஸ்.. என்னை மன்னித்து விடு!'



-கிண்ணியா அமீரலி-

மனித அபிமானமுள்ள மனிதருக்கே கவிதை வரும்... கவிதை வரம்.

"நண்பா... சார்ள்ஸ்!

நீ இப்பொழுது... எங்கேயடா இருக்கிறாய்..? தலைநகரத் தெருக்களிலெல்லாம் தடி கொண்டு தடவித் தடவி நடக்கும் 'கண்ணிழந்த' சில சகோதரர்களைக் காணும் போதெல்லாம்.. கவிஞனே எனக்கு உன் ஞாபகம் வருகிறதடா!

விபத்தொன்றில் ஒரு விழியிழந்த நம் 'ஸ்ரீதர்' கூட உன்னை அடிக்கடி விசாரித்து விம்முவான்!

மச்சான் சார்ள்ஸ்... என்னை மன்னித்து விடு."

'நமக்கேன் வம்பு....' எனப் பேசாமல் நடந்த என்னை...

நீ மன்னிப்பாயா சார்ள்ஸ்...!

காலங்கள் கடந்தாலும் அந்த ஒரு கணம்...

என் வாழ்வில் இன்றுவரை ஆறாத ரணம்...!

நண்பனே சார்ள்ஸ்..!
நன்றி கெட்டவர்கள் வரிசையில்...
என்னையும் சேர்த்து விடு!

–★–

(குறிப்பு:- கவிஞர். சார்ள்ஸ் ராஜ்குமாருக்கு இதை யாராவது படித்துக் காட்டவும்)

# மகனுக்கு....!

கடந்த ஐந்து தினங்களாக மன உணர்வுகள் கொதித்துக் குழம்பியது போல, செல்லையாவின் இந்த எழுபது வயது முதிர்வு அனுபவத்தில் என்றுமே குழம்பியது கிடையாது எனலாம்.

பொங்கும் உணர்வுகளுக்கு நிச்சயம் வடிகால் தேவை. தன்னையறியாமலே சாய்வு நாற்காலியை விட்டு வேகமாக எழும்பிக்கொண்ட செல்லையர், மேசையருகே போய் அமர்ந்தார்.

இலண்டனில் வசிக்கும் மகனுக்கு மடல் வரையத் தொடங்கினார்.

மகனுக்கு!

எல்லாம் வல்ல கோணேசப் பெருமான் அருளால் நலம். நீங்களும் நலமாகுக!

மகனே! நான் எழுதுவது கடிதமல்ல! என் உண[illegible]களின் வார்த்தைகள். முழுவதையு[illegible]ழுத்தில் வடித்து தோற்றுப் போய் விடுவேன். அதனால் சுருக்கமாக தருகிறேன்.

நானும் நீயும் ஏன்! உன் சந்ததியும் பிறந்த மண் இப்போது 'சமாதான நகர'மாக்கப்பட்டிருப்பதை நீ அறிந்து ஒரு விதத்தில் மகிழ்ந்திருப்பாய். ஆனால்,



கனகசபை தேவகடாட்சம்

'கரையான் புற்றெடுக்க பாம்பு குடிகொண்ட' கதை உனக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை.

எம் பரம்பரையினர் முதல் காலடி பதித்த இம்மண், மாற்றானால் அபிவிருத்தியைக் காட்டி, 'நிலப் பறிப்பு' என்னும் நிஜ நாடகம் அரங்கேறு வதை நீ அறிந்தாக வேண்டும்.

மகாவலி குடியேற்றத்தால் நாம் அகதி அந்தஸ்துக்கு உயர்த்தப்பட்டுள்ளோம். இந்நிலைகளுக்கெல்லாம் எம் தலைவர்கள் வழிகாட்டிகளாகவே இருட்பார்கள் என்பதில் ஐயமில்லை.

எனவே மகனே!

நீ என்னை எத்தின தரம் உன்னுடன் இலண்டனுக்கு வ[illegible] படி அழைப்பித்திருப்பாய். அந்நிலையில் அங்குவர இஷ்டமிருக்கவில்லை.

'என் வீட்டு கிணற்றுத் தண்ணீர் எங்கும் கிடைக்காது'

'சொந்த மண்ணிலே நான் சாக வேண்டும்' இப்படியாக எத்தினையோ சித்தாந்தங்களையும் தத்துவங்களையும் பேசியிருப்பேன். இப்போது அடியோடு மாறி விட்டேன்.

எனது சொந்த மண் இப்போ அந்நியவன் மண்ணாகிக் கொண்டிருக்கும்போது, இங்கு மரிப்பதைவிட இலண்டனில் மரிப்பதை பெருமையாகக் கொள்கிறேன்.

பூரண சம்மதத்துடன் தெரிவிக்கிறேன். ஆச்சரியப்படவேண்டாம். உடனடியாக என்னை அவ்விடம் எடுக்க முயலவும்.

இப்படிக்கு உன் அப்பா
க. செல்லையா
20.9.99

பெரியதொரு சுமை களன்றதுபோன்ற உணர்வுடன், கடிதத்தை கையில் எடுத்துக் கொண்டு, அந்த சுட்டெரிக்கும் வெயிலையும் பொருட்படுத்தாது தபாலிடுவதற்காக அந்த சந்தியை நோக்கி நடந்துகொண்டிருந்தார் செல்லையா.

சற்றும் அவர் எதிர்பார்க்கவில்லை. படையினர் அப்பகுதியை சுற்றிவளைத்து விட்டனர். அவ்விடத்தில் நின்ற அனைவரையும் அந்த வேகா வெயிலில் நிற்க வைத்தாயிற்று.

மகனுக்கு எழுதிய கடிதமே இப்போ செல்லையருக்கு குடையாக நின்றது.

'சமாதான நகரை' எண்ணியவாறு கூட்டத்தோடு கூட்டமாக நின்றிருந்த செல்லையருக்கு, தலை சுற்றிக்கொண்டு வருவது துல்லியமாக விளங்கியது. மெதுமெதுவாக கண்கள் சொருகிக் கொள்கின்றன. இதற்கு மேல் அவருக்கு எதுவுமே தெரியாது.

கையில் கடிதத்துடனும், நெஞ்சில் நிறைந்திருந்த உணர்வுகளுடனும் பாதை ஓரமாக சரிந்து கிடந்தார் சவமாக...!

# மருமகள்

ஞாயிற்றுக்கிழமை என்பதால் என்னமோ இன்று வழமையான நாட்களை விட சனக்கூட்டம் சந்தைக்குள் அதிகமாகவே திரண்டிருந்தது. வியாபாரிகள் தாங்கள் கொண்டுவந்த காய்கறிகள் முதல் கைவளையல்கள் வரை விற்பதில் மும்முரமாக போராடிக் கொண்டிருந்தார்கள்.

பழக்கடையிலும் சனத்துக்குக் குறைவில்லை. எட்டுப்பத்துப் பேர் மட்டில் குழுமியிருந்தனர். நல்ல தம்பி வாழைப்பழம் வாங்கும் நோக்கத்துடன் கடைக்குப் பக்கத்தில் போய் நின்றார். கோழிச் சூடான், கதலி, மொந்தன் என்று பல சாதிகள் குலை குலையாகத் தொங்கிக் கொண்டிருந்தன.

"ஐயா வாங்கோ... எல்லாம் நல்ல பழமுங்க. சாப்பிட்டிட்டு எடுங்கோ?" கடைக்காரன் தனக்குரிய தோரணையிலே கேட்டான்.

"கதலியில ஒரு கிலோ போடு... இந்தக் குலையில வெட்டுப்பா!"ஒரு சீப்பைக் காட்டி வெட்டச் சொன்னார். பழத்துக்கு இருபது ரூபாய் நோட்டை நீட்டிவிட்டு, கூடைக்குள் இருந்த கொஞ்ச இடத்தில் ஒருவாறு வாழைப்பழத்தைப் புகுத்திக் கொண்டார்.

அரிசி, கருவாடு, வாழைப்பழம், கரட், தக்காளி என்று கூடை நிறையச் சாமான்களுடன் இழுபட்டு ஒரு மாதிரியாக நடந்து கொண்டு வீடு சேர்ந்தார் மனுசன்.

"என்ன வெயில்... உயிர் போகுது...!" அலுத்துக் கொண்டபடி கூடையை வாசற் படிக்கட்டில் வைத்துக்கொண்டு, கிணற்றடிக்குப் போய் தண்ணீர் குடித்துவிட்டு வரும் போதுதான் கூடை சரிந்து கிடப்பதைக் கண்டார்.

"அடி.. அடி... இந்த நாய் கருவாட்டுல ஒண்ட எடுத்துட்டு ஓடுதே... ச...சனியன் புடிச்ச நாய்...!" மனுசனுக்கு இருந்த புழுக்கத்தில் நாயின் நடவடிக்கை இன்னும் எரிச்சலைக் கிண்டியது.

மிஞ்சிக் கிடந்த கருவாடுகளை கூடையில் பொறுக்கிப் போட்டுக் கொண்டு குசினிப் பக்கம் போகும் போது மருமகள் வந்தாள்.

"நாயிட்ட கருவாட்டக் குடுத்திட்டியளா?... ச... கொஞ்சம்கூட கவனமில்லாம? அதோட இன்னிக்கு நல்லா சுணங்கிட்டியள். பன்னிரண்டு மணிக்கே அவருக்கு சாப்பாடு அனுப்புறத மறந்திட்டியளா மாமா?" கூடையை வாங்கி அதிலிருந்த சாமான்களை



ஒவ்வொன்றாய்ப் பரிசோதித்துக் கொண்டு வார்த்தைளைக் கொட்டினாள்.

தனக்குக் கிடைத்த மருமகளின் குணம் எப்படிப்பட்டது என்பது அவருக்கு முன்னமே தெரியும். எல்லாவற்றையும் தன் மகனின் எதிர்காலத்திற்காக மனசுக்குள் போட்டு அடக்கிக் கொண்டு, ஓர் ஊழியனைப்போல வேலை செய்வது அவருக்குப் பழகிவிட்டது.

அவரது மகன்கூட அவளை எதிர்த்து இதுவரை ஒரு வார்த்தைகூடப் பேசியதில்லை. அவன் இளகிய சுபாவம் உடையவன். அப்படியிருக்கும்போது பாவம் நல்ல தம்பியால் என்ன செய்ய முடியும்?

தாம்பாளத்தை எடுத்துக் கொண்டு முற்றத்திலே போய், ஒரு பிடி வெற்றிலைக் கலவையை வாயில் திணித்துக் கொண்டு படுத்துக் கொண்டார். கண்ணயர்ந்துபோகும் போது மருமகள் எழுப்பினாள்.

"சோத்தப் போட்டுச் சாப்பிடுங்கோ...! இதுக்கு வேற கூப்பிட வேணும்!" சட்டென சொல்லிவிட்டுப் போனாள்.

சாப்பிட இலை போடும்போது மூன்று மணிக்கு மேலாகிவிட்டது. 'என் மனைவி இப்போதிருந்தால் இப்படியெல்லாம் விட்டிருப்பாளோ? பன்னிரண்டு மணிக்கே சாப்பாடு போட்டு படுக்கப் பாய்கூட விரிச்சுப் போடுவாளே!' கடந்த கால நினைவுகள் வந்து மீள்வதற்கிடையில் சட்டென கையிலிருந்த கோப்பை வேறு விழுந்து நொருங்கி விட்டது.

இரவு படுக்கப்போகும்போது தன் மகனுடன் மருமகள் பேசிக் கொண்டிருப்பது எதேச்சையாக நல்ல தம்பியின் காதுக்கு எட்டியது. "இங்க பாருங்க... உங்கட அப்பாவின்ட நடவடிக்க வரவரச் சரியில்ல.. காலையில கருவாட்ட நாயிட்ட குடுக்கார்... மதியம் என்னடான்னா கோப்பையை நொறுக்குகிறார்.. அவர முதியோர் இல்லத்துல விட்டமேண்டா மனசு நல்லா வருமெண்டு எனக்குப் படுதுங்க..."

தன்னை ஒரு மனநோயாளி என்று மருமகள் சொல்லிவிட்டது அவரால் பொறுக்க முடியவில்லை. தன் மருமகளின் நிலையை அவரால் புரிய முடியவில்லை. ஆனால் ஒன்று மட்டும் அவருக்குப் புரிந்தது.

'இனிமேல் இந்த வீட்டில் இருக்கக்கூடாது. விடிய முன்னமே எங்காவது போகவேணும்? உறுதியாக முடிவெடுத்துக் கொண்டதும் வளையிலிருந்த பல்லி சொல்லும் சத்தமும் அவரை ஆமோதித்தது.

அ.கோகுலதீபன்- நற்பிட்டிமுனை

# சிறைக்குள்ளே சுதந்திரமா?



"வானதி அந்த மஞ்சள் குருவியைப் பார்த்தாயா...? மினுங்கும் கண்கள், பரபரத்தசையும் அதன் சிறிய தலை, பட்டிறகு போர்த்திய உடல்... ஒரு நிலையில் நில்லாது எந்நேரமும் அசைந்தபடி பதற்றமுடன் தத்தித் தத்திக் கிளை மாறும் அந்தப் பறவையைக் கவனி...!"

"ம்... முதலில் உங்கள் கைகள் கண்டபடி அசைவதற்குத் தடைபோடுங்கள். அப்போதுதான் நானும் குருவியை இரசிக்கலாம்."

"நம்மை இன்பக் களிப்பில் ஆழ்த்துகின்ற குருவியின் அசைவுகளும் அழகும் உண்மையில் அதனுடைய மகிழ்ச்சியைத்தான் வெளிப்படுத்துகிறதா?"

"என்னைச் சற்று நிமிர்ந்து உட்கார விடுங்கள்.... உங்கள் ஆராய்ச்சியில் நானும் கலந்துகொள்கிறேன்!"

"நிச்சயமாக குருவியின் நோக்கம் நம்மை மகிழ்ச்சிப்படுத்துவது என்றிருக்க முடியாது. அது அச்சத்தில் பரபரப்பதை நாம் அழகாய்க் காண்கிறோமோ என்னவோ...!"

"வெளியே பறப்பது சுதந்திரம்தான்; மகிழ்ச்சிதான். ஆனால் அதில் பாதுகாப்பற்ற அச்சமும் இருக்கிறது. கூண்டினுள் அடைபட்டுக் கிடந்தால், பாதுகாப்பான நிம்மதி. அதுவும் சந்தோஷம்தான்!" என்று தன்னைச் சிறைப்படுத்தியிருந்த கரங்களை வருடிக் கொண்டே முனகினாள் வானதி.

குனிந்து அவள் முகத்தை நோக்கினான் அமுதன். திருட்டுக் கண்கள் இமைகளுக்குள் பதுங்கிக் கொண்டன. அவளை நெஞ்சோடு இறுக்கி, மூடிக்கிடந்த இமைகளை மெல்ல உதடுகளால் வருடினான்.

"ம்..."

அவன் செவிகளுக்கு மட்டும் கேட்டது அந்த உயிரின் முனகல். அவன் மூளைக்குள் அது பிரபஞ்சத்தின் புரள்வாக உருப்பெருத்து நிறைந்தது. நெருக்கி உட்புகுந்து, அருள்நிறையும் பெண்மையும் உருக்கி அவள் உயிரோடு உண்டான்.

வெய்யிலில் வைத்த வெண்ணெய் எனவும், உப்புக் குவியலில் வீழ்ந்த மழை எனவும் காதலின் நெருக்குதலில் கரைந்து போயினர். இரு உயிர்களும் ஒன்றாக உருகிக் கலந்தன.

பேச்சற்ற இன்பத்துப் பேரானந்தத்தில் சில கணங்கள்.

"சிறைக்குள்ளே சுதந்திரமா? கூண்டுக்குள்ளே குதூகலமா? என்ன கண்ணே சொல்கிறாய்?"

இதழ்களுக்குள் இதழ்களை அசைத்து வினவினான் அமுதன். இதயம் செவியாகியது.

ஈருடல் ஆகிவிடா நிலையில், அர்த்த நாரீஸ்வர முச்சொன்று பிறந்தது.

வானதி மெல்ல இதழசைத்தாள். அமுதனுக்குள் வயலின் சிணுங்கியது.

"மண்ணின் சிறையின்றி மரங்களின் சுதந்திரத்தில் மகிழ்ச்சியில்லை..."

"உன் கவிதை நன்றாயிருக்கிறது. கருத்துப் புரியவில்லை தேவி"

"கருத்தையே சொன்னேன். அது கவிதையில்லை..."

"வெறும் முனகலைக்கூட கவிதையாக்கி வெளியே அனுப்புகிற இயந்திரம் உன் இதழ்களுக்குள் இருக்கிறது... இருக்கட்டும், அந்த வரியைக் கொஞ்சம் விவரி!"

"ஒன்றும் தெரியாதவராக நடிக்க வேண்டாம். மண்ணின் சிறை மரத்திற்குத் தேவைதானே! தனக்குச் சுதந்திரம் வேண்டுமே என்பதற்காக மண்ணிலிருந்து விலகி வளர மரம் நினைக்கலாமா? அது சுதந்திரம் இல்லை அழிவு. மண்ணை வேர்களால் பற்றிப் பிடித்தபடி விண்ணை அளாவி, காற்றைத் துழாவி தலையை ஆட்டிச் சிலிர்த்துக் கொள்வதுதான் மரங்களுக்கும் பாதுகாப்பான சுதந்திரம் இல்லையா?... அதுதான் சொன்னேன், சிறைதான் மகிழ்ச்சி என்று...."

"அடடா, அதனால்தானா நெருங்கியிருந்தால் குளிர்ச்சியாகவும், நீங்கினால் நெருப்பாகவும் தகிக்கிறது இந்த உடல்? உன் கரங்களுக்குள் என்னைச் சிறையிடு கண்ணே... எப்போதும் நான் சுதந்திரக் காற்றைச் சுவாசிக்க வேண்டும்... அந்தத் தண்மைக்குள் என் நெருப்பைத் தணித்துக் கொள்ள வேண்டும்..."

நீரும் நீரும் கலந்து கொண்டது போல் பிரித்துப் பார்க்க முடியாமல் பிணைந்துகிடந்தனர் இருவரும்.

மயக்க நிலையிலிருந்து மீண்டபோது.... அப்போது பிறந்த குழந்தையின் அதிர்ச்சியாய் உலக நினைவு அவர்களைத் தாக்கியது.

விலகி, வீடு செல்லப் பரபரத்தாள் வானதி. அமுதன் விடுவதாயில்லை.

"நான் போகவேண்டும். அம்மா தேடுவார்கள்!"

"போகலாம். சற்று நில். என் உயிரைத் தந்துவிட்டுப்போ!"

"உயிரா?" திகைப்பால் விரிந்த கண்களுக்குள் அழகின் தொழிற்சாலை தெரிந்தது.

"ம்... அதோ அந்தக் கண்களால் குடித்த உயிரைத் திருப்பித் தந்துவிட்டுப் போ!"

"எப்படி?"

"இப்படி...!" என்று அருகே இழுத்தான். உயிரைத் தேடி நீண்ட தன் பயணத்தை அவள் உதட்டினில் ஆரம்பித்தான்.

மெல்ல விடுவித்துக் கொண்டவளை நெருங்கி "அழகே!" என்று தடுமாறினான்.

"படைவீரர்கள் தங்கள் ஆயுதங்களால் கொல்கிறார்கள். நீ உன் அழகால் என்னைக் கொல்கிறாய்..."

"நீங்கள் இப்படியே பேசிக் கொண்டிருந்தால், வீட்டிற்குப் போனதும் அம்மா என்னைக் கொன்றுவிடுவார்கள்."

"சூழலில் நம்மை அச்சுறுத்திய பொருட்களை எல்லாம் பெயரிட்டு, மொழிக்குள் வசப்படுத்தி நம் அறிவு எல்லைக்குள் கொண்டு வந்தோம். வானதி! நம் மொழிக்குள் வசமாகாதவை நம்மை அச்சுறுத்தியபடியே இருக்கும். உன் அழகும் அப்படித்தான். அதை வார்த்தைகளில் அடக்க முயல்வது அடிமட்டத்தை வைத்துக்கொண்டு காற்றை அளக்க முற்படுவது போல..."

"சரி, போதும் போதும், புலவரே! என்னைப் போகவிடுங்கள்!"

"பொறு கண்ணே, எனக்குள் காதல் தேனாறு பொங்குகிறது... அது வழிந்தோட அனுமதி... உயிரைக் கண்ணால் காண முடியாது என்று சொல்கிறார்களே... அவர்கள் பொய்யர்கள். தாங்கள் சொல்வது பொய் என்பதையும் தெரிந்துகொள்ளாத அப்பாவிப் பொய்யர்கள்...

இதோ! நான் என்றும் இழப்பதற்கு விரும்பாத என் அரிய உயிரை என் எதிரிலேயே காண்கிறேனே...! அது பேசக்கூடச் செய்கிறது. மெல்ல அசைகிறது. கொடிபோல் துவள்கிறது. மின்னலைத் தன் உருவாய் எழுதி, மேகத்தைத் தன் முதுகுவழியாய் பாதம்வரை இறக்கி, மலர்களில் வடிகட்டிய வாசத்தை சுவாசமாக்கி, இளமுறுவலால் ஏழையேன் பார்வைக்கு ஒளி தந்து... என்னை இயக்குகின்ற என் உயிரை இதோ முன்னால் காண்கிறேனே... உயிரைப் பார்க்க முடியாது என்று சொன்னவர்கள் பைத்தியக்காரர்கள்தான்... வேறென்ன?"

"சரி, அந்த உயிருக்குச் சின்ன விடுமுறை கொடுங்கள்- அது வீடு செல்ல வேண்டும். இல்லாவிட்டால், அது பிறகு எப்போதும் வெளிவர முடியாதபடி உள்ளே அடைத்துவிடுவார்கள்..."

"பொறு, வானதி, வீடு உன் விருப்பமில்லாச் சிறை. என் கரங்கள்தானே, நீ சுதந்திரமாய் மகிழ்கின்ற சிறை?"

"ஆனாலும், நான் போகவேண்டும். அமுதமேயானாலும் ஒருவருக்குப் பிடிக்கவில்லை என்றால் நாம் அதை வற்புறுத்தக்கூடாது. அதுதான் உண்மையான கண்ணியம் என்று அன்றொருநாள் சொன்னீர்களே.."

எழுதுவது

முழடில்யன்

"சொன்னேன்.. அதேபோல, முழுமதி வதன காதல் மங்கையை அரவணைத்து மகிழ்ந்திருப்பதும் அறத்தின் வழி நிற்பதுதான்... அதில் ஒன்றும் பலவந்தம் இல்லை!"

"அந்தப் பெண் விரும்பாதபோது கூடவா?"

"இது விருப்பமில்லாத் தயக்கமில்லை கண்ணே... அச்சத்தால் வந்த குழப்பம். அச்சம் விடு வானதி! நம் மகிழ்வைக் கத்தரிக்க அவசரம் காட்டாதே!"

"என் நிலை புரியாமல் பேசுகிறீர்களே... எனக்குச் சந்தோஷமில்லை என்று தெரிந்தும் என்னைத் தழுவிக் கொள்ள விரும்புகிறீர்களே... இது தகுமோ சொல்லுங்கள்...!"

# இலக்கிய நயம்

"தகும் கண்ணே, தகும். யாரும் குளத்திற்குச் சென்று நீரைப் பருகுவது, நீருக்கு அது இனிமை பயக்கும் செயலாக இருக்கும் என்பதால் அல்ல. அவரவர் தங்கள் தாக விடாயைத் தணித்துக் கொள்ளவே நீரைப் பருகுகிறார்கள்- நீருக்கு அது உவப்பாயிருக்கும் என்று கருதியல்ல.

அதுபோலத்தான் உன்னைத் தழுவுவது என் ஆசையின் பூர்த்தி கருதியே தவிர, அது உனக்கு உவப்பளிக்குமா இல்லையா என்று பார்த்தல்ல."

ஐந்து தலைப் பாம்பின் வாயிலகப்பட்டும், வெளிவந்த முழுமதி பொலிவுடன் திகழ்தல் போல, அந்த மதிபோன்ற முகத்தைக் கொண்ட காதலியரை அரவணைத்து மகிழ்வதும் அறத்தோடுநிற்பதேயாகும்... கபிலர் பெருமான் பாடிய குறிஞ்சிக் கலி சொல்வதைக் கேள்.

"வேட்டார்க்கு இனிதாயி னல்லது
நீர்க்கு இனிது என்று
உண்பவோ நீர் உண் பவர்;
செய்வது அறிகல்லேன் யாது செய்
வேன்கொலோ
ஐவாய் அரவின் இடைப்பட்டு நைவாரா
மையில் மதியின் விளங்கு முகத்தாரை
வெளவிக் கொளலும் அறன்எனக்
கண்டன்று...."

(கலி,62: 10-15)

**'தினமுரசு' ஆசிரியராகவிருந்து மறைந்த அமரர் அற்புதராஜா அவர்களுடன் தோழமை கொண்டு உறவாடிய 'எல்லாளன்' கனடாவிலிருந்து வெளிவரும் 'உதயன்' இதழில் எழுதிய கட்டுரையின் மறு பகுதி இது:**

# நண்பர்கள் நேசித்த நகைச்சுவை உணர்வாளர் அற்புதன்

★ புலிகளின் கட்டுப்பாட்டு பகுதியிலிருந்து பணத்தையும் சொத்தையும் புலிகளுக்கு கப்பமாக கொடுத்து, எதிலும் சேராமல் வெளிநாடு போவதற்கு அல்லது படிப்பதற்காக கொழும்பு வரும் பலரை இந்த சிங்கள அரசு 'புலிகள்' என கைது செய்து, சித்திரவதை செய்கின்றனர். இத்தகைய கஷ்டங்களை அனுபவித்த பல தமிழர்கள் கொழும்பில் இருந்து இவ்வாறு கஷ்டப்படுவதைவிட புலிகளுடன் சேருவது மேல் என நினைத்து புலிகளாக மாற்றப்பட்டுள்ளனர். இவ்வாறாக இந்த முட்டாள்தனமான அரசே புலிகளுக்கு ஆட்களை அனுப்பிக் கொண்டிருக்கின்ற வேலையைச் செய்கின்றது என்றார்.

★ இன்று பாராளுமன்றத்தில் தமிழ் கட்சிகளுக்கு ஏதாவது மரியாதை இருக்கின்றது என்றால் அது விடுதலைப் புலிகளின் தாக்குதல்களினால் ஏற்படுத்தப்பட்ட தொன்றாகும். இன்று விடுதலைப் புலிகள் இல்லையென்றால் சிங்களவர்கள் எம்மையெல்லாம் கணக்கிலெடுக்கமாட்டார்கள். அந்தளவிற்கு இனவெறி சிங்களவரிடம் வளர்த்து விடப்பட்டுள்ளது என்றார்.

★ 77 களில் பாராளுமன்றத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியினால் செய்யமுடிந்த வற்றினைத்தான் இன்று நாமும் மற்றக் கட்சிகளும் செய்கின்றோம். நாம் ஒன்றும் கூட்டணி செய்ததை விட பெரிதாக வெட்டிக் கிழிக்கவில்லை என்றார்.

★ "நான் குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு தடவை பாராளுமன்றம் போவது எனது எம்.பி. பதவியினை காப்பதற்காகத்தான். அதன் மூலம் கிடைக்கும் வருமானம் பின்னர் பென்சன் மூலமாக ஒரு வருமானத்தினை எனது குடும்பத்திற்காக ஏற்படுத்தத்தான்" எனவும், பத்திரிகை "எனது முழுநேர வேலை எனவும், இந்த எம்.பி. பதவியின் மூலம் தமிழ் மக்களுக்கு ஒன்றுமே பெரிதாக செய்ய முடியாது" என்றும் கூறினார்.

★ விடுதலைப் புலிகளின் பல புத்திசாலித் தனமற்ற நடவடிக்கைகள் எமது விடுதலைப் போராட்டத்திற்கு பல அரசியல் பின்னடைவுகளை ஏற்படுத்தியிருந்தாலும் பல இராணுவ ரீதியான வெற்றிகளை அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்துள்ளது என்றார்.

★ விடுதலைப் புலிகள் மாற்றுக் கருத்துள்ளவர்களை, தலைமையை விமர்சனம் செய்பவர்களை துரோகி எனவும், எதிரி எனவும் கூறி இயக்கத்தினுள்ளேயும் வெளியேயும் கொல்வதை நிறுத்தி, ஒரு ஜனநாயக முறைக்கு வருகிறார்களோ அன்றுதான் மீண்டும் பலரும் தம்மை விடுதலைப் போராட்டத்தில் இணைத்துக்கொள்வார்கள். இல்லையேல் பலரும் ஒரங்கட்டப்பட்டவர்களாக வெளிநாடுகளுக்கும், வெளிநாடுபோக முடியாதவர்கள் சிறீலங்கா அரசின் பாதுகாப்பினை நம்பியும் உள்ளவர்களாகவும் இருக்க வேண்டிய நிலை உள்ளது. இன்று விடுதலைப் புலிகளைத் தவிர வேறு இயக்கங்கள் போராட்டத்தில் பங்கேற்காததினால் சாதாரண தமிழ் மக்கள் போல் பலர் பார்வையாளர்களாக மாறியுள்ளார்கள் எனக் கூறினார்:

★ 'தினமுரசு' பத்திரிகை ஈ.பி.டி.பி. உறுப்பினர்களின் வருமானத்திற்காகவும், ஈ.பி.டி.பி. கட்சியின் முதலீட்டுடனும் ஆரம்பிக்கப்பட்டது எனவும், பத்திரிகையில் வரும் கருத்துக்கள் ஈ.பி.டி.பி.யின் கருத்துக்கள் அல்ல எனவும், இன்று அதிகம் விற்கப்படும் தமிழ் பத்திரிகையாக மாறியதற்கு தன்னுடன் பத்திரிகையில் வேலை செய்பவர்கள் பலர் முக்கிய காரணம் எனவும் கூறினார்.

★ கட்சியின் முக்கிய உறுப்பினராகவும், எம்.பி.யாகவும் இருந்துகொண்டு பத்திரிகையில் கட்சி பற்றிய விமர்சனங்கள் வெளிவருகின்றனவே எனக் கேட்டபோது, பத்திரிகை வேறு, கட்சி வேறு எனக் கூறினார். அதனை



நான் ஏற்றுக்கொள்ள முடியாது. அப்படி வேறுபட்ட கருத்துக்கள் இருக்க முடியாது எனக் கூறியபோது, அவரின் பதில்களை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. பத்திரிகையில் எழுதப்படும் விடயங்கள் சம்பந்தமாக கட்சிக்குள்ளும் மற்றைய ஆயுத குழுக்களுடனும் பல தடவை பிரச்சனைப்பட்டதாகவும் பல எதிரிகளை ஏற்படுத்தியுள்ளதாகவும் கூறினார்.

அவரின் உயிர் பாதுகாப்பு சம்பந்தமாக கேட்டபோது, "எப்போதும் எதுவும் நடக்கலாம்! யார் என்னைப் போடுவாங்களோ? தெரியாது முடிந்தவரை பாதுகாப்பாக இருக்கிறேன்." எனக்கூறிவிட்டு இங்கே கொழும்பில் எங்கே குண்டு வெடிக்கும், எங்கே சூடுவிழும், எங்கே மனிதக் குண்டு சிதறும் என்ற அச்சத்தோடுதான் எதிர்நீச்சல் போட்டபடி வாழ்வதாகக் கூறினார். உனக்கென்ன இப்படியான பிரச் சனைகள் இல்லாமல் வெளிநாட்டில் பாது காப்பாக பலர் வாழ்கின்றீர்கள். என கண்கள் கலங்கியபடி கூறினார். நான் வெளிநாட்டிற்கு வந்து ஒரம் கட்ட விரும்பவில்லை. பத்திரிகை மூலம் தமிழ் மக்களிற்கும் விடுதலைப் போராட்டத்திற்கும் என்னால் முடியுமானவரை பங்களிப்பேன் எனவும், "என்னுடன் பலகாலம் பழகியவர்களிலும் என்னைப் புரிந்துகொண்டவர்கள் ஒரு சிலர்தான். அதில் நீயும் ஒருவன்!" என்று மனம் விட்டுப் பேசினார்.

எல்லாளன்

# ஸ்போர்ட்ஸ்

## ட்ராவிட்டிற்கு வரவேற்பு



இந்திய கிரிக்கெட் வீரர் ராகுல் ட்ராவிட்டிற்கு எப்போதும் இல்லாத வரவேற்பு கொடுத்து வருகின்றனர் அவுஸ்திரேலிய பத்திரிகையாளர்கள்.

வெளிநாட்டு மைதானங்களில் சிறப்பாக விளையாடுபவர் என்ற பெருமையும் ராகுல் ட்ராவிட்டுக்கு உண்டு. எனவேதான் அவுஸ்திரேலிய பத்திரிகைகளில் இவர் தலைப்புச் செய்தியாக அடிபடுகிறார்.

புள்ளி விவரங்களும் இவருடைய திறமையை உறுதி செய்கின்றன. ட்ராவிட் தனது முதல் டெஸ்ட் போட்டியை இங்கிலாந்து அணிக்கெதிராக லோர்ட்ஸ் மைதானத்தில் ஆரம்பித்தார். அப்போட்டியில் 95 ஓட்டங்களையும் எடுத்தார்.

பின் மேற்கிந்தியத்தீவுகள், நியூஸிலாந்து நாடுகளுக்கு மேற்கொண்ட சுற்றுப்பயணத்தின்போது ட்ராவிட்டின் மட்டை வீச்சு தொடர்ந்தது. மேற்கிந்தியத்தீவுகளுக்கு எதிராக சராசரியாக 107.0, நியூஸிலாந்துக்கெதிராக 77.25 ஓட்டங்களை அவர் குவித்தார்.

கடந்த உலகக் கோப்பைப் போட்டியின் போது அதிக ஓட்டங்களை (8 போட்டிகளில் 461 ஓட்டங்கள்) எடுத்த பெருமையையும் பெற்றார்.அப்போட்டித் தொடரில் அவர் அடுத்தடுத்து இரண்டு சதங்களையும் அடித்தார்.

இதையெல்லாம் மனதில் கொண்டு, "ட்ராவிட்டிடம் எச்சரிக்கையாக இருங்கள்" என்று அவுஸ்திரேலிய அணி வீரர்களுக்கு அறிவுரை கூறியுள்ளார் அந்த அணியின் கேப்டன் ஸ்டீவ் வோவ்.

## முன்னாள் வீரர்கள் மறைவு

மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் சில்வஸ்டர் கிளார்க் தமது 44வது வயதில் இம்மாதம் 4ம் திகதி காலமாகிவிட்டார்.

மேற்கிந்தியத் தீவுகள் அணிக்காக 11 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ளார் கிளார்க்.

கடந்த 5 வாரங்களில் காலமாகிய 3வது முன்னாள் மேற்கிந்தியத்தீவு வீரர் கிளார்க் ஆவர். இதற்கு முன் கடந்த நவம்பர் மாதம் 4ம் திகதி முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் மல்கம் மார்ஷல் புற்றுநோயால் காலமானார்.

அதன்பின் டிசம்பர் 3ம் திகதி முன்னாள் தொடக்க ஆட்டக்காரர் கோன்ராட் ஹண்டே மாரடைப்பால் காலமானார்.

## பயிற்சியாளர் நீக்கப்பட்டார்

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் பயிற்சியாளர் பதவியில் இருந்து ரிச்சர்ட் பைபஸ் நீக்கப்பட்டுள்ளார்.

பாகிஸ்தான் அண்மையில் அவுஸ்திரேலிய சுற்றுப்பயணத்தின்போது மோசமான தோல்வியைக் கண்டது. இதையடுத்தே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

"ரிச்சர்ட்டுக்குப் பதிலாக நியமிக்கப்படவுள்ள புதிய பயிற்சியாளர் யார் என்பது விரைவில் அறிவிக்கப்படும்!" என்று பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபைச் செயலாளர் ஷஃப்கத் ராணா தெரிவித்துள்ளார்.

கடந்த உலகக் கோப்பைப் போட்டியின்போது பாகிஸ்தான் அணியின் உதவிப் பயிற்சியாளராக இருந்தவர் ரிச்சர்ட் பைபஸ். ஷார்ஜாவில் நடந்த போட்டித் தொடருக்குப் பின் அணியின் தலைமைப் பயிற்சியாளரானார் ரிச்சர்ட்.

பயிற்சியாளராகப் பணியாற்றுவதற்கு ரிச்சர்ட்டிற்கு வருடத்திற்கு சுமார் 75 இலட்சம் ரூபா ஊதியமாக வழங்கப்பட்டது.

## பிரசாத்திற்குப் பதிலாக மொங்கியா

அவுஸ்திரேலியாவுக்குச் சுற்றுப் பயணம் செய்துள்ள இந்தியா அங்கு நியூ சவுத் வேல்ஸ் அணியுடன் நடைபெற்ற போட்டியில் விளையாடியது. அப்போட்டியின்போது இந்திய அணியின் விக்கெட் கீப்பர் காயமடைந்துள்ளார்.

இதன் காரணமாக அவுஸ்திரேலியாவுடன் நடைபெறும் டெஸ்ட் போட்டிகளில் பிரசாத் விளையாட மாட்டார். தற்போது அணியில் இருந்து நீக்கப்பட்டுள்ள நயான்மொங்கியா இவருக்குப் பதிலாக அணியில் மறுபடி சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

# திருமறை தரும் பொது நெறி

## புதிய ஆகமம் 27

ஆண்டவருடைய திருக்குமாரராம் இயேசுபிரான், தனது வாழ்நாளில் நண்பர்கள் என்ற ரீதியில் எவரிடமேனும் பழகியவரல்ல. இருப்பினும் இலாசர் மீதும் அவருடைய சகோதரிகளான மரியா மற்றும் மார்தா ஆகியோரிடமும் அன்பு கொண்டவராகவிருந்தார்.

அவருடைய நண்பரான இலாசர் நோய் வாய்ப்பட்டு, உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கிறார் என்று கேள்விப்பட்டும், அவரைக் காண இயேசுபிரான் அங்கு உடன் செல்லவில்லை. மரியாவும் மார்தாவும், தங்கள் சகோதரனை இறப்பிலிருந்து காப்பாற்ற இயேசு

# இலாசர் மரித்தலும் உயிர்த்தெழுதலும்

பிரான் எப்படியும் வந்து சேர்ந்து விடுவார் என்று பெரிதும் நம்பிக் காத்திருந்தனர்.

இதற்கிடையில் இலாசர் இறந்து விட்டார். அவர் இறந்ததும் அயலவர்களும் சுற்றத்தாரும் இலாசருக்கான இறுதிச் சடங்குகளைச் செய்து முடித்து உடலை ஒரு கல்லறையில் வைத்து, கல்லால் மூடிவிட்டனர்.

இலாசரின் உடல் கல்லறையில் வைக்கப்பட்டு நான்கு நாட்களின் பின்னரே தோமா என்பரையும் மற்றுமொரு சீடரையும் தன்னுடன் வருமாறு அழைத்துக் கொண்டு பெத்தானியா



வுக்கு வந்து சேர்ந்தார்.

### மார்தாவின் வேண்டுகோள்

மறைந்த இலாசருக்கு இறுதி மரியாதையைச் செலுத்த வந்தவர்களில் பலர் அப்போதும் இலாசர் வீட்டில் இருந்தனர். அவர்களுடன் மரியாவும் மார்தாவும் இருந்தனர். இயேசு பிரான் பெத்தானியாவுக்கு வந்திருக்கிறார் என்பதைக் கேள்வியுற்ற அயலவர்கள் பலர் அங்கு வந்து பெருவாரியாகக் கூடிவிட்டனர்.

இயேசுபிரானைக் கண்டதும் மார்தா முன் சென்று, "ஆண்டவரே நீங்கள் இங்கிருந்திருந்தால் எமது சகோதரர் மாண்டிருக்க மாட்டார். இருப்பினும் இப்போது கூட ஆண்டவரிடம் நீங்கள் வேண்டுதல் விடுத்தால் அவர் எதுவித மறுப்பும் தெரிவிக்காமல், தங்களுடைய கோரிக்கையை ஏற்றருளுவார் என்பதை நான் நிச்சயமாக அறிவேன்!" என்று உறுதியாகக் கூறினார்.

மார்தா தன்மீது வைத்துள்ள மாசற்ற நம்பிக்கையை மெச்சிய இயேசுபிரான், "உன்னுடைய சகோதரன் நிச்சயம் உயிர்த்தெழுவான்!" என்றார்.

இவ்வாறு இயேசுபிரான் கூறியதும் மார்தா, "இறுதி நாள் உயிர்த்தெழுதலின் போது, அவனும் உயிர்த் தெழுவான் என்பது எனக்குத் தெரியும்!" என்றார். அப்போது இயேசு பிரான்,

"உயிர்த்தெழச் செய்பவனும் வாழ்வு தருபவனும் நானே. என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார். உயிரோடு இருக்கும்போது என்னிடம் நம்பிக்கை கொள்ளும் எவரும் என்றுமே சாகமாட்டார். இதை நீ நம்புகிறாயா?"

இயேசுபிரானின் இவ்வினாவுக்கு விடையளித்த மார்தா, "ஆம் ஆண்டவரே! நீரே மேசியா! இறை மகனும் நீரே! உலகிற்கு வர விருந்தவரும் நீரே என்பதனை நான் நம்புகிறேன்!" என்றார். இதனைத் தொடர்ந்து தனது சகோதரியான மரியாவிடம் சென்று, போதகர் இதோ வந்துவிட்டார் என்று கூறினார். மரியாவும் எழுந்து இயேசு பெருமானிடம் சென்றார்.

இயேசு பிரான் அதுவரை ஊருக்குள் வராமல் வெளியிலேயே நின்றிருந்தார். அங்கு வந்த மரியா இயேசு பிரானின் காலில் விழுந்து அழுதார். இதனைக் கண்ட இவர்களுடைய உறவினர்களும் ஏனையோரும் அழலானார்கள். இக்காட்சி இயேசு பிரானையும் கண்ணீர் சிந்த வைத்தது. இலாசர் மீது இயேசு பிரான் இத்தனை சிறந்த நட்புக் கொண்டிருக்கிறாரே என்று பலர் கூறிக் கொண்டனர். வேறு சிலர், "எத்தனையோ அற்புதங்களைப் புரியும் இவருக்கு இவருடைய நண்பரைச் சாகாமல் காத்துக் கொள்ள முடியவில்லையே" என்று கேலியான வார்த்தைகளையும் கூறத் தலைப்பட்டனர்.

அனைவரும் புடை சூழ்ந்து வர, இயேசு பிரான் இலாசர் அடக்கம் செய்யப்பட்டிருந்த கல்லறையின் அருகில் வந்தார். அது ஒரு மலைக்குகை. அதனை மூடியிருந்த பெரிய கல்லை அகற்றுமாறு சுற்றி நின்றவர்களிடம்

## இராஜகுமாரன்

இயேசு பிரான் கேட்டார்.

### கடவுளின் மாட்சிமை

மார்தா இயேசு பிரானை அணுகி, "ஆண்டவரே! அடக்கம் செய்து நான்கு நாட்களாகி விட்டனவே. துர்நாற்றம் வீசுமே?" என்றார். முறுவல் பூத்தவராக, இயேசு பிரான், "நீ நம்பினால் கடவுளின் மாட்சிமையைக் காண்பாய் என நான் உன்னிடம் கூறவில்லையா?" என்று கேட்டார்.

குகையை மூடியிருந்த கல்லை பலர் ஒன்று சேர்ந்து அகற்றினார்கள். அதே வாயிலில் நின்ற இயேசுபிரான் ஆகாய வெளியைப் பார்த்த வண்ணம்,

"தந்தையே, நீர் என் வேண்டுதலுக்குச் செவிசாய்த்ததற்காக உமக்கு நன்றி கூறுகிறேன். நீர் எப்போதும் என் வேண்டுதலுக்குச் செவிசாய்க்கிறீர் என்பது எனக்குத் தெரியும். எனினும் நீரே என்னை அனுப்பினீர் என்று சூழ்ந்து நிற்கும் இக்கூட்டம் நம்பும் பொருட்டே இப்படிச் சொன்னேன்!" என்று கூறினார்.

இவ்வாறு கூறியபின், "இலாசரே வெளியோவா!" என்றார். இலாசர் உயிருடன் வெளியே வந்தார். அங்கு கூடியிருந்த அனைவரும் வியப்பு மேலீட்டால் இறைவனைப் பிரார்த்தித்தனர். இலாசருடைய கால்களும் கைகளும் துணிகளால் கட்டப்பட்டிருந்தன. கட்டுகளை அவிழ்த்து விடும்படி இயேசு பிரான் கூறினார். சிலர் கட்டுகளை அவிழ்த்து விட்டனர். இரு சகோதரிகளும் இயேசுபெருமானுக்கு தங்கள் நன்றியைத் தெரிவித்தனர். அவர்களுடன் இலாசரும் சேர்ந்து மூவருமாக இயேசு பெருமானின் காலில் வீழ்ந்து வணங்கினார்கள்.

இலாசர் இறந்து நல்லடக்கம் செய்யப்பட்டு நான்கு நாட்களின் பின்னர் உயிருடன் எழுந்ததை அனேகமானோர் தங்கள் கண்களால் பார்த்துக் கொண்டனர். அவர்களில் பெரும்பாலானோர், இயேசுபிரான் நிச்சயமாக இறைவனின் மகன் என்பதை ஒப்புக் கொண்டனர். அவரே மறைகளில் கூறப்பட்ட மேசியா என்பதையும் ஏற்றுக் கொண்டனர். இத்தகவல் காட்டுத் தீபோல் எங்கும் பரவியது.

### குருக்களின் கலக்கம்

இச் செய்தி தலைமைக் குருக்களுக்கும் பரிசேயருக்கும் எட்டியது. இதனைக் கேள்விப்பட்டதும் அவர்களுடைய கலக்கம் பன்மடங்காகியது. இப்படியே விட்டுவைத்தால், மக்களிடம் தங்களுடைய தகிடுத்தங்கள் செல்லுபடியாகாது என்று கருதலாயினர். தலைமைச் சங்க உறுப்பினர்களை உடனடியாகக் கூட்டினார்கள். "இந்த மனிதர் அரும் அடையாளங்களைக் காட்டி எல்லோரையும் தன்பால் இழுக்கிறார். இப்படியே விட்டு விட்டால் எல்லோருமே அவர் மீதே நம்பிக்கை வைத்து விடுவார்கள்!" என்று பலரும் கூறினார்கள்.

அப்போது கயபா என்பவரே தலைமைக் குருவாக இருந்தார். எப்படியாவது இயேசு பிரானை ஒழித்துக் கட்டிவிட வேண்டும் என்று துடித்தார். "இந்த ரீதியில் போனால் நமது இனம் முழுவதுமே அழிந்து போய்விடும். ஆகவே எம்மவர்கள் முழுமையாக மாண்டு போவதைவிட ஒருவர் மட்டுமே இறந்து எமது சமுதாயத்தைக் காப்பாற்ற வழிவகை தேடலாமே!" என்ற கருத்தை முன்வைத்தார்.

தலைமைக் குருவின் வார்த்தையைத் தெய்வ வாக்காகக் கருதிய அனைவரும் அவருடைய கூற்றை மனப்பூர்வமாக ஆதரித்தனர்.

இறைவனுடைய மகிமையையும் இறைவன் தன்னிடம் தந்துள்ள மகத்தான பணியினையும் வெளிப்படுத்தவே, இயேசுபிரான் இலாசர் இறப்பதற்கு முன்னதாகவே வந்து அவரைக் காப்பாற்ற வழி தேடாமல், அவர் இறக்கும்வரை காத்திருந்துவிட்டு பலரையும் சாட்சியாக வைத்து, இலாசரை உயிர்த்தெழ வைத்த அற்புதத்தை நிகழ்த்தினார். இதனால் இயேசு பிரான்மீது நம்பிக்கை வைப்பவர்களின் தொகை வெகுவாக அதிகரித்தது. இதனால் மறைநூலாசிரியர்களும் குருக்களும் பாசேயரும் ஒன்று கூடி இயேசுபெருமானை ஒழித்துக்கட்டத் திட்டமிட்டனர்.

இவர்களுடைய திட்டங்களை இயேசு பிரான் நன்றாகப் புரிந்து கொண்டார். இதன் காரணமாக இக் கொடியவர்களின் கைகளில் உடனடியாகச் சிக்காமல் மறைவாகத் திரிய வேண்டியதாயிற்று. பாலைவனப் பிரதேசத்திலுள்ள எப்ராயிம் என்ற இடத்தில் தமது சீடருடன் சென்ற இயேசுபிரான் சிலகாலம் தங்கியிருந்தார்.

பெத்தானியாவை விட்டு இயேசுபிரான் புறப்படுவதற்கு முன்னதாக இயேசுபிரானுக்கு, உயிர்த்தெழுந்த இலாசரும் அவர் சகோதரிகளும் விருந்துபசாரம் ஒன்று அளித்தனர். இவ்விருந்தின்போது இலாசரும் இயேசு பிரானிடமிருந்து உணவு உட்கொண்டார். மார்தா உணவு பரிமாற, மரியா விலைமதிப்பற்ற தைலத்தை இயேசுவின் கால்களில் பூசி, தனது கூந்தலால் தடவினார். இலாமிச்சை வேரிலிருந்து பெறப்பட்ட அத்தைலம் அப்போது மிகவும் பெறுமதிமிக்க பொருளாகக் கருதப்பட்டது. இச்செயலைக் கண்ட, பண ஆசை பிடித்த யூதாசு இஸ்காரியோத்து மனம் வெதும்பினான். இவனே, இயேசுபெருமானைக் காட்டிக் கொடுப்பதற்காக தலைமைக் குருக்களிடம் இலஞ்சமாகப் பணம் பெற்றவன். "இத்தனை விலையுயர்ந்த தைலத்தை விற்று, அதனால் பெறப்படும் பணத்தை ஏழைகளுக்குக் கொடுக்கலாமே!" என்றான் அவன்.

இயேசு பெருமான் யூதாசை அர்த்த புஷ்டியுடன் பார்த்தவராக," மரியாவைத் தடுக்காதீர்கள். என் அடக்க நாளை முன்னிட்டு அவர் இதைச் செய்யட்டும்!" என்றார். தொடர்ந்து "ஏழைகள் உங்களோடு என்றும் இருக்கிறார்கள்; ஆனால் நான் உங்களோடு என்றும் இருக்கப்போவதில்லை," என்றார்.

(தொடர்ந்து வரும்)

---

**திருமறை [பு.ஆ] 24 விடை:** கல்லால் எறிந்து கொல்ல வேண்டும்

**பரிசு பெறுவோர்:**

1. டி. கமலேஸ்வரி, இந்துகலை, நமுனுகல.
2. எஸ். ரூபி, தாழ்வுபாடு, மன்னார்
3. டி. அன்னலிங்கம், இல 11, பெயார் ஃபீல்ட், லிந்துல.
4. மு.மு. தாஸீன், இல.176 நெய்னார் வீதி, அக்கரைப்பற்று-3.
5. செலஸ்ரீன் டொறிஸ்புஸ்பமலர், இல.7, லூசியா வீதி, கொட்டாஞ்சேனை, கொ-13.

**திருமறை [பு.ஆ] 27 வினா :-** இயேசுபிரானை ஒழித்துக்கட்ட துடித்த பெத்தானியா நாட்டுத் தலைமைக் குருவாக இருந்தவர் யார்?

டிசம்பர் 18 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டியமுகவரி:

**திருமறை-பு.ஆ.27-தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.**









அதிஷ்டத்தை அள்ளித் தரும் அதிசயக் கற்கள்

Accredited by National Gem & Jewellery Authority

அருள் ARUL JEWELLERS
3, Sea Street, Colombo - 11. Tel: 436331
Branch: 105, Galle Road, Colombo 6. Tel: 580230

## சூரன்



→ பிரிட்டனைச் சேர்ந்த ஜோன் இவான்ஸ் என்ற மனிதரை உறுதியான கழுத்தை உடையவர் என்று வர்ணிக்கிறார்கள். ஏனென்றால், தலையின்மீது எத்தகைய சுமையை ஏற்றினாலும் அதன் பாரத்தைத் தக்கபடி தாங்குவது கழுத்தே. படத்தில் புதிய மொடல் 'நிசான்' காரைத் தன் சிரசின்மீது வைத்து நிதானமிழக்காமல் நிமிர்த்து நிற்கிறார். சிங்கப்பூரிலுள்ள கண்காட்சி நிலையம் ஒன்றில் இக்காரைத் தலையில் வைத்து நிற்கும் சம்பவம் இடம் பெற்றது.

அதிக எடையுள்ள காரைத் தன் சிரசின்மீது வைத்து 12 நொடிகள் தளப்பமில்லாமல் நின்று காட்டிய உலக சாதனையாளர் ஜோன் இவான்ஸ் என்னும் பெயரை வாங்கி கின்னஸ் பதிவில் இடம் பிடித்தவர் 1997 நவம்பரில் பிரிட்டனிலுள்ளடேர்பி நகரில் இடம் பெற்ற காட்சியின் போது ஜோன் இவான்ஸ் 158.76 கிலோ (350 இறாத்தல்) எடையுள்ள 'செவ்லே' மோட்டார் காரை தன் சிரசின்மீது வைத்து நின்று சாதனை நிலை நாட்டினார்.

இந்தச் சூரன் தன்னுடைய சாதனையை முறியடிப்பவர் எவரானாலும் அவருக்கு, 2 ஆயிரம் பவுன் நம் நாட்டு மதிப்பில் கிட்டத்தட்ட 2 இலட்சத்து 30 ஆயிரம் சன்மானம் வழங்குவதாக அறிவித்துள்ளார்.



ஸ்ரீ கல்யாணி ஜுவல்லர்ஸ்
SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
5 செட்டியார் தெரு, கொழும்பு 11
323657

## மவுசு



→ சிறுவர்களுக்கான விளையாட்டுப் பொம்மைகள் பெரியவர்களையும் ஈர்ப்பதுண்டு. 40 ஆண்டுகளுக்கு முன்னர் மாட்டெல் பொம்மை நிறுவனம் 'பார்பிபொம்மை' என்ற பெயரில் அழகழகான பெண் பொம்மைகளை உற்பத்தி செய்து விற்பனைக்கு விட்டது. இதற்கு உலகெங்கும் பலத்த மவுசு ஏற்பட்டது.

இதனைத் தொடர்ந்து உலகின் பல நாட்டு அழகிகளைப் போன்ற பொம்மைகளை வடிவமைத்து சந்தையில் விட்டது. ஆனால் இப்பொம்மைகள் மீது குழந்தைகளைவிட வயது வந்தவர்களே ஆசை வைக்க ஆரம்பித்துவிட்டனர்.

உடை அலங்காரம் தலை அலங்காரம் அணி மணிகள் ஆகியனவும் இப்பொம்மைகளின் அழகினை மென்மேலும் அதிகரிக்கவே செய்தன.

இதே ஆண்டு மார்ச் மாதம் பார்பி பொம்மை உருவாக்கத் தொடங்கிய 40வது ஆண்டு கொண்டாடப்பட்டதை நினைவுறுத்தும் வகையில் உருவாக்கப்பட்ட பொம்மையே படத்தில் காணப்படுகிறது.

↗ இதன் பெறுமதி என்ன தெரியுமா? 50 ஆயிரம் பவுன் எமது நாட்டுப் பெறுமதி 5 கோடி 75 இலட்சம் ரூபா. 160 வைரக்கற்கள் இதில் பதிக்கப்பட்டுள்ளன. இலண்டனிலுள்ள டேவிட் மொறிஸ் நகைக் கடையில் இப் பொம்மை காட்சிக்கு வைக்கப் பட்டுள்ளது.

## தந்திரசாலி



← ஓணான் குடும்பத்தைச் சேர்ந்ததுதான் பச்சோந்தி. எதிரிகளிடமிருந்து தப்பிக் கொள்வதற்காகத் தன் நிறத்தை மாற்றிக்கொள்ளும் தந்திரசாலி. பச்சோந்திகள் ஓரிடத்தில் இருக்கும்போது எதிரிகளால் ஆபத்து ஏற்படப்போவதாக அறிந்தால் உடனே அந்த இடத்தின் நிறத்திற்கேற்ப தனது உடலின் நிறத்தையும் மாற்றிக் கொள்ளும்.

சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு தமது குணங்களை மாற்றிக்கொள்பவர்களை இந்தப்பச்சோந்திக்கு ஒப்பிடுவார்கள். அதிலும் அரசியல்வாதிகளைத்தான் அதிகமாக இதனுடன் ஒப்பிட்டுப் பேசுவார்கள்.

நமநாட்டில் இது பரவலாகக் காணப்படுகிறது. இருப்பினும் பலரது கண்களில் தென்படுவதில்லை.

கிளிநொச்சியைச் சேர்ந்த ஜெம்ஸ் என்பவரின் கண்களில் இந்தப் பச்சோந்தி தென்பட, அதை மற்றவர்களும் பார்த்து இரசிக்க, படம்பிடித்து எமக்கு அனுப்பியுள்ளார்.

## செல்(ல)வந்தப் பூனை



→ படத்தில் காணப்படுவது வேங்கைப் புலியுமல்ல, சிறுத்தைப் புலியுமல்ல பூனைதான்.

ஆனால் விலையுயர்ந்த பூனை. இதன் பெறுமதி என்ன தெரியுமா? 24 ஆயிரம் டொலர். (சுமார் 16 இலட்சத்து 80 ஆயிரம் ரூபா)

தேகமெல்லாம் கரும்புள்ளிகள் கொண்ட இப் பூனை பல்லினக் கலப்பால் இவ்வுருவ அமைப்புடன் கூடியதாக உருவாக்கப்பட்டது.

ஹொலிவூட் திரைக்கதை அமைப்பாளரான போல் கசே, காட்டுப் பூனையைப் போன்ற உருவ அமைப்புடன் கூடிய ஒரு வீட்டுப் பூனையை உருவாக்க பெரு முயற்சி எடுத்தார்.

பல்லாண்டு காலமாக பல்லினப் பூனைகளை கலப்புப் புணர்ச்சிக்குட் படுத்தி வெற்றியும் கண்டார்.

இன்று இந்த ரகத்தில் 200க்கும் குறைவான பூனைகளே உலகில் உள்ளனவாம்.

'கலிஃபோர்னியா ஸ்பாங்லெட்' என்ற இப்பூனையை ஒரு ஹொலிவூட் (பெயரைக் குறிப்பிட விரும்பாத) நடிகை 24 ஆயிரம் டொலர் (சுமார் 16 இலட்சத்து 80 ஆயிரம் ரூபா) கொடுத்து வாங்கியுள்ளார்.

## 3வது பிறந்தநாள் வாழ்த்து



கைதடி வடக்கு நீர்வேலியைச் சேர்ந்த சிவயோகநாதன்-சூரோசினி தம்பதியினரின் செல்வப் புதல்வி சௌமியா தனது மூன்றாவது பிறந்தநாளை சுவிற்ஸர்லாந்து சூரிச் மாநிலத்திலுள்ள தனது இல்லத்தில் 26.11.99 அன்று வெகு விமரிசையாகக் கொண்டாடினார்.

இவரை அன்பு அப்பா, அன்பு அம்மா, கைதடி வடக்கு அப்பம்மா, மாமா, மாமி, மச்சான்மார், நீர்வேலி அம்மப்பா, அம்மம்மா, மச்சான், மாமா, சித்தி, சித்தப்பா, அண்ணாமார், பெரியப்பா, பெரியம்மா, மற்றும், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் சௌமியாக்குட்டியை பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் நீடூழி வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

**

தகவல்: அப்பா,
ச. சிவயோகநாதன்,
சூரிச் (சுவிஸ்)

செல்வி சௌமியா – சிவயோகநாதன் 26.11.1999